# அத்வைதமும் சாயி அவதாரமும்

(50 வருட சாயியின் சேவைக்கு நினைவாக வெளியிடப்பட்ட நூல்)



சத்யசாயி வேதாந்த தபோவன வெளியீடு

9; கண்டி வீதி, நாவற்குழி; கைதடி.

— 1990 —

இ. கநாதன் அழகம்மை.



# அத்வைதமும் சாயி அவதாரமும்

— திரு. சு. சிவதாஸ் —

சத்யசாயி வேதாந்த தபோவனம்
9, கண்டி வீதி, நாவற்குழி, கைதடி.
யாழ்ப்பாணம் — இலங்கை.

1990

சத்யசாயி வேதாந்த தபோவனத் தலைவர்
சாயி சரவணமுத்து
அவர்களால் பிரசுரிக்கப்பட்டது

முதல் பதிப்பு 1000 பிரதிகள்

உரிமை பிரசுரிப்பாளருடையது.

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.



# சத்ய சாயி அவதாரத்தின் 50 வருட சேவை இந்த ஆண்டு பூர்த்தியாகிறது

**1940-ம்** ஆண்டு, அக்டோபர் மாதம் 20ஆம் திகதி, பகவான் தனது பெற்றோருக்கும் உறவினருக்கும் தான் சாயிபாபாவின் (சேரடி சாயியின்) அவதாரம் என்பதை நிரூபித்து, தன்னை பக்தர்கள் அழைப்பதாகக் கூறி, உலக மக்கள் பால், தனது தர்மஸ்தாபன சேவையை ஆரம்பித்தார்.

60வது பிறந்த தினத்தில், அத்வைத மதத்தைப்பற்றி, இனி, தாம் விளக்கப்போ தாக அறிவித்து, அதன் பிரகாரம், இதுவரை எந்த ஆச்சாரியரும் கூறியிருக்காத அளவு தெளிவாக அத்வைதத்தை, அவர் நமக்குப் போதித்து வருகிறார்.

சுவாமியினுடைய பேச்சுக்கள் துவக்கத்திலிருந்தே, அத்வைத சம்பந்தமுடையதாகவே இருந்திருக்கிறது. எனினும், தமது ஞான போதனையின் இறுதி இலட்சியமாக, தற்சமயம் அத்வைத போதனையில், முழுமையும் இறங்கியுள்ளார்.

50 வருட அவதாரப் பணியை நினைவுகூருமுகமாக, இந்நூலை ''அத்வைதமும் சாயி அவதாரமும்'' என்ற பெயரில் ஆக்கி, பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா சுவாமிகளது திருவடித் தாமரையில் சமர்ப்பணம் செய்கிறோம்.

சாயி சரவணமுத்து
தலைவர்
சத்தியசாயி வேதாந்த தபோவனம்

# திருவடி சரணம்

(நூலாசிரியர் இயற்றியது)

கல்லுடன் கிடக்கும் நாயேனைக் கனிவுதந் தாளாக்கி
பல்லுயிரும் பரமே யென்றுணரும் பான்மை தந்து
எல்லோரும் தொழு தெழுகின்ற திருவடி காட்டினாய்
நல்லாளாய் நாயும் வாழ்ந் துன்னடி சேரக் காட்டுவாயே

சிவமேயாய் சிவத்திற்குமேலானவொரு விளக்கமுமாய்
அவமேநாட் போக்காமே யருள்புரிந் தணைத்தனையே
சவமே யாயினும் சாயியல்லால் பிறிதிலை யெனுஞானந்
தவமே வாழத் தந்தனையே தயாபர சங்கரதாணுவே

அச்சமெனும் மறியாமை நீக்குமத்வைத ஞான மளித்து
பிச்சை புகுகின்ற புன்மைநீக்கி மானமெனும் மேன்மைதந்து
இச்சையுடன் வாழ்தலொளித் தியல்புடன் வாழவைத்தாய்
நச்சையுமிழ்கின்ற நாகமணி நாதனே சாயி ஈசனே

வேதமாய் வேதத்தினுட்பொருளாய் தேவார திருவாசகமாய்
ஆதியாய் நடுவாய் அந்தமாயடியேனுள்ளூறு சோதியாய்
பாதியாய் மதிசூடிய பரமனாய் பக்த ரட்சகனாய்
நீதியாய் நிர்மலமாய் நிராகாரமாய் நின்றவனே சரணம்

சாயிசரவணனளித்த சாயியமுதமுண்டுனைத் தேடினேன் நீ
நாயினும் கடையனுக் கறிவில்நின் றளித்த அறிவினையு முண்டேன்
நோயிலும் பிணியிலும் நின்னையேகண்டு தொழு மறிவினை யடைந்தேன்
தாயினும் பெரிய தத்துவா தரணியில் நின்னைக் கண்டனனே

அத்வைதமும்சாயி அவதாரமுமென்றவொரு நூலினைச் சமைத்தேன்
நித்தியவஸ்துவானினைப் புரியுமோர் வாய்ப்பினைப் பிறர்க்களித்தேன்
சத்தியமாய் சகலதுமாய் சந்ததமும் சித்தமுத்துருவாய்
சித்தியுமாய்ச் சிறந்தனையே நினக்கு நினது நூல் சமர்ப்பணம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்—இந்துநாகரிகத்துறை

சிரேஷ்ட விரிவுரையாளர்

திருமதி. மல்லிகா இராஜரத்தினம் B. A. (Hons), M. A.

அவர்கள் வழங்கிய

# வியாக்கியானச் சிறப்புரை

'அத்வைதமும் சாயி அவதாரமும்' என்ற இந்நூல் அத்வைத தத்துவத்தின் ஆழமான விளக்கத்தினைக் கொண்டுள்ளதோடு சாயி அவதாரத்தின் பெருமை பற்றியும் அவர் போதிக்கும் அத்வைத மதம் பற்றியும் ஆராய்கின்றது. ஆத்மீகம் வாழ்வியலுக்கு அடிப்படையாக அமையவேண்டும். மெய்யியலை – அடிப்படை உண்மைகளை வெறும் கோட்பாடாக மாற்றாது வாழ்வியல்த் தத்துவமாக விளக்குவதில் அத்வைதம் முதலிடம் பெறுகின்றது. கலியுகத்திற்கு அத்வைத பாவனை பொருத்தமாக உள்ளது என சாயி பகவான் கூறியதாகவும், அவர் தனது அறுபதாவது பிறந்த நாளிலிருந்து அத்வைத மதத்தைப் போதித்து வருவதாகவும் நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். அத்வைத உண்மைகளை அறிந்து ஆத்மீக வாழ்வில் உயருவதற்கு இந்நூல் பெரும் துணைசெய்யும்.

அத்வைதத்தின் படி ஆத்மீக வாழ்வு என்பது தன்னையுணரும், அதாவது தன்னைச் சரியாக விளங்கிக் கொள்ளும் நிலையாகும். 'தான், என்பது குறுகிய தனிநிலை அகம் அல்ல. அவ்வாறு எண்ணுதலே அறியாமைக்கும் துன்பத்திற்கும் காரணமாகின்றது. ஈசாவாஸ்ய உபநிடதம் 6 வது சுலோகம் 'எவனொருவன் தன்னில் எல்லா உயிர்களையும், எல்லா உயிகர்ளில் தன்னையும் காண்கிறானோ அவன் பிரம்ம ஞானி, அவன் யாரையும் வெறுப்பதில்லை' எனக் கூறுகின்றது. இவ்வாறு 'தான்' என்பது எல்லாவற்றோடும் இணைந்திருக்கும் தன்மையை உணர்ந்து கொள்வதே 'தன்னையுணர்தல்' அல்லது வாழ்வின் மிக உயர்ந்த குறிக்கோளாகக் காட்டப்படுகின்றது. எனவே தன்னையுணர்தல் என்பது குறுகிய தனிமனித விடுதலையல்ல. அது தன்னைப் பிரபஞ்ச ஆத்மாவோடு இணைத்துக் காணும் பேருணர்வாகும். இத்தகைய அத்வைத அனுபவத்தில் தனிநிலை அகம் அற்று பொதுநிலை அகம்- பொதுநான் செயற்படுவதனால் மனிதன் மிகவுயர்ந்த அகக்கலாச்சாரத்தினை அடைகிறான். இத்தகைய மனஞானிக்கு அறம் இயல்பாகவே அமைகின்றது. இதனால் சமூக தர்மத்தின் படி வாழ முடிகின்றது. எனவே அத்வைதம் மிகவுயர்ந்த வாழ்வியல்த் தேவையாக உள்ளது. நூலாசிரியர் மிக ஆழமான ஆத்மீக அனுபவத்தினை ஏற்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் இத்தகைய ஆத்மீக அனுபவத்தினை அடைய வேண்டும். 'தன்னைத்துறந்து, உலகம் முழுவதினையும் தனதாக்கிக் கொள்ளுதல்' என்ற மகாகவி காளிதாசனின் வாசகங்களுக்கிணங்க தன்னலங்களை துறந்து உலகப் பொது நன்மைக்காக வாழும் ஆளுமை பெறுதலே ஆத்மீகம். அதாவது சமூக வாழ்வில் தனக்காக மட்டும் வாழாது எல்லோருக்குமாக வாழும் பொதுத்தனத்தினை, அகத்தனத்தினை அடையும் நிலையே ஆத்மீகம். இந்த அகப்புரட்சிக்கு, விழிப்பிற்கு இந்திய மரபு பக்தி, ஞானம் கர்மம், ராஜயோகம் எனப் பல யோகமரபுகளை மார்க்கமாகக் காட்டுகிறது. பக்தியில் தன்னை முழுவதுமாக இழக்கும் ஒருவன் தன்னைக் கடந்து தன்னை அதுவாக உணர்கின்றான். 'தத்துவமசி' என்ற அத்வைத அனுபவநிலையை அடைகிறான். அதேபோல் ஞானயோகத்தினூடாக, பற்றற்ற கர்மத்தினூடாக ராஜயோகத்தினூடாக ஒருவன் இத்தகைய ஆத்மீக நிலையை அடைய முடியும். இதனை பகவத்கீதை மிக ஆழமாக எடுத்துக் காட்டுவது போல் நூலாசிரியரும் மிக ஆழமாக, தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். இந்த ஒவ்வொரு மார்க்கமும் மனிதனை ஆத்மீகப்படுத்தும் நோக்கமுடையவை, இறுதியில் ஒரே தளத்தினை யடைவதனால் ஒன்றோடு ஒன்று மிக நெருங்கிய தொடர்புடையனவாகும்.

அத்வைத அனுபவம் எல்லாவகையான கோட்பாட்டு ரீதியிலான எல்லைகளையும் கடக்கின்றது. சைவசித்தாந்தம், வேதாந்தம், கடவுட் கோட்பாடு, கடவுள் இன்மைக்கோட்பாடு, மெய்ஞானம், விஞ்ஞானம், என்ற எல்லா எல்லைகளுக்குமப்பால் அத்வைத அனுபவம் ஓர் அடிப்படை ஒருமை நிலையைக் காட்டுகின்றது எவன் அத்வைத ஒருமைநிலை அடைகின்றானோ அவன் குறுகிய கோட்பாட்டு இன, மத, தேசிய எல்லைகளால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. அவன் பிரபஞ்சப் பொதுமனிதனாகி காலதேச வர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்ட பொது உண்மைக்காக வாழுகின்றான்.

தனது இயக்கத்தின் அடிப்படையும், பிரபஞ்சப் பொது இயக்கத்தின் அடிப்படையும் ஒன்று என இனம் காணும் மெய்யுணர்வு—மெய்ஞானம் காலப்போக்கில் விஞ்ஞானத்திலும் வெளிப்படுத்தப்படலாம். பௌதீக—அதீத உண்மைகள் விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்ட ஆனால் விஞ்ஞானத்தோடு இணைந்த உண்மைகளேயாகும். நூலாசிரியர் திரு. க. சிவதாஸ் அவர்கள் ஆழமான தன் விஞ்ஞான அறிவினூடாகவும், ஆத்மீக ஞானத்தினூடாகவும் அத்வைத அனுபவத்தை விளக்கியுள்ளார். சாயி அவதாரத்தின் சிறப்பம்சங்களையும் இணைத்துள்ள இந்நூல் நம்மக்கள் மத்தியில் ஆழ்ந்த ஆத்மீகச் சூழலை ஏற்படுத்த கூடிய வெற்றிகரமான நூலாக அமையுமென்பதில் ஐயமில்லை.

# அகவுரை

பெரிய அலையொன்று (tidal wave) கடலில் அடிக்கிற பொழுது, கரையில் இருந்த குட்டைகள், சிறுகுளங்கள் எல்லாம் நிரம்பிவிடும். இதேபோன்று, பெரிய அவதாரங்கள் வருகிறபோது, பல மக்கள் ஆத்மீகத்தைப் பெற்றுவிடுகிறார்கள் என்று சுவாமி விவேகானந்தா மொழிந்ததற்கிணங்க, பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா அவர்களின் அவதரிப்பால், பலபல ஜீவர்கள் ஆத்மபலனை அடையவே செய்கிறார்கள். இந்த முறையில், தற்சமயம் யாழ்ப்பாணத்து நாவற்குழியில் சத்யசாயி வேதாந்த தபோவனத்தை நிறுவியிருக்கும், அருளாளர், சாயி சரவணமுத்து, பகவான் சத்யசாயியின் அருள்பெற்றவர். இவரது சரிதமும் சில படைப்புகளும், 'கலியுகத்தில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் சிவ, சிவசக்தி, சக்தி அவதாரங்கள்' என்ற நூலில் தரப்பட்டுள்ளன.

ஆத்மீகத்தை தேடி, நாடியலையும் பக்தர்களுக்கு, இதுகாறும், மறுபிறப்புகள் பற்றியதும், ஜீவாத்மா, பரமாத்மா என்னும் பதங்களின் பொருள் பற்றியதும், அவதாரங்கள் யார்? அவர்களால் பயனுண்டா? என்னும் அறிவு பற்றியதுமான, தமிழில் ஆக்கம் பெற்ற நூல், விஞ்ஞான கோட்பாடுகளுக்கு முரண்படாத வகையில், வெளிவரவில்லை என்பதை மனதில் வைத்து, சத்யசாயி வேதாந்த தபோவனத் தலைவரின் உபதேசத் துணைகொண்டு இச்சிறிய நூலை அத்வைதமும் சாயி அவதாரமும் என்ற பெயரில் எழுதி வெளியிடுகின்றோம்.

பிரபஞ்சம் படைக்கப்பட்ட படியே இருக்கிறது. படைப்புக்குத் தொடக்கமும் இல்லை முடிவும் இல்லை. படைக்கப்பட்ட பிரபஞ்சத்தில், ஒருபகுதி ஒடுங்குதலும் (Partial dissolution), ஒருபகுதி விரிதலும் (Partial expansion) ஆகிய இரண்டும் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டே இருக்கிறது. இக்கருத்தை சுவாமி விவேகானந்தர் ஒத்துக் கொள்ளுகிறார். ஆனால் பிரபஞ்சம் முழுக்க அழிவதும் பின்பு விரிவதும் என்ற கருத்தை நாம் நிறுவ முடியாது. இருப்பினும், அவதாரங்களுக்கு, ஒடுக்கத்தையும் விரிவையும் செய்யக்கூடிய ஆற்றல் உண்டு என்பது, சரித்திர வரலாறுகள் நிரூபிக்கும் உண்மையாக இருக்கிறது.

இந்த நிலையில், பகவான் ஸ்ரீ சத்யசாயின் உபதேசங்களின் உட்பொருளை, நாம் எல்லோரும் அறியக் கடமைப்பட்டவர்கள், திரேதா யுகத்திற்கு துவைத பாவனையும், துவபரா யுகத்திற்கு விசிட்

டாத்துவைத பாவனையும் கலியுகத்திற்கு அத்வைத பாவனையும் பொருத்தமானதாக இருக்கிறதாக, பகவான் சாயி கூறியிருப்பதற்கு இணங்க. இந்த நூலில், சாயிபகவான் உபதேசித்த உபதேசங்களைக் கருவூலமாகக்கொண்டு, சுவாமி விவேகானந்தா என்னும் ஞானச்சுடரின் பேச்சுக்களை உள்ளடக்கி, சாயி சரவணமுத்து என்னும் உரைகல்லில் உரைத்துப்பார்த்து, ஞானநெறியான கருத்துக்களை அத்வைதமும் சாயி அவதாரமும் என்ற பெயரில் படைத்துள்ளோம். சத்ய சாயியில், பற்றுதலைஉண்டுபண்ணும், வாசகங்களும், இதில், இனிமைக்காக சேர்க்கப்பட்டுள்ளன.

108 வரையிலான மூலகங்களாலும், சக்தியலைகளாலும் ஆக்கம் பெற்றிருக்கின்ற பிரபஞ்சம், அடிப்படையில் சக்தியே என்னும் விஞ்ஞான கோட்பாட்டுக்கு, முரண்பட்டு, இந்நூல் எழுதப்படவில்லை. சக்திக்காப்பு விதியை, பிரபஞ்சம் முழுவதற்கும் விரித்து, இந்த சக்திக்கு ஆதாரமாக இருப்பதுதான் பரம்பொருள் என்று, தருக்க ரீதியாக நிறுவியுள்ளோம். பெரிய பிரபஞ்சம்போல், மனிதனும் ஒரு சிறிய பிரபஞ்சம். மனிதனிடமும் சக்தி நிரம்ப உண்டு. 27,000 B பில்லியன் கலங்களால் (cells), ஆக்கப்பட்ட உடம்பும், சக்தியின் திரட்சியே. இந்தச் சக்திக்கு ஆதாரமாக, மாறுபடாப் பொருளாக இருக்கும் நாமே, ஆத்மா (கடவுள்) என்று நிறுவியுள்ளோம்.

40W, 60W, 100W என்று வெவ்வேறு வலுக்களில் மின்குமிழ்கள், ஒரு வீட்டில் பொருத்தப்பட்டிருக்கின்றன. 240V என்ற மின் அழுத்த வேறுபாட்டில் மின் ஓடிக்கொண்டு இருக்கிறது. கூடிய வலுவுள்ள மின்குமிழ், கூடிய மின்னோட்டத்தை எடுத்து, கூடுதலான பிரகாசத்தைத் தருகிறது. குறைந்தது குறைவாகத் தருகிறது மின்குமிழின் வலு, அதில் இணைக்கப்பட்டிருக்கும் தங்கிதன் இழையின் தடிப்பைப் (தடையைப்) பொறுத்ததே. கூடிய தடிப்புடைய இழை, கூடப்பிரகாசிக்கும். இதேபோன்று, ஒவ்வொரு ஜீவராசியினதும் மனத்தின் (மனம் என்பது காரண சூக்கும உடம்பை) வல்லமைக்கு ஏற்ப, ஒவ்வொருவரும் கடவுளின் பிரகாசத்தை வெவ்வேறு அளவில் பெறுகிறார்கள் கடவுள் ஒளி, ஒரே தன்மைத்தாக இருக்க, நமது மனப்பக்குவத்திற்கேற்ப, நாம் பிரகாசிக்கிறோம். இந்த மனமும் (காரண - சூக்கும சரீரம்) ஸ்தூல உடலும், கடவுளின் சக்தியில் இருந்து சடமாகியவை. இதுவே அத்வைத தத்துவம். நாமெல்லோரும் கடவுளால் ஒளியூட்டப்படுகிறோம், என்பதனை விரித்து எழுதப்பட்டதே இந்த நூல் என்க. இந்த மின்குமிழ் உதாரணமும் பகவான் ஸ்ரீ சத்தசாயி பாபா அவர்களால் உரைக்கப்பட்டதே. மின்சாரம் கடவுளுக்கும், மின்குமிழின் தங்கிதன் இழை, மனிதனின் மனவுடம்புக்கும் உவமானம் என்க.

இனி, மிகப்பெரிய எண்ணிக்கை வலுவுடைய ஒரு மின்குமிழ் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இதனுடைய பிரகாசம், வலு வின் எண்ணிக்கைக்கு ஏற்ப, பெரிதாகவே இருக்கும். தொடர்ந்தும் வலு எண்ணிக்கையைக் கூட்டினால், அந்தக் கூடிய பிரகாச அலை, எமது கண்களால் அறியமுடியாத, அதிர்வெண்ணை உடையதாக இருக்கும். எந்த அளவு, கூடிய பிரகாசத்தை, நாம் நமது கண்ணால் பார்க்க லாமோ, அந்த அளவு பிரகாசத்தைத் தர என்ன எண்ணிக்கை வலுவு டைய மின்குமிழ் தேவைப்படுமோ, அந்த வலு எண்ணிக்கையுடைய மின்குமிழே, பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா என்பது அடியேனது கருத்து. அதாவது மனிதரால் அடைந்து, கண்டு, சம்பாசித்து பயன் பெறக் கூடிய மனிதக்கடவுளே, சத்யசாயி என்பதாகும்.

சிலர், பகவானுக்கு அட்டமாசித்திகள் (அணிமா முதல் வசித்து வம் வரை) உள்ளதால், அதன் மூலம் அற்புதங்கள் செய்கிறார் என்று கூறிக்கொள்கிறார்கள். ஆத்மசாதகன் ஒருவன், குறிப்பாக ராஜயோகத் தின் சில பிரிவுகளில் தேர்ச்சி பெறும்போது அவனுக்கு எட்டுவகையான சித்திகளும் கைகூடுகின்றன. இந்தச் சக்திகளை வெளிக்காட்டினால், ஒரு கட்டத்தில் அவை அழிந்து பழைய படியும் சாதாரண மனிதனாக வர வேண்டும். பகவான் சாயி பிறப்பிலிருந்து, எந்தவகையான யோகா சாதனங்களும் செய்தவர் அல்லர். அவருடைய சித்திகள் என்றும் குறை யாவே இல்லை குறையாது பெருகிவரும் இந்த இயல்பு, அவதார புரு டனின் அம்சம். பகவானுடைய 43வது பிறந்ததின உரையை, எமது 'கலியுகத்தில், பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் சிவ, சிவசக்தி, சக்தி அவதாரங்கள்' என்ற நூலில், வாசித்து பகவானே தமது திருவாயால், அற்புதங்கள் பற்றி கூறுவதை அறிந்து கொள்ளலாம். சக்தியை ஒடுக்கிச் சடமாக்க, அவதார புருடர்களால் முடிகிறது. அதுவே இவர்களது படைப்பு. எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உள்ள தமது பக்தன் வீட்டில், விபூதி, படங்கள், மறுமொழிச் சுருள்கள் ஆகியவற்றை, தமது உருவப்படங்களுக்கு முன்பாக, படைத்துவிடுகிறார். இந்தவகையான அற்புதங்களைக் கண்டு, அவரை அவதார புருடர் என்று சாயிபக்தர்கள் கொள்ளவில்லை. அவர் இதுவரையும், பேசிய பேச்சுகள், எழுதிய நூல் கள், நடாத்திய சம்பாசனைகளில் உள்ள அரிய, பெரிய, தத்துவச் சிறப்பிலும், காந்தம் போல் உள்ளத்தைக் கவரும் அன்புச் செயல்களி லுமே, பக்தர் அவரைக் கடவுளின் அதிகூடிய பிரதிநிதித்துவமாகக் கொள்ளுகிறார்கள்.

4-வது பிறந்ததின உரையில், கிருஷ்ண பரமாத்மா அருளிய வண்ணமாகவே, சாயி பகவான், ''நல்லவர்களைப் பாதுகாக்கவும் தீமை செய்பவர்களை அழிக்கவும் உறுதியான அத்திபாரத்தில் தர்மத்தை நிலைநிறுத்தவும் நான், யுகந்தோறும் அவதரிக்கிறேன்'' என்று தமது திருவாயால் மொழிந்திருக்கிறார். 1988, பெப்ரவரி, 'தமிழ் சனாதன சாரதி' என்ற பகவானின் வெளியீட்டில், சாயி தத்துவம் பற்றி சாயி கூறுவதைக் கேளுங்கள். ''எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட 'consciovsness' தன்னுணர்வு ஒன்று உள்ளது. அதுவே 'சித்தபஸ்' என்பது. இதுவே எல்லா உணர்வுகளுக்கும் அடிப்டையானது. இதை All ettective will என்று குறிப்பிடுவர் அதாவது 'எல்லாவற்றையும் இயக்கிப் பாதிக்கும் ஆதாரசக்தி' எனப்படுவதே இது. இதுவே மற்ற தன்னுணர்வுகளுக்கும் ஆதாரமானது. இதையே Svper Divine Life 'எல்லாவற்றிற்கும் மேலான தெய்வீக வாழ்வு. 'சுத்த சத்துவ ஜீவிதம்' எனக் கூறுவர். இதுவே சாயி தத்துவமுமாகும். இந்தச் சாயி தத்துவத்தால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. இந்த சுத்த சத்துவ சாயி தத்துவம், எல்லையற்ற சக்தி கொண்டது. இந்தத் தத்துவத்தை புரிந்து கொள்ளுவதே ஒவ்வொரு மனிதரின் கடமையுமாகும்.''

இந்த அகவுரையிலே, உள்ளே சொல்லப்படும் ஒரு விடயத்தை, விளக்கவிரும்புகிறேன். பரப்பிரமமானது ஒளிச்சக்தி வடிவினது (நமது கண்களுக்கு) என்றும் வெவ்வேறு ஓங்கார அதிர்வுகளைக் கொண்டது (நமது செவிகளுக்கும் உணர்வுகளுக்கும்) என்றும், உள்ளே சொல்லப்பட்டுள்ளது. மேலும், இந்தப்பிரபஞ்சமே, அடிப்படையில் ஒளிச்சக்தி என்றும், அதன்காரணமாக, இந்தப் பிரபஞ்சமே பிரமத்தினது (கடவுளது), நமக்குத் தோற்றும் வடிவம் என்றும் கூறியுள்ளோம். இதற்காதாரமாக, விஞ்ஞானத் தொடர்பொன்றை, இங்கே பார்ப்போம்.

இந்திய பிரபல விஞ்ஞானி, டாக்ரர் பகவந்தம், ஒருமுறை பகவான் சாயியோடு உரையாடிக்கொண்டு இருக்கையில், பகவான் கேட்டாராம், டாக்ரருக்கு கடவுளிலோ அன்றி இந்திய பாரம்பரியத்திலோ தன்னும் நம்பிக்கியுண்டோ என்று. அதற்கு டாக்ரர் ஆமோதித்து, பிரபல அமெரிக்க விஞ்ஞானி றொபெட் ஒப்பின்ஹெப்மருடைய வாசகங்களைக் கூறினார். முதன் முதலாக, நியூமெக்சிக்கோவில் இந்த அமெரிக்க விஞ்ஞானி, அணுக்குண்டை வெடிக்கவைத்தபோது, என்ன அனுபவம் ஏற்பட்டதென்று, பத்திரிகையாளர், விஞ்ஞானியைக் கேட்டபோது, அவ் விஞ்ஞானி பகவத்கீதையை குறித்துக்காட்டி, கிருஷ்ண பரமாத்மா,

அர்ச்சுனனுக்கு தனது விஸ்வரூபத்தைக் காட்டியபோது. ஓராயிரம் சூரியர்கள் வானில் ஒரே நேரத்தில் பிரகாசித்தது போன்று இருந்ததாக அர்ச்சுனன் கூறியதுபோல, அணு வெடிப்பின்போது, பேரொளி தெரிந்ததாகக் கூறினார். இதிலிருந்து நாமறிவது என்னவென்றால் அணுவிலே அடக்கப்பட்ட சக்தியின் வடிவம் ஒளி. அணு வெடிப்பிலே சத்தமும் வருவதால் ஒலியும் வெளிப்பாடாகிறது. அணுக்கள் பல சேர்ந்ததே பிரபஞ்சம். ஆகவே பிரபஞ்சம் ஓங்கார அதிர்வுகொண்ட, ஒளிவடிவம். நாமே (நமது ஆத்மாவாகிய பிரமமே) ஒளிவடிவமானவர்கள். எம்மை எமக்கு ஒளியாகப் பார்க்கமுடியாது. காரணம், நான் எப்படி என்னைப் பார்ப்பது?

வாசகர்களுக்கு அடியேன் அறியத்தருவது இப்போ என்னவெனில் இந்த நூலில் பகுதி I இல் பதினொரு கட்டுரைகளும் பகுதி II இல் எட்டு பின்னிணைப்புகளும் உண்டு. பகுதி I இல் முதலாவது கட்டுரையில் (அ) பிரிவும் (ஆ) பிரிவும் உண்டு. (அ) பிரிவுக்கட்டுரை, ஏனைய கட்டுரைகளுக்கு திறவுகோலாயமையும்.

இந்நூலில் காணப்படும் சொற்பிழைகளை மன்னியுங்கள். பொருட்பிழை காணுமிடத்து எமக்கு அறியத்தாருங்கள்.

இந்த நூலுக்கு, மனமுவந்து வியாக்கியான சிறப்புரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக, இந்துநாகரிகத்துறையைச் சார்ந்த திருமதி மல்லிகா இராசரெட்னம் அவர்களுக்கு எமது மனமுவந்த நன்றிகள் கோடி. அதேபோல் இந்நூலை அச்சுப்பதித்துத் தந்த யாழ் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றி.

260, ஏ. வி. றோட்
அரியாலை, யாழ்ப்பாணம்.

சு. சிவதாஸ்

# பொருளடக்கம்

## பகுதி I


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | (அ) வேதாந்தமும் சித்தாந்தமும் | 1—8 |
| | (ஆ) கடவுள் இருக்கிறார் | 9—20 |
| 2. | மறுபிறப்புக்கள் | 21—25 |
| 3. | மனிதனின் உடலமைப்பு | 26—33 |
| 4. | உருவக்கடவுளும் அருவக்கடவுளும் | 34—39 |
| 5. | ஞானமார்க்கம் | 39—46 |
| 6. | சங்கரவேதாந்தமும் சிவசோதி விளக்கமும் அவதார வருகையும் | 46—52 |
| 7. | சமுதாய வளர்ச்சிக்கு அத்வைதம் எவ்வாறு உதவுகிறது. | 53—54 |
| 8. | புலால் உண்ணல் | 54—61 |
| 9. | கர்மம் | 61—66 |
| 10. | பக்தி | 66—70 |
| 11. | வேதாந்த சித்தாந்த ஒற்றுமை வேற்றுமைகள் | 70—74 |


## பகுதி II பின்னிணைப்புக்கள்


| | | |
|---|---|---|
| 1. | சாயி யார்? | 77—81 |
| 2. | சமூகவாழ்வும் ஆத்மீக சாதனையும் | 82—84 |
| 3. | ஆத்மீக சாதனைகள்பற்றி பகவான் சாயி பேசுகிறார்: | 84—88 |
| 4. | சத்தியசாயி பாபாவின் கடிதமறுமொழியின் சுருக்கம் | 88—90 |
| 5. | இயேசுவும் சத்தியசாயிபாபாவும் நீங்களும் | 91—94 |
| 6. | சாயிசரவணமுத்து அருளிய சில பாடல்கள் | 94—97 |
| 7. | புராணப் பின்னணிக் கதைச் சுருக்கங்கள் | 97—101 |
| 8. | சாயி பேசுகிறார். | 102—103 |
| 9. | சாயிபாபா கிருஷ்ணமூர்த்தி - ஆகியோரது கருத்துக்கள் அடங்கிய கட்டுரை - மனம் | 104—107 |
| 10. | மூன்றுவிதமான அத்வைதம் | 107—110 |

# பகுதி I

# 1. (அ) வேதாந்தமும் சித்தாந்தமும்

வடமொழி ஆகமங்களின் உட்பொருளைக் காவி வரும் திருமூலர் திருமந்திரத்தில் ஐந்தாம் தந்திரத்தில் 1419 ஆம் மந்திரத்தில் சைவம் நால்வகை எனக் குறிப்பிடப்படுகிறது. உரையாசிரியர் ஜி. வரதராஜன் அவற்றை, பொருள் வழுவாது, திருமூலர் கூறியவாறே சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என எடுத்துரைத்து பின்வருமாறு விளக்குகிறார்.

சுத்த சைவம் – சடங்குகளில் நில்லாது தலைவனையும் தன்னையும் தளையையும் அறிந்து, தளையின் நீங்கித் தலைவன் திருவடிச் சார்பு பெறுதல்.

அசுத்த சைவம்:– திருவேடந்தரித்துச் சரியை, கிரியையாகிய இரு நெறியில் நிற்பார் நிலையைக் கூறுவது.

மார்க்க சைவம்:– சைவ மார்க்கத்தில் நின்று, வேதாந்த சித்தாந்த நுண்பொருளை உணர்ந்து, ஆன்மபோதம் கெட்டுச் சிவபோகத்தில் திளைத்திருப்பார் நிலையைக் கூறுவது.

கடுஞ்சுத்த சைவம்:– ஞானநிலையில் ஆடம்பரமின்றித் தானவனாய் நிற்கும் நிலையை எடுத்து ஓதுவது. கடுஞ்சுத்த சைவர் உபாயமான கிரியைகளை விட்டு ஞானமே பெரிதெனக் கருதிச் சாயுச்சியம் பெறுவர்.

உரையாசிரியருடைய மேற்போந்த கருத்துக்களை நோக்குகின்றபோது, இந்த நான்கு சைவங்களும், இறைவனை அடையப் படிகளாக அமைந்துள்ளன என்ற விளக்கமே நமக்கு கூடுதலாகத் தொனிக்கின்றது. இந்த நான்கு சைவங்களையும் விளக்கும் மந்திரங்களிலே, திருமூலர், வேதாந்தம், சித்தாந்தம், சைவசித்தாந்தர் என்ற பதங்களை தாராளமாக உபயோகிக்கின்றார். திருமூலர் உபயோகித்தபடி, உரையாசிரியர் விளக்குவதிலிருந்து பின்வரும் முடிவுகளுக்கு நாம் வரலாம்.

வேதாந்திகள்:— பிரம வித்தைய அறிந்தவர்கள் (ஞானிகள்)

நாதாந்திகள்:– நாத தரிசனம் செய்து இருவினை கடந்தவர்கள் (யோகியர்)

சித்தாந்திகள்:— இயற்கையை அறிந்து (தன்னையும், தளையையும்) உபாயத்தினால் சிவத்தைச் சேர்பவர். அதாவது அன்பினால் சிவத்தை அடைபவர் (பக்தர்).

எமது மேற்படி முடிவுக்கு ஆதாரமான மந்திரம் இதோ

" வேதாந்தங் கண்டோர் பிரமமித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மல்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாநா ரணமன்ன சைவர் உபாயமே." (1435)

மேலும் கடுஞ்சுத்த சைவம் என்பது ஞானியர் நிலையை விளக்குவது என்பதை முன்னரே கண்டிருந்தோமல்லவா? இப்போ, கடுஞ்சுத்த சைவத்தை விளக்கும் மந்திரம் ஐந்தினுள் நான்காவது மந்திரத்தைப் பார்ப்போம்.

" நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலால்
தானென்று நானென்றுஞ் சாற்றகில் லேனே". (1441)

இதன் பொருள் வருமாறு:

அறிபவனாகிய நான் என்றும், அறியப்படும் பொருளாகிய சிவம் என்றும் ஆராய்ந்து சிவத்தை நான் சேரவே, சிவன், சீவன் என்ற இரண்டற்ற தற்சிவம் தானே நான் என்ற உண்மையை உணர்த்தியதால், பின்னர் அறியப்படு பொருள் என்றும் அறிபவன் என்றும் பிரித்தறிய முடியாத பெருநிலையை எய்தினேன்.

இந்த அத்வைதக் கருத்து திருமந்திரத்தில் பல இடங்களில் வருகின்றது. 1979ஆம் மந்திரத்தில் நேரடியாகத் தொனிக்கின்றது.

" சிவ னெனச்சிவ னென்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை அறிகிலர்
சீவ னார்சிவ னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே " (1979).

இத்துணையும் யான் ஆராய்ந்தது என்னவென்றால், சிவாகமங்களிலும் சீவன், சிவன் என்ற கருத்துக்கள் இருந்திருக்கின்றன. திருமூலரைப் பொறுத்தவரை, அவர் வடமொழிச் சிவாகமப் பொருளை தமிழில் சுருக்கித் தந்தாரேயொழிய, அவர் தற்காலத்துச் சமயவாதிகளைப் போல, ஒரு பக்கத்தைச் சாரவில்லை.

சங்கராச்சாரியரும் முப்பொருளை ஏற்றுத் தான், பின்பு ஒரு பொருளுக்கு வாவென்றார். சிற்றறிவில் மூன்றாகத் (பதி, பசு, பாசம்) தெரிவது, பேரறிவில் ஒன்றாக அனுபவிக்கப்படும். நமது உடல் மட்டுப் படுத்தப்பட்ட ஆற்றல்களையே உடையது. உதாரணமாக, ஏழுநிறங் கொண்ட சூரிய ஒளியை வெள்ளொளியாகவே காண்கிறது. மேலும் ஒரு குறிப்பிட்ட வீச்சுக்குள் அடங்கும் ஒலி, ஒளி அலைகளை மட்டுமே எமது காது, கண் நுகரும். விஞ்ஞானிகள் இந்த உலகு சக்தியே என்று நிறுவு கிறார்கள். சக்தியே ஒடுங்கி சடமாகத் தோன்றுகிறது. உதாரணமாக, எமக்கு கழிவு மலமாகத் தோன்றுவது விஞ்ஞானிக்குச் சக்தியாகவே தோன்றுகிறது. ஆனால், அந்தச் சக்தி வெறுமனே சக்தியல்ல; பிரம மும் (கடவுளும்) அதனோடு இணைந்து இருக்கிறார்; அதாவது பிரமத் தோடு அபின்னமாகச் சக்தி (மாயை என்று பெயர் கொடுக்கப்பட்டிருக் கிறது) இணைந்துள்ளது என்பதே சங்கராச்சாரியரது வாதம். அப்படி யாயின் ஸ்ரீ சங்கரர் இருபொருளை நம்பும்துவைத வாதியா? இல்லை. இதற்கு சுவாமி விவேகானந்தர் விளக்கம் தருகிறார். காலதேச வர்த்த மானத்(தாக்குப்படுதல்)திற்கு உட்பட்ட எமக்கு 'மாயை' ஒன்றே தெரி கிறது. காலதேச வர்த்தமானத்திற்கு அப்பாற்பட்ட ஞானிக்கு பிரமமே தெரிகிறது. அதாவது அபக்குவிக்கு ஒரு பொருள்; பக்குவிக்கும் ஒரு பொருள். இரண்டும் ஒரே காலத்தில் தெரியாது. ஆகவே, ஒருமை வாதம், துவைத வாதமல்ல. அறிவுநிலையில் (conscious state) 'நான்' எனும் உணர்வு எமக்கு இருக்கிறது. இந்நிலையில் மாயையே உள் பொருள். அறிவுகடந்த சமாதிநிலையில் (Superconscious state) 'நான்' எனும் உணர்வு இல்லை. அந்த நிலையில் உள்பொருள் பிரமம். முதல் நிலைக்கு மாயை சத்து; அடுத்த நிலைக்கு மாயை அசத்து; அதனால் மாயையை சதசத்நிர்வசனீயம் என்றார் ஸ்ரீ சங்கரர். பின்னே வரும் கட்டுரையில் கூடிய விளக்கங்களைக் காணலாம்.

தாயுமான சுவாமிகள் திருவருள் விலாசப் பரசிவ வணக்கம் என்ற பகுதியில்:

" அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெதுதன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மன வாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வ மென்,.......

என்று கூறிக்கொண்டு போகிறார். பல கேள்விகளைக் கேட்டு அதற்கு விடை, சிவம் என்கிறார். அருளோடு நிறைந்தது எது? என்கிறார். அருள் என்பது சக்தி. ஸ்ரீ சங்கரருடைய அத்வைத விளக்கத்திலே இந்தச் சக்தியே மாயை என்று விபரிக்கப்படுகிறது. அருளை வெளியென்றும் தாயுமானவர் குறிப்பிடுகிறார். இதுதான் விஞ்ஞானிகள் கூறும், சக்தி யலைகளால் ஆன பிரபஞ்ச வெளி. பிரபஞ்ச சக்தி ஒடுங்கியே சடப் பொருள் உருவாகின்றன கோடி அண்டங்கள் எல்லாம் அருள் வெளிக்குளே படைக்கப்பட்டிருக்கின்றன சிவம் (பிரமம்) உயிர்களுக்கு உயிராய் நின்று தழைக்கின்றது என்கிறார் தாயுமானவர். திருவெம்பாவை கடைசிப் பாடலில் மணிவாசகர், ''போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்'' என்று உயிர்கள் தோன்றியது சிவனுடைய பாதம் என்றார். ஸ்ரீ கயிலாயத் திருத்தாண்டகத்தில் ஆறாம் பாடலில் 'பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி' என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார் இவ்வாறான இந்த உயிர்களுக்கு உயிரானதே சிவம் என்பதே தாயுமானவருடைய கருத்து. உயிர்பற்றிய விளக்கம் மற்றய கட்டுரைகளில் உண்டு.

மேற்கூறிய தாயுமான சுவாமிகளது பாடலாற் பெறப்படுவது, சிவமும் சிவத்தின் அருளுமே (சக்தி) உள்ள பொருள்கள். முத்திநிலையில் அதாவது நித்திய நிலையில் அருள் எமக்கு புலப்படாத காரணத்தினால், அருளுக்கு நிலையான இருக்கை இல்லை. மாயைக்கு நிலையான இருக்கை இல்லை. ஆனால், முத்திநிலையை அடையாத உயிருக்கு மாயை உண்டு. இதுவே, ஸ்ரீ சங்கரருடைய கேவலா அத்துவிதமாகும். இங்கு யான் உயிரென்பது, வேதாந்திகளின் ஜீவாத்மாவை என்று கொள்க.

முத்திநிலையே நமது இலட்சியம் என்பதால், முத்திநிலையில் பிரமம் மட்டுமே இருப்பதால், அத்வைதிகள் பிரமத்தைப் பற்றியே பேசுவார்கள் தமக்கு உலகமாக உயிராகத் தோற்றுவது பிரமமே என்பார்கள். மிகவும் இறுக்கமாகவும் உசிதமாகவும், சிந்தனைக்கு ஏற்புடையதாகவும் அத்வைதக் கொள்கைகள் இருக்கின்றன. இந்தக் கட்டுரை, மற்றய எல்லாக் கட்டுரைகளுக்கும் திறவுகோலாக அமையும் என்று நம்பியே எழுதுகின்றேன் வெவ்வேறு காலங்களிலேயே கட்டுரைகள் எழுதப்பட்டன. 'கடவுள் இருக்கிறார்' என்ற கட்டுரையில் இருந்து, தொடர்ந்து வரும் கட்டுரைகள் ஏணிப்படியாகவே அமைந்து செல்கின்றன. பிரமத்தையும் மாயையையும் பிரித்து வைத்தே, ஆராய்ந்து கொண்டுபோய், கடைசிக் கட்டங்களில் ஒன்றாக்கியுள்ளேன் ஆகவே தான், இந்தக் கட்டுரையைத் திறவுகோலாக இப்போ எழுதியுள்ளேன்.

முன்கட்டுரைகளில், மாயை அசேதனம் என்றும் பிரமம் சேதனம் என்றும், அசேதன மாயை அசையக் காரணமாக இருப்பது சேதனப் பிரமம் என்று சொல்லுகிறேன். பின்கட்டுரைகளில், மாயை, பிரமத்தின் தோற்றுவடிவம் எனக்கூறி ஒன்றாக்கியுள்ளேன்.

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா அவர்கள், 'அத்வைத மதம்' என்ற ஒரு பதத்தை பாவித்து, அதனை (மதத்தை) எல்லோரும் அறிந்து ஒழுக வேண்டும் என்றும், தான் அதனையே இனி வருங்காலங்களில் எடுத்துரைக்க இருப்பதாகவும் நான்கு வருடங்களுக்கு முன்னதாகக் கூறினார். அதன்படி அத்வைதத்தையே உபதேசித்து வருகிறார். ஆகவே, சாயி பக்தர்கள் அத்வைதம் மதம் பற்றி முழுமையாக அறியவேண்டும் என்றே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சாயி பக்தர்கள் மட்டும் அல்ல, எல்லோரும் அத்வைதத்தை உள்ளபடி அறியவேண்டும். பக்கச் சார்புடைய சமயத் தீவிரவாதிகள், அத்வைதத்தை மாயா வாதம் என்று வர்ணிக்கிறார்கள். மணிவாசகர் மிண்டிய மாயா வாதமெனும் சண்டமாருதம் சுழித்தடித்தார்ப்ப என்று கூறும்போது, அவர் பிற இடங்களில், கண்டித்ததும் வெற்றி கொண்டதுமான புத்த சமயத்தையே மாயாவாதம் என்று சுட்டினார். ஏனென்றால், புத்த சமயம் உள்பொருள் ஒன்று இருப்பதை ஏற்கவில்லை. உலகம் வெறுஞ் சூனியமே என்றுதான் கூறுகிறது. உலகம் சூனியம் (அல்லது மாயை) என்று உணரும் நாம், சூனியம் அல்ல என்று அது ஆராய விரும்பவில்லை. தேவையில்லாத விடயம் என்றே புத்தசமயம் எண்ணுகிறது. உலகம் அநித்தியமானது என்று நிருபித்தால், அதுவே ஒருவன் ஞானத்தை அடைந்து நிர்வாணத்தை அடையப் போதுமானது என்றே புத்தசமயம் கருதுகிறது.

ஸ்ரீ சங்கரர் மாயையை சதசத்நிர்வசனீயம் என்று விபரித்து ஏற்றுக் கொண்டதால், அத்வைதத்தை மாயாவாதம் என்று எவரும் சுட்டுவது விரும்பத்தக்கதல்ல. பிரமவாதம் என்பதே பொருத்தமான சொல். பிரமத்தையும் மாயையையும் முறையே சிவமும் சக்தியும் என்று கொள்வதே சைவ சமயத்தின் தனிச்சிறப்பாகும். ஆனந்தலஹரி முதலான பல வடமொழி நூல்களால், பக்தியை வளர்க்கவே ஸ்ரீ சங்கரர் விழைந்தாரெனக.

திருமூலர், ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சர், யாழ்ப்பாணத்து யோகசுவாமி, தாயுமானவர், மற்றும் பல ஞானிகள் வேதாந்த சித்தாந்த சமரசம் கண்டோர். நானும் இறைவன், நான் காணும் உலகும் இறைவன் என்றும், காலவோட்டத்தில் எனது தற்காலிக துன்பங்கள் எல்லாம்-

மறைந்துவிடும் என்று வேதாந்தி (அத்வைதி என்க) எண்ணிச் சாந்தியோடு வாழ, சித்தாந்தி, எனது ஆணவத்தைப் போக்க, இந்த உலகையும் என்னையும் சிவம் மாயை துணைகொண்டு படைத்தார், எனது ஆணவம் நீங்கி, நான் எந்நாளோ, சிவனடியின் கீழ் அத்துவித சுபானுபவம் (ஒன்றாகாமல், இரண்டாகாமல் இருந்து) பெறுவது என்று ஏங்கி நிற்பான். அவரவருடைய விருப்பத்தையும் அறிவையும் பொறுத்ததே அவரவர் தேர்ந்தெடுக்கும் பாதை என்க.

நமது சைவசமய குரவர்கள், 'எல்லாமே சிவம்' என்று பாடிப் பரவியதை நாம் நினைவுகூராமல் இருக்க முடியாது. அப்பர் சுவாமிகளது திருத்தாண்டகங்கள் எல்லாம், சிவனே முழுவதும் என்று வியந்து பேசுகின்றன குறிப்பாகச் சொன்னால் 'நின்ற திருத்தாண்டகம்' பத்தினையும் பார்த்தால், அத்வைதிகளின் பத்திமுறையே பளிச்சென புலப்படும். அத்வைதிகளுக்கும் பத்தி அவசியம். அதனாலன்றோ ஸ்தாபகர் ஸ்ரீ சங்கரர் பக்தி இலக்கியங்களையும் போதுமான அளவு படைத்தார். மேலும் மணிவாசகர், 'போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்' என்று ஜீவாத்ம நிலையைக் காட்டுவது மட்டுமல்லாமல், அத்வைதக் கருத்துக்களை நிரம்பக் கையாளுகிறார் வேதாந்திசரி சித்தாந்திசரி சமயச் சடங்குகளைக் கையாண்டுதான் ஞானநிட்டை அடையவேண்டும். சமயச் சடங்குகளை என்று சொல்லும்போது, குறிப்பாகப் பக்தி மார்க்கத்தை என்று கொள்ளவேண்டும்.

இத்திறவு கோல் கட்டுரையில் அத்வைதிகளின் சில உதாரணங்கள், மகாவாக்கியங்கள் என்பவற்றையும் கூறி, யான் பின் கட்டுரைகளில் உபயோகிக்கும் சில பதங்களின் விளக்கங்களையும் தரவிரும்புகிறேன். கயிறு பாம்பாகத் தெரிதல். அறியாமையில் உள்ளபோது கயிறு அரவமாகத் (பாம்பாகத்) தெரிகிறது. அதனைக் கயிற்றரவு என்பார் பண்டிதமணி நாம் கயிற்றரவைக் காண்கிறபொழுது கயிறு தெரியாது. அதாவது மாயையைக் காண்கிறபொழுது (அனுபவிக்கிற பொழுது) நமக்குப் பிரமம் தெரியாது. இனி, கயிற்றைக் காண்கிறபோது கயிற்றரவு (பாம்பு) தெரியாது. அதாவது பிரமத்தைக் கண்டனுபவிக்கும்போது மாயை தெரியாது அபக்குவநிலையில் காண்பது ஒன்றினை (மாயையை); பக்குவநிலையில் காண்பதுவும் ஒன்றினை (பிரமத்தை); கயிற்றையும் பாம்பையும் ஒரே நேரத்தில் தரிசிக்க முடியாதது போல், பிரமத்தையும் மாயையையும் ஏககாலத்தில் தரிசிக்க முடியாது. "உனக்கு மாயையாகத் தெரிகிறது, எனக்குப் பிரம்மமாகத் தெரிகிறது. பொருள் ஒன்றுதான். பார்வையில் வித்தியாசம்" என்று இந்த ஒரு பொருள் தத்துவத்தை விளங்கவைக்கலாம். இதனை மேலும் இவ்வாறு விளங்கவைக்கலாம்.

ஒரு நாணயக்குற்றியின் ஒரு பக்கம் பிரமம் என்றும் மறுபக்கம் மாயை என்றும் கொள்க. குற்றியை அதன் விளிம்பு வழியாக நிலைக்குத்தாக எமது கண்முன்னே நிறுத்தியிருக்கிறோம் என்க. மாயைப் பக்கத்திற்கு சரிந்துநின்று பார்த்தால் மாயை மட்டும் தெரியும். பிரமம் பக்கம் சரிந்து பார்த்தால் பிரமம்மட்டும் தெரியும். 'நான்' எனும் குறுகிய, பிரிவு உணர்வு இருந்தால் மாயையே தெரியும் 'நான்' என்பது விரிந்து நாமாகி பிரபஞ்சத்தோடு பிணைந்துவிட்டால் பிரமம் மட்டும் அனுபவிக்கப் படும். அதாவது மாயை தெரியாது. இந்த இடத்திலேதான் சுவ மி விவேகானந்தர் I am the Universal என்றார். அதாவது உண்மையான நான் தான் இந்தப் பிரபஞ்சமாக இருப்பது என்பது கருத்து.

மேலும் பிரமத்தினது ஒளியை யான், மூல சக்தி என்றும் மாயை என்றும் பின்னே வரும் கட்டுரைகளில் குறிப்பிடுகிறேன். இதன் விளக்கம் வருமாறு. பிரமத்தின் வெளிவடிவம், சூரியன் ஒளியி லும் பெரிய ஒளிவடிவமே (சூர்யகோடிப் பிரகாசமென்க). இந்த ஒளி ஓமெனும் பிரணவ ஒலியோடு அதிர்ந்துகொண்டு இருக்கிறது. அதிர் வெண் (frequency or vibratory rates) வேறுபடப்பட வேறு வேறு உல கங்களும் சடப்பொருளும் தோன்றி நமது கண்ணுக்கு காட்சியளிக்கின் றன. நாம் நமது கண்ணால் காணும் உலகுக்கு அப்பாலும் இறைவனு டைய (பிரமத்தின்) ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. அதனுடைய ஒளி அதிர்வெண் கூடிய காணத்தினால், எமது கண்கள் அதனைக் காணமுடி யாமல் இருக்கிறது. யோகிகள், ஞானிகள் நுண்ணிய புலனுகர்வாற்ற லால் (super perception) அதனைக் காண்கிறார்கள். நாம் காணும் உலகு நமது புலனெல்லைக்கு எட்டியதால் மாயை என்ற பெயரால் அழைக்கின்றோம். அது மட்டுமல்ல, நமது கண்ணுக்குப் புலப்படாத ஒளியும்மாயையே. அதனை மாயை என்று சொல்ல அஞ்சியே (விரும்பாமலே) மூலவொளி என்று பாவித்திருக்கிறேன். நமது காரண சரீரமும் அந்த ஒளியாகிவிடும்போதே, நமக்கு விடுதலை கிடைக்கிறது. ஆகவே, பிரமத்தினது வெளிப்பாடே இந்த ஒளி என்றும் இன்னும் கூடிய வெளிப்பாடே இந்த பிரபஞ்சத் தோற்றம் என்று நாம் அறிந்து கொள்ளவேண்டும். ஆகவே பிரமம் வேறு அதன் ஒளி (மாயை) வேறல்ல, ஒளி அல்லது மாயையே பிரமத்தினது தோற்று (எமக்கு) வடிவம் மாயை என்று ஸ்ரீ சங்கரர் பெயர் கொத்ததற்கு காரணம், முத்தி நிலையில், ஒருவருக்கு, மாயை இருப்பதாகத் தெரிவதில்லை, அதா வது நான், மாயையாகிய அந்த ஒளியில் ஒளியாகச் சென்று கலந்த தனால், எனக்கு அந்த ஒளி தெரிவதில்லை. அந்த ஒளிக்கு ஆதார மானேன்.

இப்போது அத்வைத மகாவாக்கியங்களைப் பார்ப்போம். 'அஹம் பிரம்மாஸ்மி' அஹம்–நான்; பிரம்மா – பிரம்மம், அஸ்மி– இருக்கிறேன். நான் பிரம்மமாக இருக்கிறேன் என்பது. சிவோஹம் என்பதுவும் சோஹம் என்பதுவும் இதே பொருள்தான்; நான் சிவமாக இருக்கிறேன், அதாவது 'நான் சிவமே'. நான் சிவத்தின் ஒரு பகுதி என்பது தவறு, (இது, விசிட்டாத்வைத விளக்கம்). தவறு ஏனெனில், இதுகாறும் எடுத்த பிறவிகளில் பரிணாமவளர்ச்சி அடைந்தது காரண சூக்கும சரீரமேயொழிய (மனவுடம்பு அல்லது மனம்), ஆத்மாவாகிய சிவமல்ல. சிவம் அன்றும் இன்றும் ஒரே தன்மையாகவே இருக்கிறது. சிவத்தின் மேல், மாயையானது பல இடங்களில் பல பல வளர்ச்சிகளுக்கு அல்லது மாற்றங்களுக்கு உள்ளாயது. ஒரு புகையிரதம் நிலையாயிருக்க, ஓடும் புகையிரதத்தில் இருந்து பார்த்தால், ஓடாத புகையிரதமே ஓடுவதாகவும், நமது புகையிரதம் ஓடாமல் நிற்பதாகவும் தெரியும். இது மயக்கம் (அறிவு மழுக்கம்), இதேபோன்று ஆத்மாவாகிய சிவம் அசையாதிருக்க, மாயையாகிய நமது முச்சரீரமே ஓடுகிறது. ஆனால் நமது அறிவு, நிதான மழுக்கத்தால், சிவமே வளர்ச்சி அடைந்து முத்தி அடைகிறார் என்று தோற்றுகிறது. பந்தப்படுதலும் முத்தி அடைதலும் மாயையின் விகாரமென்க.

குரு சிடனைப்பார்த்து, ''தத்துவம் அஸி'' என்கிறார். தத்– அது; துவம்–நீ: அஸி – இருக்கிறாய். நீ அதுவாக (பிரமமாக) இருக்கிறாய். நீ இறைவனே. இதனை விட, நீ பிரபஞ்சமாக (மாயையாக) இருக்கிறாய் என்றும் பொருள் விரிக்கலாம் ஏனெனில், பிரமம் என்றும் மாயை என்றும் இருபொருள்கள் இல்லை.

ஓம் தத் ஸத் என்பதில், பிரணவமான அது (பிரமம்) என்றும் உள்ளது, அதுவே உள்ளது என்பது கருத்து.

மேற்படி மகாவாக்கியங்கள் எல்லாம், ஒரு பொருளே உள்ளது என்பதனைக் காட்டுகின்றன. கடவுளை விட, வேறு ஒரு சத்துப் பொருள் அல்லது சடப்பொருள் இருக்குமானால், கடவுளுக்குக் கீர்த்தி இல்லை. கடவுள் சர்வவியாபி, என்று எல்லா இடங்களிலும் உள்ளார், என்ற வாக்கிலும் அர்த்தமில்லை. ஏனென்றால், மற்றைய சத்துப்பொருள்களும், சடப்பொருளும் இருக்கிற இடத்தில் இவர் இருக்க இடமில்லை அல்லவா? கடவுள் ஒருவிதமாகப் புகுந்து கலந்து நிற்கிறார் என்பதுவும், கடவுள் என்ற ஒருவருக்குப் புகழாகத் தெரியவில்லை.

பேராசிரியர் இராதாகிருஷ்ணன் கூறியதுபோல், ஸ்ரீ சங்கரருடைய அத்வைதத்தை ஒருவர் ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். ஆனால், நமக்கு எட்டியதை இந்த நூலில் தந்துள்ளோம்.

# 1 (ஆ) கடவுள் இருக்கிறார்

தருக்க ரீதியில் (அறிவைக் கொண்டு முடிவு எடுத்தல்) அல்லது பரிசோதனை ரீதியில் (ஐம்புலன்களில் ஏதேனும் ஒன்றால் அறிதல்) ஒரு சிந்தனைக்கு முடிவெடுத்தலை, விஞ்ஞான விளக்கம் என்று கூற லாம். எமது இயற்கையில் நாம் அறிந்துள்ளது, புவியில் மனி தனும், விலங்குகளும், தாவரங்களும், மற்றும் சிறு உயிர்களும் வாழ்ந்து வருவதாக. புவியே மனிதனுடைய ஒரே ஒரு வாழுமிடம் என்பது இதுவரை கண்ட விஞ்ஞான முடிபு, சூரியனைச் சுற்றி கோள்கள் வலம் வருவதாகவும். இந்தச் சூரிய குடும்பம்போல், வேறு பல சூரிய குடும்பங்கள் இருக்கலாம் என்றும் விஞ்ஞான ஆராய்ச்சி சொல்கிறது. இந்த அண்டம் (Space) எங்கே சென்று முடிவடைகி றது, என்பதே தெரியாமல் இருக்கிறது. இந்த அண்டம் எப்போது எங்கிருந்து துவங்கியது என்பதுவும் தெரியாது Space and Time விஞ்ஞான ஆராய்ச்சிக்கு எட்டுவதாக இல்லை. இந்த நிலையிலும் விஞ்ஞான முறைப்படி நிரூபிக்கப்பட முடியாத பல சமயக்கொள் கைகளை, மனிதன் ஏற்பதற்கு ஆயத்தமில்லை. உதாரணமாக 33 கோடி தேவர்கள், பதினெண்கணத்தவர்கள், 224 புவனங்கள், 1008 அண்டங்கள், இப்படி சமயப் புராணங்களில், பல தரவுகள் தரப்பட்டிருக்கின்றன. ஜீவராசிகளில் 84 இலட்சம் (யோனிபேத) வகையானவை (Species) உள்ளதாகவும், இன்னும் எத்தனையோ புள்ளி விபரங்களும் தந்திருக்கிறார்கள். பூலோகம், புவர்லோகம், சொர்க்கலோகம் என்று 7 சோடி (14) லோகங்கள் பற்றியும் பேசப் படுகிறது. இவற்றை எல்லாம், இந்துசமய புராணங்களில் அதிகம் காண்கிறோமே ஒழிய வேதங்களின் தத்துவப்பகுதியாகிய உபநிடதங் தங்களில், அருமையாகத்தான் காண்கிறோம். அதுவும் விளக்கத் தோடு. இந்துசமயத் தத்துவங்கள், பெரும்பகுதியாக பிரிக்கப்படும் போது மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன. இருப்பினும் ஏராளமான பிரிவுகள் உண்டென்றே சொல்லவேண்டும். ஒவ்வொரு ஆச்சாரியரும் தத்தமது அறிவு, சிந்தனை, ஆற்றலுக்கு ஏற்ப அவற்றைக் கூறியுள் ளார்கள். முப்பெரும் தத்துவங்கள் என்று சொல்லுகின்ற பொழுது ஸ்ரீ மத்துவர் நிலைநாட்டிய துவைத தத்துவம் (Dualism) ஸ்ரீ இராமனுஜர் நிலைநாட்டிய விசிட்டாத்துவைதம் (Qualified Monism) ஆதிசங்கரர் நிறுவிய அத்வைதம் (Monism / Advaitism) ஆகியன அடங்கும். தமிழர் மத்தியில் தோன்றியதும் ஆகமங்களில் ஏற்றுக் கொள்ளப்படுவதுமான சைவசித்தாந்த முப்பொருள் தத்துவம் துவை

தம், விசிட்டாத்துவைதம் போன்ற தத்துவங்களின், சிறந்த படியாக இருக்கிறது என்று சொல்லலாம்.

தத்துவங்களில், இந்துசமய பெரிய சிந்தனையாளர் ஸ்ரீ சங்கராச்சாரியார் நிறுவிய அத்வைதம், மிகவும் வாசனை கூடிய தத்துவப் பூ என்று சுவாமி விவேகானந்தரால், ஏற்கப்பட்டு, டை முறைப்படுத்தப்பட்டது. இன்று சுவாமி விவேகானந்தர் சாதித்தது, எவருமே சாதிக்கவில்லை. மேலும் டாக்ரர் இராதாகிருஷ்ணன் என்ன சொன்னார்? 'இவரது (சங்கராச்சாரியாரது) தத்துவம் முழுமையானது. அதன் தொடக்கத்திலோ முடிவிலோ ஓர் எழுத்தினைக் கூடச் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டாத அளவு முழுமையானது. நாம் இவரது தத்துவத்தினை ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். ஆனால், இவரது பேரறிவுச் சுடரின் வீச்சானது, எம்மைக் கவர்ந்து நாம் தொடங்கிய இடத்தில் எம்மை விடாது எம்முள்ளே ஊடுருவிச் செல்வதை மட்டும் எம்மால் தடுத்தல் இயலாது.'' – என்று பேரஞர் இராதா கிருஷ்ணன் சொல்லுகிறார். மேலும் இந்த நூலின் பின் அத்தியாயங்களில், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களை கடவுளின் அதிகூடிய பிரதிநிதித்துவம் என்று நாம் விபரித்து வர்ணிக்கிறோம். பகவானும் என்ன முடிவு கொண்டுள்ளார்? தமது 60-ம் வயதிலிருந்து, அத்வைதத்தையே மதமாக போதிக்க முடிவுகட்டியிருப்பதாக. இப்போது பகவானுக்கு 64 வயது. சாயிபகவானுடைய அத்வைத போதனைகளில் சிலவற்றை இந்த அத்தியாயத்தில் கீழே காணலாம்.

இந்த அத்வைதத்தின் சிறப்பு என்னவென்றால், விஞ்ஞான ரீதியாகவும் ஒத்துக்கொள்ளப்படக் கூடியது என்பதாகும் இதனை ஆராய்வோம் நாம் காணும் பிரபஞ்சம் அணுக்களாலும் அல்லது அதனிலும் நுண்ணிய சக்தி அலைகளாலும் ஆனது. சமய ரீதியில் 5 மூலகங்களால் (வெளி, காற்று, தீ, நீர், மண்) பிரபஞ்சமும் ஜீவர்களின் உடலும் ஆக்கப்பட்டிருக்கிறது விஞ்ஞான ரீதியில் 108 வரையிலான மூலகங்களாலே, இவை ஆக்கப்பட்டிருக்கின்றன. வெளி (Space) போன்றன, சக்தி அலைகளாக இருக்கின்றன. அணுக்களும் சக்தியின் திரட்டு என்றே விஞ்ஞானம் சொல்லுகிறது. மொத்தத்தில், நாம் காணும், அல்லது உய்த்துணரும் சகல பொருட்களும் சக்தியின் ஒரு வடிவமாகத்தான் இருக்கிறது. ஆகவே, நாம் எவ்விடத்துப் பார்ப்பதும் அனுபவிப்பதும் சக்தியே. இந்த சக்தியைத்தான் அத்வைதம், மாயை (அல்லது இயற்கை) என்று அழைக்கிறது. சக்தி மாறுபடும். சக்தி சடப்பொருளாகலாம். அல்லது வெப்ப சக்தியானது ஒளி, அல்லது ஒலி, எந்த விதமான ஒரு சக்தியாகவும் மாற்

றப்படலாம். ஒரு சக்தியை இன்னொரு சக்தியாக மாற்றமுடியும். ஆத தலால் இந்த 'மாயை' நிலைத்த, நித்ய சத்துப் பொருள் அல்ல, அத னால் மாயையைக் (சக்தியை) கடவுள் என்று சொல்லிவிட முடியாது. இனி, மேலும் ஆழ்ந்து செல்வோம். ஒருவரை மையமாக வைத்து ஆராய் வோம். உதாரணமாக, நான் காணும் இந்தப் பிரபஞ்ச உலகு ஒரு மாயை (மாற்ற மடையும்). என்னுடைய உடம்பும் மாயை, என்னு டைய மனமும் மாயை. (மனத்தை, அணுவிலும் நுண்ணிய சக்தியலை யாகக் கொள்க.) என்னுடைய அறிவும் மாயை, ஏனெனில் அறிவும் கூடுவது, குறைவது உண்டு. (அறிவையும் சக்தியின் வடிவமாகக் கொள்க.) இப்படி, எனது உடல், எனது மனம், எனது புத்தி என்று ஆராயும் அல்லது இவற்றை சொந்தம் கொண்டாடும் 'நான்', ஒரு மாயையா? 'நான்' மாயையாயிருந்தால் புறத்தே இருந்தவற்றை மாயை என்று எவ்வாறு நான் கண்டு பிடித்தேன்? எந்த வகையில் மூளை யைப் போட்டுக் குழப்பினாலும் 'நான்' உண்மை என்றே முடிவுவரும். இப்படி, ஒவ்வொரு ஜீவராசியிடமும், சிறப்பாக ஒவ்வொரு மனிதனிட மும் நான் என்பது உண்மை. இவ்வாறு எத்தனை 'நான்' கள் இந்தப் பிரபஞ்சத்தில் உண்டு? முடிவிலி (∞) எண்ணிக்கையா? முடிவிலி என்று சொல்வது தருக்கத்திற்குப் பொருந்தாது மேலும் பல 'நான்' கள் இருந்தால், எந்த 'நான்' பெரியது? இந்த 'நான்'களுக்கு இடையே சண்டை சச்சரவு ஏற்படாதா? இப்படி பல கேள்விகள் எழும். இதற்கான சரியான விடை, ஒரு 'நான்' தான் இருக்கிறது. அது எப்படி? அத்வை தத்தின் சிறப்பான உதாரணத்தைப் பாருங்கள். ஒரு சூரியனே பல குடங் களில் உள்ள நீரிலும் பல சூரியராக பிரதிபலிக்கிறது (Reflect). அத னால் பல பிம்பங்கள் (images) தோன்றுகின்றன. அதாவது புத்தி, மனம், ஸ்தூல சரீரம் கொண்ட எமது உடலில் (சக்தியில்) பிரமம் அல் லது ஆத்மா என்று சுருதிகளால் சுட்டப்படும், இறைவன் பிரதிபலிக் கின்றான். பிரமம் ஆனது புத்தியில் பட்டு, மனத்தில், உடலில் படுவ தால், எமது சரீரம் தனித்துவம் கொண்ட ஒருபொருள்போல் இயங்கு கிறது. இருப்பது ஒரு 'நான்' தோன்றுவது பல நான்களாக. பிரமம் மாயையில் பட்டு ஜீவர்களாகத் தோற்றுகின்றது. ஜீவன் என்பது முச் சரீரக்கூடு. பிரமம் படுவதால், பிம்பமாகி இயங்குகிறது. ஸ்தூலம் விழும் போது, காரண—சூக்கும சரீரம் சென்று புதிய ஸ்தூல உடம்பை எடுக் கும். உண்மைநிலையில் 'நான்' என்பது பொய் அவன் என்பதுதான் உண்மை. நான் பிம்பமே தவிர பொருள் (object) அல்ல நான் பிம்பம் (image) என்று அறிவது பிரமஞானம். பிரமஞானம் துலங்கும் போது மாயை அற்றேபோகிறது. அதாவது, அறிவு நிலையில் (Conscious state) இருந்து, அறிவு கடந்த நிலைக்கு (super - Conscious state) மனம் உய ரும்போது 'நான்' அற்றுவிடும். அறிவு மறைந்த நிலையிலும் (Uncons cious state) (உ+ம் — உறக்கம்) 'நான்' தொழிற்படுவதில்லை. ஆனால்

அறிவு கடந்தநிலையே, நித்திய சமாதி. சமாதியில் 'நான்' அற்று, அவனாகி விடுகிறோம். ஒன்றேயாகிவிடுகிறோம். அந்த நிலையில், ஒருவனுக்கு உடலோ, பிரபஞ்சமோ தோன்றாது. அதாவது மாயை தோன்றாது. சமாதி நிலை அடைந்தவனுக்கு மாயை இல்லை. சாதாரண அறிவுநிலையில் (Conscious state) உள்ளவனுக்கு மாயை, உண்டு. இதனால் மாயையைச் 'சத சந்நிர்வனீயம்' என அழைப்பர். அதாவது உளதோ, இலதோவென்று வரைவிலக்கணம் செய்யமுடியாத பொருள். இனி, மாயைக்கு ஆதாரமாக இருப்பது பிரமம். சாதாரண மொழியில் சொன்னால், பிரமம் தனது ஆற்றலாகிய, மாயையினூடாக, வெளியே எட்டிப்பார்க்கிறது. இது ஜீவன்நிலை எட்டிப்பார்த்தது காணும் என்றநிலை முக்திநிலை அல்லது பிரமநிலை, எட்டிப்பார்க்கும் கதை, சாயிபாபா சொன்னது. ஆனால், அதனை வைத்து தருக்கம் செய்யமுடியாது. அது ஒரு விளக்கத்திற்காகத் தந்தது. ஆகவே, விஞ்ஞான ரீதியிலும் ஒத்துக்கொள்ளக் கூடியதாக அத்வைதம் அமைந்திருக்கிறதைக் கண்டு கொண்டோம். எங்கெங்கு சக்தி நிலை கொண்டுள்ளதோ, அங்கங்கெல்லாம் அதற்கு ஆதாரமாய் இருப்பது பிரமம். மாறுதலடையும் சக்திக்கு (மாயைக்கு) மாறாத பிரமம் ஆதாரம். ஆதாரத்தில் நிலைப்பது ஆதேயம் எனப்படும். நாம் காண்பது, அனுபவிப்பது, அறிவது எல்லாம் ஆதேயம். ஆதாரம் பிரமம். சங்கராச்சாரியார், தமது இல்லத்தில் இருக்கிறபொழுது அவரது சேவகன், வெளியிலிருந்து வீட்டிற்கு வரும்போது, படலைக்கதவைச் சத்தம் வரக்கூடிய விதமாகச் சாத்திக்கொண்டு வந்தானாம். அப்போது ஸ்ரீ சங்கரர், 'யாரது?' என்று வினவ, 'அது நான்' என்றானாம் சேவகன் அப்போது ஸ்ரீ சங்கரர் சொன்னது, ஒன்றில் நானை அகண்டமாக்கிக்கொள், அல்லது நானைச் சுருக்கிக்கொள் என்பது எனக்குள்ளே இருப்பது பிரமம் என்றால் நான் பிரமமே என்பதும் சரியாகும். நான் பிரமம் அல்லது நான் சிவம் (சிவோகம்) என்ற பாதையில் சென்று 'நானை' அகண்டமாக்கிக்கொள், அல்லது நான் பிரமத்தின் பிம்பமே தவிர பிரமம் அல்ல என்று கொண்டு 'நானைச் சுருக்கிக்கொள்' என்பது ஸ்ரீ சங்கரருடைய விளக்கம், மேற்போந்த விவாதங்களில் இருந்து கடவுள் இருக்கிறார் என்று நிரூபணமாகிவிட்டது ஆனால் 14லோகம், 224 புவனம், 33கோடி தேவர், போன்ற கதைகளை நாம் நிரூபிக்க முடியாது. அது நமக்குத் தேவையுமில்லை. சில சில தத்துவங்களை, இப்படிக் கதையாகப் பெரியவர்கள், பாமரருக்காகச் செய்திருக்கலாம். கடவுள் இருக்கிறார் என்பது தெளிவ கிவிட்டது. மறுபிறப்பு உண்டு என்பது, மறுபிறப்புகள் என்ற அத்தியாயத்தில் தெளிவாக்கப்பட்டுள்ளது இன்னும்பல கேள்விகளுக்கு விடைகளாக, பல அத்தியாயங்கள் பின்னே வருகின்றன.

[பிரமத்தை ஆத்மா என்றும் ஆத்மன் என்றும் அத்வைதிகள் விபரிப்பார்கள். 'நான் ஆத்மன்' என்று ஒத்துக்கொண்டோம். ஆத்மன், சைவசித்தாந்திகள் கூறும், ஆணவத்தோடு கூடிய 'ஆத்மா' அல்ல. இருளாகிய ஆணவத்தோடு கூடிய ஆன்மாக்கள் முடிவிலி எண்ணிக்கையில் உள்ளதாகச் சைவ சித்தாந்தம் கூறும். முடிவிலி என்று சொன்னால் தருக்கத்திற்கு முரண்பட்டது. முடிவிலி எண்ணிக்கையான ஆன்மாக்கள் இருக்க, முடிவிலி பரப்பளவான இடம் எடுக்கும். அப்படியாயின் பரம்பொருளாகிய சிவம் இருக்க இடம் இல்லாது போய்விடும். சிவம் எங்கும் நிறைந்தவர், என்று சொல்லுகிறபோது அதற்கு அர்த்தம் அற்றுப் போய்விடுகிறது. சிவம் நீரின் கண்ணே நின்ற சூடுபோல வியாபித்திருக்கிறார் என்றால் நீர்–பார்த்தம், சூடு–பண்பு, என்ற முறையில் ஒரு பொளாகிவிடும் சிவமும் ஆன்மாக்களும் ஒரேபொருளென்று வந்துவிடும். இது சித்தாந்தக் கோட்பாட்டுக்கு முரண். ஆகவே ஒருவனுக்குள்ளே இருக்கும் 'நான்' என்றது, சித்தாந்திகள் கூறுமாப்போல் ஆணவத்தோடு கூடிய ஆன்மா அல்ல, ஆனால் பிரமமே என்று அறிக.]

அகண்டமாக்கி, நான் பிரமமே என்று கூறினால், பிரமம் ஏன் மயங்கி, அறியாமைக்கு உட்பட்டது என்ற கேள்விக்கு. அத்வைதிகள், பிரமம் மயங்கவில்லை என்பதை நிறுவியிருக்கிறார்கள் ஒருவன் விடுதலை அடைந்த நிலையிலேதான் இருக்கிறான்; இடையிலே விடுதலை அடைந்தால் இடையிலே விடுதலை கெட முடியும் என்ற விவாதம், சுவாமி விவேகானந்தரால் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விவாதம் மொழிபெயர்க்கப்பட்டு, 'மறுபிறப்புக்கள்' என்ற கட்டுரையின் பிற்பகுதியில் வருகிறது. அதனை அறிந்து நமது சந்தேகத்தை தீர்க்கலாம் ஜீவன் விடுதலை அடைந்தபடியே இருக்கிறான். அதனை அவன் அறியாது இருக்கிறான். நாம் கனவு காணும் போது, எத்தனையோ நிகழ்ச்சிகள் மனத்திரையிலே ஓடி மறைகின்றன. விழித்தபொழுது எல்லாமே பொய் என்றும் நாம் சாட்சியாக இருந்தோம் என்றும் புரிகிறது. அதேபோன்று அறியாமை என்ற திரைப்படம் ஓடி முடிய ஒருவனுக்கு விடுதலை வெளிப்படையாகிறது.

இதே கட்டுரையில் படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை பற்றியும் ஆராயவேண்டும். ஏனென்றால் படைத்தவன் (Creator) எவனோ, அவனே கடவுள் என்பது எல்லோரது விளக்கமும். ஆதலால் அதனை ஆராயவேண்டும். எல்லாவிடமும் வியாபித்திருப்பது பிரமம். பிரமத்தின் ஆற்றலாகிய மாயாசக்தியும் எல்லா இடமும் இருக்-

கிறது. நாம் ஐம்புலன்களாலும், வேறு கருவிகளாலும் காண்பது மாயையே, உலகமாகத் தோன்றியிருப்பது மாயை. இது ஆதேயம். இதற்கு ஆதாரம் பிரமம். ஆகவே, உலகு படைக்கப்பட்டபடியே இருக்கிறது. இதற்கு தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை, தொடக்கம் முடிவு உள்ளது மெய்ப்பொருளாகாது. ஆனால், இந்த உலகு ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒடுங்கி, இன்னோர் இடத்தில் விரியலாம். உதாரணமாக, ஒரு நாடு கடலால் சூழப்படலாம் அவ்வளவு சக்தியும் இன்னோர் இடத்தில் விரியலாம். சக்திக் காப்புவிதி எப்பொழுதும் பேணப்படும் என்க. மேலும் இந்த படைக்கப்பட்ட உலகிலே, மாயையின் மாறுதலுக்கு ஏற்றபடி ஜீவர்கள் தோன்றுவது, மறைவது நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. ஆதாரம் பிரமம். ஆகவே, மாயா சக்தியே பிரம ஆதாரத்தில் முத்தொழிலையும் ஆற்றுவதாகவும் பிரமம் ஆதாரமாக இருப்பதாகவும் கொள்க. சடப்பொருளான மாயை இயங்குவது சத்தாகிய பிரமத்தின் இணைப்பால் என்க.

ஆகவே, இதுவரை தருக்க ரீதியில் இறைவன் இருக்கிறார் என்றும், அவரே எல்லா இடமும் வியாபித்திருக்கிறார் என்றும் கண்டு கொண்டோம் கடவுள் இருக்கிறார் என்று, தருக்க ரீதியில் ஆராயும் நாம்தாம் கடவுள். பச்சைக் கண்ணாடி போட்டுப் பார்ப்பவனுக்கு உலகம் பச்சையாகத் தோன்றும். மனத்திலே பன்மை (அறியாமை) உள்ளவன், உலகைப் பலவாக, பல ஜீவர்களாக, பல பல வித்தியாசங்கள் உள்ளதாகக் காண்கிறான். மனத்திலே ஒருமை உள்ளவன், ஒன்றாகவே உலகையும், உயிர்களையும் காண்கிறான். குறைபாடு எமது பார்வையிலே தான் என்பார் பகவான் சத்ய சாயி. அத்வைத தத்துவததை விளங்கிக் கொள்வது கடினம் என்ற ரீதியில் சுவாமி விவேகானந்தர் பேசியதைக் கேளுங்கள்.

"எந்த நாட்டிலும் சரி, அதிகூடிய சிந்தனைத்திறன் உள்ளவர்கள் கூட, அத்வைதத்தை விளங்குவது கடினம்; நாங்கள் அந்த அளவுக்குப் பலயீனப்பட்டு விட்டோம்; அவ்வளவு கீழ் நிலையராகி விட்டோம். எல்லோரும் என்னிடம் "சுகமான சமயம்" ஒன்று சொல்லுங்கோ என்று கேட்கிறார்கள். மிகச் சிலரே, உண்மையைக் கூறும்படி கேட்பது. இவர்களுள்ளும், மிகக் குறைந்தவர்களே உண்மையை அறிந்து, கற்றுக் கொள்ளத் துணிகிறார்கள். இவர்களுள்ளும் ஒருவர் இருவரே உண்மைத் தத்துவத்தினை, நடைமுறை வாழ்வில் வாழ்ந்து காட்டுகிறார்கள். மக்களில் குற்றமில்லை. இது மூளையின் பலயீனம். உயர்ரகமான, ஒருபுதிய சிந்தனை, அவர்களது மூளையைக் குழப்புகிறது. மூளைச் சதையில், புதிய பாதையைத் திறக்கப் பண்ணுகிறது. இது உடல்

அமைப்பைக் குழப்பி, மனிதனுடைய சமநிலையை இழக்கச் செய்கிறது. மக்கள், சில குறிப்பிட்ட சூழலுக்கு பழக்கப்பட்டுப் போனார்கள். அத்வைதத்தை ஏற்கிறதென்றால், புராதன மூடக்கொள்கைகள், பரம்பரை மூடக்கொள்கைகள், வர்க்க (வகுப்பு) மூடக்கொள்கைகள், நாட்டு மூடக்கொள்கைகள், இவற்றை விட மனிதனுக்கு இயல்பாக இருக்கிற மூடக்கொள்கைகள் எல்லாவற்றையும் தாண்டவேண்டும். இருப்பினும் ஒரு சில வீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உண்மையைப் புரிந்து, பின்பற்றி முடிவுவரை செல்கிறார்கள்.''

ஆகவே கடினமான நெறியாயினும், பகவான் ஸ்ரீ சத்யசாயி, இதனையே மக்களுக்கு எடுத்துரைக்க முன் வந்திருக்கிறார். பெரிய அவதார புருடர்கள், ஜீவர்களுடைய காரண, சூக்கும சரீரங்களடங்கிய மனவுடம்பை, தமது ஒளியினால் பிரகாசிக்கச் செய்து, தாம் வந்த தர்ம ஸ்தாபன நோக்கத்தை நிறைவேற்றியே தீருவார்கள். இந்த அத்தியாயத்திலே, பகவான், அத்வைதம் சம்பந்தமாக அண்மையில் பேசிய சில கருத்துக்களை கீழே தருகிறோம். இவர் இங்கு ஆத்மா அல்லது ஆத்மன் என்று குறிப்பிடுவது பரப்பிரமத்தையே. பரப்பிரமந்தான், பரமாத்மா, பிரமம் என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது என்பதையும், நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். சத்ய சாயி பகவான் பேசிய அத்வைதக் கருத்துக்கள் பதினொன்று (11) கீழே தரப்பட்டுள்ளன;—

**1. நான் யார் என்பதற்குப் பதில் காணும் வரை சாதனை தொடர வேண்டும்.**

பஜனை, பூசை, தியானம் இவை யாவும் மனதை ஒரு முகப்படுத்தும் தற்காலிக வழிமுறைகளேயன்றி நிரந்தரமான இலட்சியத்தைப் பெற்றுத்தர வல்லவையாகமாட்டா. 'நான் யார்' 'நான் யார்' என்று கேட்டுக் கொண்டேயிருத்தல் வேண்டும். இதற்குப் பதில் காணும்வரை சாதனை தொடர வேண்டும். என் உடல், என்மனது, என்புத்தி, என் உடமை என்று கூறிக்கொண்டே போனால் 'நான்' என்பது 'எது' என்று தேடுவதில் நாட்டம் அதிகமாகும். இவை யாவும் இந்தத் தேகத்தை குறிப்பவையே. அப்படியானால் அந்த உண்மையான 'நான்' என்பது எது? தேகம் ஜடம் ஜடப்பொருள். எப்படி இது சாசுவதமான பொருளை உணரமுடியும். தன்னை எவராவது நிந்தித்தாலும், திட்டினாலும், அல்லது போற்றினாலும் அது யாரைக் குறிப்பிடுகிறது என்று ஆராய்ந்து பார்த்தால் அது தேகத்திற்கேயல்லவா உரியது. இதனால் பாதிக்கப்பட

வேண்டியது தேகமே. அந்த தேகத்திற்குரியது 'நான்' அல்ல என்று விவேகத்துடன் வாதிக்க வேண்டும். ஆகவே இந்த நிந்தனையும், பாராட்டும் தன்னை எவ்வகையிலும் பாதிக்காது என்ற பக்குவம் பெறவேண்டும். தேகம் எப்படி மற்றொரு தேகத்தை தூஷிக்க முடியும்? இது சாத்தியமற்றதல்லவா? ஆத்மா மற்றொரு ஆத்மாவை தூஷிக்குமா? இது சாத்தியமேயில்லை. ஏனெனில் ஆத்மா ஒன்றே. எங்கும் வியாபித்திருப்பது ஒரே ஆத்மஸ்வரூபம்.

2. நானே அந்த ஞானம்:-

ஜீவனுக்கு அஞ்ஞானம் அகலாமல் 'நானே இறைவன்' என்கிற பாவனை ஏற்படாது. இறைவனின் சொரூபம் ஞானம். அது சுயம் ஜோதி பிரகாசம். அந்தப்பிரகாசமே 'நான்' என்றும் எப்பொழுதும் எண்ணிக்கொண்டிருந்தால் தான் அத்வைதம் கைகூடும். பொருளைத் தென்படச் செய்வது வெளிச்சம். பகலில் சூரிய பிரகாசத்தினாலும், இரவில் சந்திர ஒளியாலும், நட்சத்திரங்களின் பிரகாசத்தாலும், விளக்கின் வெளிச்சத்தினாலும் பொருள்களைப் பார்க்கின்றோம். இது சூரிய பிரகாசம் என்றும் இது சந்திரனின் ஒளி என்றும் இது விளக்கின் வெளிச்சம் என்றும் நாம் கண்களின் வாயிலாக அறிந்து கொள்கிறோம். உறக்க நிலையில் கண்கள் மூடிக்கொண்டுள்ளன. ஆனால் கனவில் எல்லாப் பொருள்களையும் பகலில் பார்த்ததைப் போன்றே பார்க்கிறோம். ஆனால் இவைகளைப் பார்ப்பவர் யார்? அனுபவிப்பவர் யார்? புத்தி தன்னுடைய தேஜோமயமான ஞானத்தினால் பொருட்களைப் பார்க்கின்றது. ஆனால் உறக்க நிலையில் அந்தப் புத்தியும் கூட இல்லையல்லவா! எனினும் ஆனந்தத்தை அனுபவிக்கிறோம் இந்த ஆனந்தத்தை அனுபவிப்பவர் யார்? அதுவே ஆத்மா. "இந்த ஆத்மாவே நான், நானே ஆத்மா" என்கிற உண்மையை குறிப்பறிந்து கொள்ள வேண்டும், ஆத்மாவின் வாயிலாக புத்தியையும் புத்தியின் வாயிலாக கண்களையும் கண்ணின் வாயிலாக பொருட்களையும் நாம் குறிப்பறிந்து கொள்கிறோம்.

3. அத்வைதம்:-

சுவாமி பேச்சுக்கள் அத்வைதத்தோடு கூடியவைகளாக இருக்கின்றன. ஏனெனில் துவைதம் எதுவும் இங்கு இல்லை அதாவது மற்றொன்று எதுவுமில்லை இங்கு "ஏகமேவ அத்விதியம் ப்ரஹ்ம" உள்ளது ஒன்றே! எவ்வளவு விதமாக கூறினாலும் அவ்விடத்திற்கே வந்து சேர்ந்தாக வேண்டும். உலக சம்பந்தமான விஷயங்களில் பரிசீலனை செய்யும் பொழுது அதற்கு ஒரு கர்த்தா, கர்மம், கிரியை

என மூன்று இருக்கின்றன. சுவாமிக்கு மட்டும் இங்கு கர்த்தா, கர்மம், கிரியை இம்மூன்றும் ஒன்றே! குழந்தைகளுக்கு சொல்லும் பொழுது மட்டும் கர்த்தா, கர்மம், கிரியை இவைகளனைத்தையும் கடைப்பிடித்தல் வேண்டும். அதையும் கூட அர்த்தம் செய்து கொள்ள முடியாத மூர்க்கர்கள் (கீழ் மக்கள்) இருக்கிறார்கள்! சுவாமி எவ்வளவு மார்க்கங்களில் பிரயாணம் செய்த போதிலும், அத்வைத கம்மியத்திற்கு மட்டுமே போய்ச்சேர்கிறார். "என்வாழ்க்கையே என் செய்தி" அதை நீங்கள் அனுசரித்து அத்வைதத்தை (இரண்டன்மையை) அர்த்தம் செய்து கொள்ளுங்கள்! அப்பொழுது உலகம் முழுவதையும் தூய்மைப்படுத்தியவர்கள் ஆகிவிடுகிறீர்கள். அத்வைத தத்துவத்தை அர்த்தம் செய்து கொண்ட கணமே விருப்பு வெறுப்புகள் மாயமாய் மறைந்து விடுகின்றன. அகங்காரத்தை அகற்றிக் கொள்ள அத்வைதத்தை அனுசரித்தல் வேண்டும்.

### 4. நான்

இந்த "நான்" என்பது உண்மையில் யார்? இது என் குடை என்றால் அது வேறு "நான்" வேறு என்று புரிகிறதல்லவா? அதே போல் இது என் "தேகம்" என்கிற போதும் தேகம் வேறு, "நான்" வேறு என்று தானே பொருள்படும். இந்த சின்ன விஷயத்தைக் கூட சரிவரப்புரிந்து கொள்ளாமல் இருப்பது விந்தையே.

### 5. "I" நான் என்றதன் உண்மை:

இந்த "I" எங்கிருந்து வருகிறது? இப்போது இங்கே வீற்றிருக்கும் I. J. Naidu என்பவர் யார் என்று கேட்டால் "I" என்ற பதிலே அவரிடமிருந்து வரும். வைஸ்சான்ஸ்லர் சராஃப் யாரென்றால் அவரும் "I" என்பார். ரிஜிஸ்டிரார் சக்கரவர்த்தி யாரென்றால் அவரும் "I" என்பார். கண்ட்ரோலர் நஞ்சுண்டையாவும் "I" என்பார் இப்படியாக எவரைக் கேட்டாலும் "I" என்ற பதிலே வரும். இவர்களின் பெயர்களும், உருவங்களும் செய்யும் பணிகளும் வெவ்வேறாக இருப்பினும் என்னுடைய கேள்விக்கு எல்லோரும் கொடுக்கும் பதில் "I" என்பதே. இந்த "I" என்பது எங்கும் வியாபித்துள்ளது. இது காலதேச வர்த்தமானங்களுக்கப்பாற்பட்டது. ஒருவர் எந்தத் தேசத்திலிருந்தாலும், எந்த இடத்திலிருந்தாலும் "I" என்றேதான் கூறுவார். இதில் மாற்றமே இருக்காது. இதுவே ஆத்ம தத்துவம். இது வளருவதுமில்லை. குறைவதுமில்லை. இதுவே மனித மேம் பாடு என்பதை உணருங்கள்.

6. முதன்முதல் சிருஷ்டிக்கப்பட்டது இந்த "நான்":

'நான்' 'நான்' எனப்படும் இந்த ஆத்ம தத்துவம் எங்கும் நிறைந்துள்ளது ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து முதல் முதலில் தோன்றிய பெயர் என்னவென்று கண்டுகொள்ள முயன்றால் முதல் முதலில் தோன்றியது 'நான் (1) என்பதே என்று புலப்படும். இது பிரணவமான 'ஓம்' காரத்திற்கும் முன்பே கூட இருந்ததாகும். முதன் முதலில் சிருஷ்டிக்கப்பட்டது இந்த 'நான்' என்பதே. இந்தப் பதத்தின் உண்மையான பொருளை ஒருவர் உணர்ந்தால் அவரே மெய்யறிவு பெற்றவரெனப் படுவார். இந்த 'நான்' என்பதே எல்லா இடங்களிலும் நீக்கமற இருப்பது. உருவங்களும், பெயர்களும், சித்தாந்தங்களும் வெவ்வேறாக இருப்பினும் எல்லோரிடமும் இருந்து 'நான்' என்ற பொதுவான பதில் வருகிறதல்லவா? பெயர்கள், உருவங்கள், வாழும் பிரதேசங்கள், மற்றும் அவர்களின் உணர்வுகள், பணிகள், தன்மைகள், ஆற்றல்கள் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் யாவும் வேறுபட்டிருக்கலாம். இருப்பினும் இந்த 'நான்' என்பது யாவருக்கும் சமமானதே. மனதில் விழ்ந்திடும் மாயத்தோற்றங்களே இந்த வேறுபாடுகளுக்குக் காரணமெனலாம்.

7 பிரம்மம் எட்டு விதமாய் விளங்குகிறது:

பிரம்ம தத்துவத்தை விளக்குவதே வேதம். இந்தப் பிரபஞ்சமனைத்தும் வேதத்தைச் சார்ந்தே இயங்குகின்றது. சத்தியத்தின் வடிவமே வேதம், இது எட்டுவிதமான வழிகளில் பிரகாசிக்கிறது (1) சப்த பிரம்மமயி (எங்கும் நிறைந்த நாதப் பிரமமாக விளங்குவது.) (2) சராசரமயி (ஒரே நிலையில் அசையாமலிருக்கும் பொருட்கள் மற்றும் நகர்ந்து கொண்டேயிருக்கும் பொருட்கள், [தாவர சங்கமப் பொருட்கள்.] எல்லாவற்றிலும் பரவியுள்ளது.) (3) ஜ்யோதிர்மயி (எங்கும் ஊடுருவும் ஒளிமயம்) (4) வாங்மயி (பேசும் சொற்களில் பிரதிபலிப்பவை) (5) நித்தியானந்தமயி (நிலையான ஆனந்தத்தை அளிப்பவை.) (6) பராத் பரமயி (எல்லா இடங்களிலும், எல்லா நிகழ்ச்சிகளுக்கும் காரணமாயிருக்கும் தன்மை) (7) மாயாமயி (மாயையாகத் தோற்றமளிக்கும் தன்மை) (8) ஸ்ரீமயி (சகலவித சௌபாக்கியங்களும கொண்ட தன்மை.)

8. வேற்றுமையான உருவங்களிடையே ஒற்றுமை காண்பதே பிரம்ம ஞானம்:

எல்லோரும் தெய்வத்தின் குழந்தைகள். மனிதகுல நாயகன் அந்தத் தெய்வமே. பெயர்களிலும் உருவங்களிலும் வேறுபட்ட வகையில் பலவிதமான பழக்க வழக்கங்களும், மதப்பற்றுகளும் ஏற்பட்டிருந்தாலும் எல்லோருக்கும் அப்பனான தெய்வம் ஒன்றே என்பதில் ஐயமேதுமில்லை, இதை அறிவதுதான் "பிரம்ம ஞானம்" அல்லது மெய்ப்

பொருளறிவு எனலாம். இந்த அறிவைப் பெறுவது சாத்திரங்களைப் படிப்பதாலோ விவாதங்களில் ஈடுபடுவதாலோ சாத்தியமாகாது. ஒவ்வொரு ஜீவியும் பிரம்மத்தின் உருவமே என்ற உண்மையை உணரவேண்டும் வேற்றுமையான உருவங்களிலுள்ள இந்த அடிப்படை ஒற்றுமையைக் காண்பதே பிரம்ம ஞானம்.

9. அஹம் உருவத்தோடு சேரும் போதுதான் அஹங்காரம் ஏற்படுகிறது.

'அஹம்' என்றால் 'நான்' என்று பொருள், 'அஹம்' என்பது 'ஆ' காரத்துடன் அதாவது உருவத்துடன் சேரும் போதுதான் அதை இனம் காணமுடிகிறது அஹம் என்பது ஆத்மாவையே குறிக்கும். இது உருவத்துடன் சேர்ந்துவிடும் போதுதான் 'அகங்காரம்' ஏற்படுகின்றது.

10. நீறுபூத்த நெருப்புப்போல ஆத்மா மறைந்திருக்கிறது:

தேகமென்பது பிணிகளும் துன்பங்களும் நிறைந்த கூடை போன்றது. அழுகிப்போகும் காய்கறிகள் போன்றதே, இது பவசாகரமென்னும் சம்சாரக் கடலைத் தாண்ட உதவ முடியாது. இப்படிப்பட்ட சாசுவதமில்லாத, அழிந்து நசித்துப் போகக்கூடிய நீர்க்குமிழி போன்ற தேகத்திற்காக அதிகப்பாடுப்டுகிறான் மனிதன். நிலையான உயர்ந்தான ஆத்மதத்துவத்தை அறிந்து கொள்ள முயற்சி செய்வதில்லை. இது மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியன் போலவும், நீறுபூத்துள்ள நெருப்புப் போலவும், இமைகளால் மூடப்பட்ட கண்கள் போலவும், பாசியினால் மூடப்பட்ட நீர் போலவும், விருப்பு வெறுப்பெனும் (ராகத்வேஷம்) திரையினால் மூடப்பட்டுள்ளது. மேகங்கள் மறைந்துமே சூரியனைப் பார்க்கிறோம் மேலுள்ள நீற்றினை நீக்கினால்தான் நெருப்புப் புலப்படுகிறது. அதேபோல் ராகத்வேஷமெனும் போர்வையை விலக்கினால்தான் ஆத்மாவை உணரமுடியும்.

11. ஆத்ம தத்துவம் :-

விழிப்பு நிலையில் அனைத்தையும் பார்க்கிறோம். அனைத்தையும் அனுபவிக்கிறோம். கனவு நிலையில் விழிப்பு நிலையில் பார்த்த காட்சிகளேயன்றி பார்க்காத காட்சிகளும் கூட வருகின்றன. அனுபவிக்கிறோம். கனவு நிலையில் இல்லாத ஆனந்தத்தை உறக்க நிலையில் அனுபவிக்கிறோம். விழிப்புநிலை, கனவுநிலை, உறக்கநிலை இம்மூன்று நிலைகளும் வெவ்வேறானவைகளாக இருக்கின்றன. ஆனால், இந்த மூன்று காலங்களிலும் அனுபவிக்கும் "நான்" மட்டும் உண்மை. அதுவே ஆத்மா! சர்க்கரையை (சீனியை) தண்ணீரில் போடுகிறோம் அது கரைந்து எல்லா இடங்களிலும் வியாபிக்கின்றது. நாம் கண்களால் பார்த்து, கையினால் எடுத்துப் போடப்பட்ட சர்க்கரை தண்ணீரில் கரைந்து விடுகிறது, கரைந்த பருகி சர்க்கரை கண்களுக்குத்தென்படுவ-

தில்லை கைகளுக்கும் கிடைப்பதில்லை. கைகளுக்கும் கிடைப்பதில்லை. நாக்கின் மீது தண்ணீர்த்துளிகளை வைத்தால் இனிக்கிறது. எல்லா இடங்களிலும் வியாபித்த அந்த இனிப்பே சத்தியம். அதுவே ஆத்மா! கண்களுக்கு தென்படமாட்டாது. ஆகவே, குணங்களற்றது; நிறைவோடு கூடியது, இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருப்பதனால் அவர் பிரபு! ஊகங்களுக்கும், சொற்களுக்கும் நேரடி சான்றுகளுக்கும் அகப்படாதவர் ஆனதினால், அவர் அறியப்படாதவர். இறைவனின் ஒவ்வொரு பெயரின் உட்பொருள்கள் ஒப்பற்றவைகளாகும். அனைத்துப்பெயர்களும் இறைவனுடையவைகளே! ஒருமைப்பாட்டை நிரூபிக்கக் கூடியவைகளே. இறைவன் ஒருவனே! அனைவரும் இறைவன் அம்சமே "நான்" "என்னுடையது" என்கிற அகங்கார மமகாரங்களை அகற்றி, தன்னைத்தானை அறிந்து கொள்வதே இறைத்தன்மையை அறிந்துகொள்வதாகும். அகங்கார மமகாரங்களை அகற்றிக்கொள்ளும் பொழுதுதான் நமக்கு அந்தத்தத்துவம் அர்த்தமாகிறது. தேகத்துவத்தை அர்ப்பணம் செய்யவேண்டும்; மானசிக தத்துவத்தை அர்ப்பணம் செய்யவேண்டும்; பாவனை தத்துவத்தை அர்ப்பணம் செய்ய வேண்டும். செயலாற்றும் பணியின் பயனை அர்ப்பணம் செய்ய வேண்டும். அப்பொழுது மிகுந்திருப்பது ஒன்றுமட்டுமே! தாயும் நீயே; தந்தையும் நீயே; நண்பனும் நீயே; சுற்றமும் நீயே; தாய் தந்தையர், நண்பர்கள், சுற்றத்தவர் இவர்களனைவரும் என்றைக் காவது ஒருநாள் இவ்வுலகை விட்டுச் செல்லக்கூடியவர்களே! ஆனால் "நீ" என்பது மட்டும் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. அனைத்திலும் உள்ள அந்த "நான்" என்பதே சத்தியம்! அந்த "நான்" (I) தத்துவத்தை குறிப்பறிந்து கொள்ளவேண்டும். நான் யார்? நான்யார்? என இடையறாது கேட்டுக் கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் "I" என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. ஓர் எழுத்து ஐ (I) க்கு "நான்" என்பது பொருளாகும். மூன்று எழுத்து "ஐ" (eye) க்கு "கண்" என்பது பொருளாகும். ஓர் எழுத்து "I" ("நான்") என்பதே ஆத்மா. நான் எம். ஏ. பரீட்சையில் தேர்ச்சியடைந்துவிட்டேன்; நான் பி. ஹெச். டி. படித்துக்கொண்டிருக்கிறேன்; நான் பிராமணன்; நான் க்ஷத்திரியன்; நான் வைசியன், நான் இளைஞன், நான் வயோதிகன் இந்த விதமாக பாவிப்பது தேகத்துவம் "நான்" என்கின்ற நபர் இவைகளில் எதுவுமே அல்ல, இளைஞன் அல்ல; வயோதிகன் அல்ல; பிராமணன் அல்ல; சூத்திரன் அல்ல; அவனுக்கு வயதுவேறுபாடில்லை; குலவேறுபாடில்லை; எந்தவேறுபாடும் இல்லை அந்தநான் என்பதை இலட்சியத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அதுவே எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது. எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஏகத்வத்தை (ஒரு பொருளாயிருக்கும் தன்மையைக்) குறிப்பறிந்து கொள்வதே உண்மையான ஆத்ம தத்துவம்.

## 2 மறுபிறப்புக்கள்

கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள், மறுபிறப்பை பொருட்படுத்துவதில்லை. அதனால் நம்பிக்கை வைக்கவில்லை. ஆனால் இந்து, பௌத்தம் ஆகிய மதங்களுக்கு மறுபிறப்புக் கொள்கை உயிர் நாடியாகவே இருக்கிறது. இதனை நிருபிக்காமல் விட்டால், சிந்தனையாளர் ஏற்கமாட்டார்கள். சுவாமி விவேகானந்தரின் நிறுவலையே இங்கு எனது மொழியில் (விளக்கத்தில்) தருகிறேன்.

நாளையை (எதிர்காலத்தை) இன்றையது (நிகழ்காலம்) நிர்ணயிக்கிறது. இன்று படிக்கிறோம், நாளை தொழில் செய்ய. இன்று வீடுகட்டுகிறோம், நாளைக்கு வாசஞ் செய்ய இது உண்மையென்றால், இன்றையதை நிர்ணயித்தது முந்தியது. நாம் இன்று இன்ன இன்ன ஆற்றல் பெற்றோம் என்றால், அது நேற்று (முன்பு) செய்த தன் விளைவு. பிள்ளைபிறந்தவுடன் சிலபிள்ளை மூளைசாலியாக இருக்கிறது அதுவாழ்க்கையில் உயரமாகக் கற்கிறது. இந்த அறிவு விருத்தி, முன்னய பிறவியில் செய்யப்பட்டிருந்தது. உயர்தர வகுப்பில் பல மாணவர்கள், வைத்தியத்துறைக்கு படிக்கிறார்கள் சிலரே வைத்தியத்துறைக்கு தெரிவுசெய்யப்படுகிறார்கள். அவர்களிலும் ஒரு சிலர் மிக வேகமாகப் படித்து திறமைச் சித்திகளை அடைகிறார்கள். இது பழைய தொடர்பு. இதனையே வாசனா ஞானம் என்பார்கள்.

மேற்கத்திய ஆராய்சியாளர், மனதிலே உள்ள ஆற்றல்கள் உடலிலே பதியும் என்றும் உடலில் இருந்து, கருவை உண்டுபண்ணும் கலம் செல்கிறபோது அந்தக்கலத்தில் (bioplasmic cell) ஆற்றல்கள் பதியப்பட்டுச் செல்வதால், புதிய சிசுவிற்கு பரம்பரையான ஆற்றல்கள் வந்துவிடுகின்றன என்றும் சிந்திக்கிறார்கள். அந்தக் கலத்திலே, எங்கே, எப்படி ஆற்றல்கள் பதியப்பட்டிருக்கின்றன என்பது இன்னமும் நிருபிக்கப்படமுடியவில்லை. ஆதலால், ஒருவனுடைய ஆற்றலுக்கு பெற்றோர் வழியாக, ஆற்றல் வந்துள்ளது இன்னமும் நிருபிக்கப்படவில்லை. அணுவை பிளந்து கொண்டால் அது சக்தியே என்று தெளிவாகிறது அதேமாதிரி. கலத்தைக் கூறுபோட்டு, கூறுபோட்டுப் போனால் சக்தியிலேதான் முடிவடையும். பெற்றோர், உடம்பை உற்பத்தியாக்குவார்கள். உயிர் எனப்படும் மனவுடம்பு, பின்பே உட்புகும் என்க. மனவுடம்பு என்பது காரண -சூக்கும சரீரத்தை இசைஞானி ஒருவனுக்கு, மகன் இசைஞானியாக இருக்கிறான் என்றால், மனத்திலே இசைப்பிரியம் உள்ள மனவுடம்பு இசைஞானியின் குடும்பத்திலே பிறக்க விரும்பியது என்க. மனவுடம்பே

உயிர் என்றும் அதனை இயக்குவது பிரமம் என்று ஓரே கொள்கை. வெளிச்சத்தில் ஒருவன் கல்வி பயிலுகிறான். அதே வெளிச்சத்தில் ஒருவன் களவுசெய்கிறான். சூழல் ஒன்று. ஆட்களின் மனத்தைப் பொறுத்து, கருமம் வேறுபடுகிறது. நாமே நமது எதிர்காலத்தைப் படைப்பதும், இறந்தகாலத்தைப் படைத்ததும். ''நாம்'' என்று சொல்கிறபோது இற்றைவரை காலமும் பரிணாமவளர்ச்சி அடைந்து வந்த ''நாம்'' என்று கொள்ளல் வேண்டும்.

மேற்கூறிய விவாதங்களில் இருந்து, மனம் என்று ஒன்று (காரண-சூக்கும சரீரம் என்றும் மனவுடம்பு என்றும் கூறுவார்கள்) தொடர்ந்து பிறவி எடுத்துக்கொண்டே இருக்கிறது. மனவுடம்பு (காரண—சூக்கும சரீரம்) ஆற்றும் சிந்தனைகளுக்கு ஏற்றபடி, ஸ்தூல உடம்பு செயற்படுகிறது- சிலவேளைகளில், ஸ்தூல உடம்பு செயற்படாதிருக்கவும், மனவுடம்பு சிந்தனைகளைச் செய்து கர்மம் புரிகிறது. இந்த மனவுடம்புக்கு வல்லமை கொடுத்தது, பரப்பிரமம். பரப்பிரமம் எவ்விடத்தும் பிரகாசித்துக்கொண்டு ஆதாரமாயிருக்க, அந்தப் பிரகாசம் மனவுடம்பில் பட்டுக்கொண்டு இருக்கிறது அதனால் மனவுடம்பு பிரமத்தின் பிம்பமாகிறது.சூரியன் குடத்து நீர்களில் தெறித்தது போல. பிரமம் ஆதாரமாக இருக்க, மனவுடம்பு (மாயையால் ஆனது) அசையும்போது, மின்குமிழ் அசைவதுபோல இருக்கும் இந்தப் பிம்பத்தையே சாதாரண வழக்கில் 'ஆத்மா' என்று சொல்லுகிறோம். ஆத்மா பிறப்பெடுக்கிறதாக, நாம் சொல்லும்போது பிரமத்தால் பிரகாசிக்கும் மனவுடம்பு, (பிம்பம்), உடம்பு (ஸ்தூலத்தை) எடுப்பதாகக் கொள்ளவேண்டும்.

மனவுடம்பு என்பது காரண சரீரம் சூக்கும சரீரம் இரண்டும் சேர்ந்தது. பகவான் சாயிபாபாவின் கூற்றுப்படி எண்ணம், எண்ண மற்ற தன்மை, உள்நோக்கிச் சிந்தித்தல், அறிவாற்றல், பகுத்தறியும் சக்தி, ஞானம், அபிமானம், மகிழ்ச்சி, பேரானந்தம் ஆகிய ஒன்பது தொழிற்பாடுகளும் மனவுடம்புக்கு உண்டு. இது பிரமப் பிரகாசத்தால் இயங்குகின்றபோது இதனை ஆத்மா எனகிறோம். இதனை நாம் எமது விளக்கத்திற்காக ஜீவாத்மா எனவும் அழைக்கிறோம். ஜீவாத்மா என்பது. ஒரு ஸ்தூல உடலில் வாழ்ந்து வரும்பொது, அதனுடைய சிந்தனை செயல் ஒவ்வொன்றும் அதனைப்பாதிக்கின்றது. ஒரு அறையிலே ஒரு பந்து இருக்கிறது. அதனை பல இளைஞர்கள், காலால் உதைக்கிறார்கள். ஒவ்வொருவருடைய உதையையும் அது வாங்கி, ஈற்றில் ஒரு உதையுடன், ஒருகுறிப்பிட்டதிசையை நோக்கி ஒரு குறிப்பிட்ட விசையுடன், வெளியே பறக்கிறது. அது போன்று

ஜீவாத்மா, சிந்தனை, செயல்களால் உதையுண்டு, ஈற்றில் ஒரு விளைவுச் சிந்தனையுடன் (Resultant thought) ஸ்தூல உடலில் இருந்து பிரிந்து செல்கிறது. இதுவே இறப்பு. பறந்து சென்ற ஜீவாத்மா, இன்னோர், தாயின் கருப்பையில் புதிதாக உற்பத்தி பண்ணப்பட்ட சிசுப் பிண்டத்தில் நுளைந்துவிடுகிறது. அணுவிலும் நுண்ணிய சக்தியலை போன்ற ஜீவாத்மா, பழைய ஸ்தூலத்தை விட்டுப் புறப்பட, பெரிய வாசல் எதுவும் தேவையில்லை. மயிர்த்துளை ஊடாகவேனும் அது பிரிந்துவிடும். பிரிந்து, ஒரு தாயின் கருப்பையை நாடி, எந்த வழியாலும் செல்லலாம். தாயின் சுவாசத்தோடும், சென்று சேரலாம், அல்லது வேறுவிதமாகவும் சென்று சேர்ந்து கொள்ளலாம். நமது ஐம்புலன்களும், ஒரு குறிப்பிட்ட வீச்சுக்குள் (range) அடங்கும் உணர்வுகளையே உணரும். அதற்கு இப்பாற்பட்டதையும், அப்பாற்பட்டதையும் உணரா. சுவாமி விவேகானந்தர், மறுபிறப்பை விளங்கப்படுத்த, சூழல்காற்றை (Whirlwind) உதாரணமாக எடுக்கிறார். நாலாதிக்கிலும் இருந்துவந்த காற்றுகள், ஒரு இடத்தில் சந்தித்து சுழல்கின்றன. அப்போது வெற்றிட நிரல் (column) ஒன்று ஏற்படுகின்றது. அதில் கடதாசிகள், மற்றும் சருகுகள் ஒரு உடல்போன்று திரண்டு சுழலும் பின்பு சுழல்காற்று, கடதாசிச்சருகுகளை போட்டுவிட்டு, இன்னோர் இடத்திற்குச் செல்லுகிறது. அங்கே புதிய கடதாசிச்சருகுகளைச் சேர்த்து வைத்திருக்கும். பின்பு புதிய இடத்திற்குச் சென்று புதிய கடதாசிச்சருகுகளை எடுக்கும். ஈற்றில் சுழல்காற்று விசையும் ஓய்ந்துவிடும். விடயத்திற்கு வருவோம். சிந்தனை, செயல்கள் ஜீவாத்மாவில் சம்ஸ்கராவை (impression) பதிவுசெய்கின்றன. எல்லாப் பதிவுகளும் சேர்ந்து, பெரிய விசையை உண்டுபண்ணுகின்றன. இது பிராணன் என்று அழைக்கப்படும். பிராணன், ஜீவாத்மாவை ஸ்தூலத்திலிருந்து வெளியே தள்ளி, புதிய ஸ்தூலத்துள் சேர்த்துவிடுவான். பிரமப் பிரகாசம், நற்காரியங்களால், ஜீவாத்மாவில் அதிகமாகப் பிரதிபலிக்கத்துவங்கும். பிரமப் பிரகாசம் ஜீவாத்மாவிலே (மனவுடம்பிலே) கூடுதலாகப் பிரதிபலிக்க சிந்தனை, செயல்கள் அற்றுவிடுகின்றன. சம்ஸ்கராஸ் அற்றுப்போகிறது. அதாவது பிராணன் அற்றுப்போகிறது. பிறவியும் அற்றுப்போகிறது. மனவுடம்பு முழுவதும் சக்தியலை நிலையிலிருந்து முற்றிலும் சக்தியாகிவிடுகிறது. எஞ்சியிருப்பது பிரமம்.

ஆகவே ஆத்மா, ஒரு பொழுதும் மாயைக்குள் அகப்பட்டதல்ல, என்று கண்டோம். ஒருவன் எப்பொழுதும் விடுதலை அடைந்தபடியே இருக்கிறான் என்பதை, சுவாமி விவேகானந்தர் கீழே காட்டியவாறும் நிறுவுகிறார்.

'' நீங்கள் இந்தச் சமயச்சடங்குகளைக்கூடச் செய்யத்தேவையில்லாத நிலைவரும் இழந்த சொர்க்கத்தை திருப்பிப் பெற வேண்டும் என்ற யோசனையே இல்லாமலும், நீங்கள் இருக்கலாம் ஏனென்றால் நீங்கள் உங்கள் சொர்க்கத்தை (முக்திநிலை) எப்பொழுதுமே இழந்ததில்லை· நீங்கள் இழக்காத ஒன்றை நீங்கள் ஏன் தேடிப்போக வேண்டும்?. நீங்கள் ஏற்கனவே தூய்மையானவர்கள், ஏற்கனவே விடுதலையானவர்கள். (முத்திநிலை உள்ளவர்கள்). நீங்கள், விடுதலைபெற்ற நிலையினர் என்று நீங்கள் சிந்திததால், இந்தக்கணமே உங்களுக்கு விடுதலை. நீங்கள் கட்டுண்டவர்கள் (bound, not free) என்று நினைத்தால், கட்டுண்டபடியே இருப்பீர்கள். இது ஒரு பெரிய விரமான பிரகடனம். இப்பொழுது இது உங்களைப் பயப்படுத்தலாம்; ஆனால், இதனை நீங்கள் மேலும் மேலும் சிந்தித்து, உங்கள் நடைமுறை வாழ்வில் உணர்ந்தால், நான் சொல்லுவது உண்மை என்று நீங்கள் அறியவருவீ கள் ஏனென்றால், விடுதலை (freedom, முக்தி) என்பது உங்களுடைய ஒட்டிப்பிறந்த பண்பில்லை என்றால், எந்த வழிவகையாலும் விடுதலை அடையமுடியாது. முன்பு ஒருமுறை விடுதலையாய் இருந்து, ஏதோ ஒரு வழியில் அது இழக்கப்பட்டதென்றால், விடுதலையை தேடிச்செல்ல, இப்போ, உங்களுக்கு சுதந்திரம் இல்லை. விடுதலை உள்ளவராக முன்பு இருந்தீர்கள், இப்போ இல்லை என்றால், அந்த விடுதலையை, நீங்கள் இழக்கும்படி செய்தது என்ன? விடுதலை உள்ள ஒன்றை அடிமையாக்க, பி ர ல் ஒரு போதும் முடியாது. உண்மையிலே அது அடிமை என்றால், அதனுடைய விடுதலை ஒருகற்பனையாகும்.''

''இப்போ இந்த இருபக்கத்து நியாயங்களிலும்,எதனை நீங்கள் சாரப்போகிறீர்கள்? ஆத்மாவானது (பரமாத்மா) தனது சொந்த இயல்பினால், தூய்மையும் சுதந்திரமும் பெற்றிருந்தது என்று சொன்னால், அதனைக் கட்டுப்படுத்த அல்லது மட்டுப்படுத்த, இந்தப் பிரபஞ்சத்தில் எதுவும் இருந்ததில்லை என்பது முடிவாகிறது. ஆத்மாவை அடிமைப் படுத்தக்கூடிய ஒன்று இயற்கையில் இருந்திருந்தால், ஆத்மா சுதந்திரமாக இருந்தது என்பது தவறு அது சுதந்திரமாக இருந்தது என்னும் கூற்று ஒரு மாயை (கற்பனை). ஆகவே ,விடுதலை அடைய எம்மால் முடிகிறதென்றால், ஆத்மாவானது இயல்பாகவே விடுதலையானது என்ற முடிபு தவிர்க்கமுடியாதது. வேறு விதமாக இருக்கமுடியாது.''

''சுதந்திரம் (விடுதலை) என்பது புறத்தேயுள்ள எதிலும் தங்கி

யிருக்காமை. அதாவது புறப்பொருள் ஒன்று, அதனைத்தாக்காது இருத்தல், ஆத்மாவானது தாக்கத்திற்கு உட்படாதது (வர்த்தமானம் அற்றது); இதிலிருந்தே, நாம் வைத்திருக்கும் உயர்ந்த தத்துவங்கள் வருகின்றன. ஆத்மாவானது இயல்பாலே விடுதலையானது, அதாவது புறப்பொருள் ஒன்றால் தாக்கப்படாதது, என்பதை ஒத்துக்கொண்டாலே, ஆத்மா அழிவற்றது (அமிர்தத்துவம் பெற்றது) என்பதை நிறுவலாம் ஏனென்றால், இறப்பானது, வெளிக்காரணம் ஒன்றால் உண்டு பண்ணப்பட்ட விளைவு (காரியம்). நான் நஞ்சு குடிக்கிறேன், அதனால் இறக்கிறேன் இதிலிருந்து உடம்பானது புறப்பொருளான நஞ்சினால் தாக்கப்பட முடியும் என்று காட்டப்படுகிறது. ஆத்மாவானது சுதந்திரமானது என்பது உண்மையானால், எதுவும் அதனைத் தாக்க முடியாது என்றும் அது ஒருபோதும் இறவாது என்றும் பொருள் படுகிறது. சுதந்திரம், அமிர்தத்துவம், மங்கலம் என்பது எல்லாம், ஆத்மாவானது வர்த்தமானத்தைக் (தாக்கத்திற்கு உட்படுதலை) கடந்தது என்ற நிலையிலே தான் தங்கியிருக்கிறது அதாவது மாயைக்கு அப்பாற்பட்டது என்பது. ''ஆத்மா ஆதியிலே விடுதலையானது அல்லது இடையிலே விடுதலை பெறுவது'' இந்த இரண்டில் எதனை நீங்கள் எடுப்பீர்கள்? ஒன்றில் முதலாவதைக் கற்பனைஎன்று கொள்ளவேண்டும் அல்லது இரண்டாவதைக் கற்பனை என்று கொள்ளவேண்டும். நிட்சயமாக, நான் இரண்டாவதையே கற்பனை என்று எடுப்பேன். எனது சொந்த உணர்வுகள், விளக்கங்களோடு, கூடுதலாக அது ஒத்துப்போகிறது. நான் இயல்பாகவே விடுதலையானவன் என்பது எனக்கு பூரணமாகத் தெரிகிறது. அதனால் இந்த அடிமைத்தனம் (விடுதலையின்மை) உண்மை, எனது விடுதலை ஒரு கற்பனை என்பதை, நான் ஏற்கமாட்டேன்.''

மேற்படி சுவாமி விவேகானந்தருடைய விவாதத்தில் இருந்து எவனாயினும் ஒருவன், விடுதலை பெற்றே இருக்கிறான். அதனை அவன் அறிந்துவிட்டால், இந்தக்கணமே அவன் இரட்டை உணர்வுகளைக் (இன்ப, துன்ப) கடந்துவிடுகிறான். இந்த அறிவையும், உள்ளே இருக்கும் பிரமமே (ஆத்மாவே) உணர்த்தவேண்டும் என்ற கருத்தில் திருமூலர் பாடுவதைப்பாருங்கள்.

'' நானென்றுந் தானென்றும் நாடினோன் நாடலும்
நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினான்
நானென்று நானும் நினைப்பொழிந் தேனன்றே'' (2777)

தான்வேறு கடவுள்வேறு என்று நினைத்து தேடியபொழுது, அப்படி இரு பொருள் இல்லை என்பதை, ஒரே ஒரு 'நான்' ஆக இருக்கிற ஞானமுதல்வன் (பிரமம்) தனக்கு உணர்த்தினான் என்றும், அதனால் நான், எனது என்ற அற்ப உணர்வுகளை அன்றே நீக்கிவிட்டதாகவும் கூறுகிறார்.

# 3 மனிதனின் உடலமைப்பு

அத்வைத தத்துவத்தைச் சரிவரப் புரிந்துகொள்வதற்கு, உடலமைப்பு பற்றிய அறிவு, அதிகம் வேண்டப்படுகின்றது. உடல், ஐந்து கோசங்களால் (மூடிகள்) ஆனது. ஐந்து கோசங்களினது, தொழிற்பாடுகளையும் பகவான் சாயி பின்வருமாறு கூறுகிறார். ''அன்னமயகோசமென்பது மூன்று முக்கிய உணர்வுகளான பசி, தாகம், தூக்கம் இவைகளைக் கொண்டது. பிராணமயமும் மூச்சை உள்ளிழுப்பது, வெளிவிடுவது, மற்றும் அசையுந் தன்மை என்ற மூன்று சிறப்பியல்புகளைக் கொண்டது (இந்த இரு கோசங்களும் சேர்ந்தது ஸ்தூல உடல்). மனோமயமென்பதும் சங்கல்பம் (எண்ணம்), விகல்பம் (எண்ணமற்ற தன்மை) மற்றும் மனனம் (உள்நோக்கிச் சிந்தித்தல்) என்ற மூன்று இயல்புகளைக் கொண்டது. விஞ்ஞானமய் கோசமென்பது மேதாசக்தி (அறிவாற்றல்), விவேகசக்தி (பகுத்தறியும் சக்தி) மற்றும் விஞ்ஞானசக்தி (ஞானம்) என்ற மூன்று இயல்புகளைக் கொண்டது. (பின்னைய இருகோசங்களும் சேர்ந்து சூக்கும சரீரம் உருவாகிறது.) ஆனந்தமய கோசத்தின் மூன்று இயல்புகள் முறையே பிரியம் (அபிமானம்), மோதம் (மகிழ்ச்சி), பிரமோதம் (பேரானந்தநிலை) என்பவையாகும். (கடைசிக் கோசம், காரண சரீரம் எனப்படும்) ஒவ்வொருவரும் இந்த மூன்று உணர்வுகளையும் அனுபவிக்க விரும்புவர்.'' [தமிழ் சனாதன சாரதி, 1988, ஏப்ரல் பக். 7].

மேற்படி பஞ்சகோசம் அல்லது முச்சரீரம் மாயையால் ஆக்கப்பெற்றது. அதாவது பிரமத்தின் சக்தியால் ஆக்கப்பெற்றது. காரண, சூக்குமங்கள் அணுவிலும் நுண்ணிய சக்தியலைகளால் ஆக்கப்பெற்ற காரணத்தினால், விஞ்ஞானிகளாலும் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. ஸ்தூலம் அணுக்களால் ஆனது மொத்தத்தில் முச்சரீரமும் சக்தியின் இன்னொரு நிலையாகும். சுருக்கமாக விளங்குவதற்காக, காரண—சூக்கும சரீரம் இரண்டையும் சேர்த்து மனவுடம்பு (Mind Body) என்றும் புறத்தே இருப்பதை ஸ்தூலவுடம்பு என்றும், இரு உடம்புகள் இருப்பதாகவும் பேசுவார்கள் [சில இடங்களில் காரண சரீரத்தை மட்டும் மனம் (Mind body) என்றும் சுட்டிப் பேசுவார்கள்] Body, Mind and Self என்று சொல்லும்போது ஸ்தூல உடம்பு, மனம் (காரண சூக்கும சரீரம்), ஆத்மா என்று கொள்ளுகின்றோம். ஆத்மாவுக்கு இந்த உடல்கள் மூடியாக இருப்பதாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால், இதில் நாம் மிக விளிப்பாக இருக்கவேண்டும். எல்லாச் சரீரங்களுக்கும் ஆதாரமாய் இருப்பது பிரமம். ஆனால், காரண சரீரம் பிரமத்தை தெறிக்கும் வலு-

கூடியது (best reflector), சூக்குமம் வலு குறைந்தது. ஸ்தூலம் அதிலும் வலுக் குறைந்தது. பிரமம் காரணத்தில் பட்டு தெறிக்கும்போது அது ஒளிக்கூடாக இருக்கும். காரணத்தை மூடி சூக்குமமும், சூக்குமத்தை மூடி ஸ்துலமும் இருக்கின்ற காரணத்தினால், எம்மை நாம் ஒளிமய மாகக் காணமுடியாது முச்சரீரமும் அமைந்த கூடு உடம்பு. அதற்கு இயங்கும் ஆற்றலைக் கொடுத்தது காரண சரீரத்தில் தெறித்த பிரமம், நாம் இறக்கிறபோது ஸ்தூலத்தை விட்டு காரண – சூக்குமக் கூடு, ஸ்தூலத்தின் ஏதோ ஒரு வாசலால் வெளியே சென்றுவிடுகிறது. சென்று, வேறுஒரு ஸ்தூலத்துள் (சிசுவில்) புகுந்துவிடுகிறது. ஒவ்வொரு பிறவியிலும், காரண சூக்குமக் கூடு வலுப் பெற்றுக்கொண்டே சென்று, முற்றிலும் சக்தியாக மாறிவிடும் கட்டத்தில். ஜீவன் மறைந்து பிரமம் பிரகாசிக்கும். காரண – சூக்குமக் கூடு, ஸ்தூலத்தை எடுக்காமலும் கர்மாவை இயற்றிக் கொண்டு இருந்து, தியான மேம்பாட்டால், சக்தியாகப்போக, அதற்கு ஒளிகொடுத்த பிரமமே எஞ்சியிருக்கும். சில சமயங்களில், காரண சரீரம் மட்டும் பிரிந்து நிலைக்க, சூக்குமம் அழியக்கூடும். காரண சரீரத்தில், ஜீவன் இருக்கும்போது பிரமலோகத்தில் இருப்பதாகக் கொள்ளப்படும். உபாசனை மார்க்கம் (பக்தி மார்க்கம்) நன்றாக உச்சம் பெற்றோர், ஸ்தூலத்தையும், சூக்குமத்தையும் அகற்றிவிட்டு காரண சரீரத்தோடு இருந்து பிரியம், மோதம், பிரமோதம் ஆகிய உணர்வுகளை அனுபவிப்பர். இவர்கள், விரும்பின் அவதார புருடர்களாக உலகை ஈடேற்ற வரலாம் (சாயி அவதார பற்றிய விளக்கங்களை இக் கட்டுரையின் கடைசிப் பாகத்தில் காண்க; சாயி அவதாரம் வித்தியாசமானது)

கர்மாக்களை பெருக்கியதும், சுருக்கியதும் இந்த முச்சரீரங்களுமே ஒழிய, காரணத்தில் பிரதிபலித்த பிரமம் அல்ல. பிரமம் சாட்சியாகவே (பார்வையாளர்) இருந்தது. அதன் பிரகாசத்தால் இயங்கியது மனம் (காரண சரீரம்). மனமியங்க ஏனைய சரீ ங்களும் இயங்கின. சூரியஒளி பட்டு, கடல் நீர் எப்படி ஆவியாகிற கர்மாவைச் (வினையை / Work) செய்ததோ, அதேவிதமாக, கர்மாவைச் செய்தவை உடம்புகளே. மனமே இன்ப துன்பத்தை அனுபவித்தது. எப்படி மனமாகிய ஒ நவித சட உடல் இன்ப துன்பத்தை அனுபவித்தது என்று நீங்கள் கேட்கலாம். பிரமத்தின் பிரகாசம் மனத்தில் (காரண் சரீரத்தில்) படுகின்றபோது பிம்பம் ஏற்படுகின்றது. பிம்பத்திற்கு இன்ப துன்பங்களை நுகரும் சைதன்யம் உண்டு. ஏனென்றால் பிரமமே ஆதாரம் அந்த பிம்பந்தையே ஆத்மா, ஆத்மா என்று நாம் பொது வழக்கில் பேசிக்கொண்டு இருக்கிறோம். இந்தக் கட்டுரையை, பிம்பமே எழுதிக் கொண்டு இருக்கிறது. பிம்ப நிலையைக்

கடந்து பிரம்ம நிலைக்குச் சென்றால், யார், என்னத்தை, யாருக்கு எழுதுவது என்றாகிவிடும். உண்மையில் பிரமநிலை, பிம்பநிலை (ஜீவர்நிலை) என்பவற்றுக்கு இடையே உள்ள வித்தியாசம் மிகவும் நுணுக்கமானது. 'நான்' என்ற உணர்வு, அறிவுநிலையில் இருக்கிறபோது (Conscious state), அது பிம்பநிலை. 'நான்' என்ற உணர்வு அற்றுப்போய் அறிவு கடந்த சமாதிநிலையில் (Superconscious state) மனம் ஏறி நிற்கிற போது அது பிரமநிலை. 'நான்' அற்றுப்போனால் மோட்சம் என்றதன் பொருள் இதுதான். இதனுடைய, மேலுந்தெளிவான விளக்கம் 'சங்கர வேதாந்தம்' என்னும் அத்தியாயத்தில் தரப்படும்.

இந்தக் கட்டுரையிலே, ஆத்மீகச் சொல்லுகள் மனிதரைக் குழப்பும் இடங்களையும் பார்ப்போம். ''அழிவது உடம்பு. அழியாதது ஆத்மா. ஆத்மா பல பல பிறவிகளை எடுத்து, இன்ப துன்பங்களை ஒப்பநோக்கும் போது, திருவருள் பதிகிறது'' என்று சொல்லும்போது, இங்கு ஆத்மா என்றது எதனை? இதனை ஜீவாத்மா என்றும் கூறுவார்கள். ஜீவன் என்றும் கூறலாம். உயிர் என்றும் கூறலாம். அத்வைதத்திலே, இதன் பொருள், ''பிரமம் பட்டுக்கொண்டிருக்கிற காரண – சரீரம்'' என்று, அல்லது ''பிரமம் பட்டுக்கொண்டிருக்கின்ற காரண – சூக்கும சரீரம்'' என்று கொள்ளவேண்டும். ஸ்தூல உடல் செயலற, காரண - சூக்கும சரீரம் (சக்தியலை போன்றது) விலகிச் சென்று வேறு ஸ்தூலத்தை எடுக்கிறபோது, நாம் கூறுகின்றோம், ஆத்மா பிரிந்துவிட்டதாக. சூக் தமத்தையும் நீக்கி, காரணம் மட்டும் விலகிச் செல்கிறபோது (இது உபாசனையாகிய சகுணப்பிரம வழிபாடு சித்திக்கிறபோது, கைகூடுவது), ஆத்மா, பிரமலோகம் போய்விட்டதாக ஞானிகள் கூறுவர். போனது காரண சரீரமே ஒழிய, பிரமம் அசைவற்றே இருக்கிறது. அசைவற்ற பிரம, ஆதாரத்தில் காரணம் அசையும்போது, பிரமம் பட்டுக்கொண்டு இருப்பதால், ஒரு ஒளிக்கூடு செல்வதுபோல் இருக்கும். ஞானியருடைய கண், ஒளி அலையின் மிகக்குறைந்த அதிர்வெண் ஒளியையும் மிகக் கூடிய அதிர்வெண் ஒளியையும் பார்க்கக்கூடிய தன்மையை பெற்றிருப்பதால், காரண சரீரம் ஒளியோடு செல்வதை ஞானியர் காணுவர். இப்படிக் காரண சரீரம் ஒளியோடு அசைவதை, ஆத்மா (ஜீவாத்மா) அசைவதாகச் சொல்லுகிறோம். ஆகவே, அத்வைதிகளால் பிரமத்தின், பிம்பங்கள் என்று சொல்லப்படுவனவே, ஆத்மாக்கள் என்று நாம் அறியவேண்டும். காரண சரீரத்திலும் இருந்த, ஆசைப்பதிவுகள், முற்றிலும் அற்றுப்போனவுடன், காரண சரீரமாகிய, அதாவது மனமாகிய மாயை பிரிந்துவிடுகிறது. அது சக்தியாகி விடுகிறது. இந்தநிலையே முத்திநிலை.

இந்தவகையான, காரண சரீரம், சூக்கும சரீரம் பற்றிய அறிவை, பலர் நம்பாமல் இருக்கலாம். 'மறுபிறப்புக்கள்' என்ற அத்தியாயத்தில், தருக்கரீதியில், இவை இருக்கவே செய்யும் என்று நிரூபித்திருக்கிறோம். எதிர்காலத்தை, நிகழ்காலம் தீர்மானித்தால், நிகழ்காலத்தை எமது இறந்தகாலம் தீர்மானித்தது. இறந்தகாலம் என்பது முற்பிறப்பு. முற்பிறப்பில் நமது அறிவும் காவப்பட்டு இப்பிறப்புக்கு வருவதால், 'ஜீவ ஆத்மா' இருக்கவே செய்கிறது. ஆத்மா ஒன்றுதான் இருக்கமுடியும் என்று, 'கடவுள் இருக்கிறார்' என்ற அத்தியாயத்தில் நிரூபிக்கப்பட்டதால், 'ஜீவ ஆத்மா' என்றது ஒருவகை உடம்பை. அதுவே மனவுடம்பு (அல்லது காரண, மற்றும் சூக்கும உடம்புகள்). ஆகவே, சடப்பொருள் தன்மையதாக (சக்தியலையாக இருக்கலாம்) இந்த உடம்புகள் இருக்க வேண்டும் என்பது நிறுவலாயிற்று.

இனி, சைவசித்தாந்தத்திலே, கடவுள், உயிர், உலகம் என்று சொல்லுகிறபோது, உயிர் என்பது ஆன்மாவைக்(அல்லது ஆத்மா)குறிக்கும். ஆன்மா சதசத்து என்றும்,கடவுள் சத்து என்றும், உலகம் அசத்து என்றும் கொள்ளப்படும். ஆகவே, சைவசித்தாந்த முப்பொருள் உண்மைத் தத்துவத்தில் ஆன்மா (ஆத்மா) என்கிறபோது எண்ணிக்கை அற்ற (முடிவிலி), கடவுளின் தயவால் நிலைபெறுகின்ற உயிர்களைக் குறிக்கும். ஆனால், அத்வைதத்தில் ஜீவாத்மா என்பது, பிரமம் பட்டுக் கொண்டிருக்கும் மனவுடம்பு ஆகும்.

அத்வைதிகள், எங்கும் வியாபித்திருக்கும் ஆத்மாவே, நீ என்று உணர் என்று சொல்லுகிறபோது ஆத்மா, பிரமத்தையே (பரப்பிரமம்) குறிக்கும் என்பதை நாம் அறியவேண்டும். இங்கு, ஆத்மா, பரமாத்மா, பிரமம் பரப்பிரமம் என்பன ஒருபொருட் சொற்கள்.

இனி, சத்யசாயியின் உடலமைப்பைப் பார்ப்போம். மாயா சக்தியின் சடவடிவம், நுண்ணிய உயிராக, வளர்ந்து தாவரத்திலிருந்து மனிதர்வரையுள்ள ஏழுவகைப் பிறவிகளில், கணக்கற்ற பிறவிகளை எடுத்து, மேலும் பரிணாம வளர்ச்சி அடைந்து, மனிதப்பிறவியில், ஐம்புல அறிவோடு பகுத்தறிவாகிய ஆறாம் அறிவையும் கொண்டு பிறக்கிறது. அது ஜீவன் முக்தனாகி, பின்பு பரமுக்தனாகி, காரண சரீரத்தில் சஞ்சரித்து, மறுபடியும் உலகை ஈடேற்ற விரும்பி, சூக்கும, ஸ்தூல சரீரங்களை எடுத்துவரும். அத்தகைய அவதார புருடனைவிட, பகவான் சாயி அவதாரம் (துவபராயுகத்தின் முடிவில் வந்த கிருஷ்ண அவதாரமும் சாயி அவதாரம் போன்றது) வித்தியாசமானது: ஜீவர்கள், அதர்ம காரியங்களை அதிகப்படியாக ஆற்றிவரும்போது, சமநிலையைப் பேண தர்ம-

காரியங்களை அதிகரிக்கும் மகாபிறவியொன்று தோன்றத்தான் செய்யும். பரப்பிரமத்தின் சக்தியாகிய மாயையில் மிக உன்னதமான, மிகவும் சக்திவாய்ந்த காரண – சூக்கும உடல் உருவாகி, தவப்பயன் நிரம்பிய ஒரு தாயின் கருப்பையில் ஆக்கம்பெற்ற சிசுவின் ஸ்தூல உடலில் வந்து சேர்ந்துவிடுகிறது. அது புவியில் அவதரித்து வளர்ந்துவரும் வேளையில், எதுவித அறியாமையும் (அவித்தை) அற்றதாகவே இருக்கிறது காரணத்திலோ, சூக்குமத்திலோ மங்கலமும் ஞானமும் நிறைந்த அந்த ஒளிக்கு ஸ்தூலச் சேர்க்கையால், சில சில பாதிப்புகள் ஏற்பட்டாலும், அது சாதனையால், அந்த ஸ்தூல உடலையும் சக்திமயமாக்கி வைத்திருக்கும். பக்தர்களின் நோய்களை தம் உடம்பில் ஏற்கும்போது, ஸ்தூலத்திற்கு ஏற்படும் தாக்கங்களை, பலம்வாய்ந்த காரண – சூக்கும சரீரத்தால் சாதனைசெய்து சமன்செய்து கொள்ளும். எப்படி எமது காரண சரீரத்தில் பிரமம் படும்போது நாம் பிரகாசித்து, இயங்குகின்றோமோ, அப்படியே முழுமையும் சக்திபெற்ற, சாயியின் காரணத்தில் ஒளிபடும்போது பிரகாசம் சொல்லும் தரமளவில் இருக்காது. எமது 'காரணம்' அவித்தை சேர்ந்த காரணத்தினால் தெளிவற்ற காடு முரடான தெறிக்கும் மேற்பரப்பாக இருக்க (Bad Reflector), சாயி அவதாரரின் 'காரணம்' அவித்தையற்று பூரணமான, அழுத்த, மிக உன்னதமான தெறிக்கும் மேற்பரப்பாக (Best Reflector) அமைந்திருக்கிறது. பிரமம் பூரணமான அளவுக்கு, பிரகாசிக்கிறது. பிரமத்திற்கு சமமான பிரகாசம், சாயியில் பிரகாசிப்பதால், அவர் அறியாத உலக ஞானமும் மெய்ஞ்ஞானமும் இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை. பிரமத்தின் சக்தியான மாயை ஓங்கார ஓசையுடன், ஒளி வடிவமாகவே இருப்பதாக, அதனை கேட்கப், பார்க்க முடிந்த யோகிகளும் ஞானிகளும் கூறுகிறார்கள், இவர்களின் சாதனை, இவர்கள் இந்த ஓசையையும் ஒளியையும் அறியக்கூடியவர்களாக மாற்றிவிடுகிறது. சடப்பொருள் முதலாக, தாவரம் ஊடாக, மனிதர்வரை உள்ள படைப்புகள் எல்லாம் பிரமத்தின் சக்தியாகிய மாயை வெவ்வேறு அதிர்வு விதங்களில் (Vibratory rates) அதிரும்போது, உருவாகின்றன என்கிறார்,யோகி யோகனந்தா பரமகம்சா. உருவங்கள் எல்லாம் சடப்பொருளாயிருக்க, ஆதாரமாயிருக்கும் பிரமம் உள்ளிருந்துபிரகாசிக்கின்றது. தெறிக்கும் மேற்பரப்பு மங்கலானது, அழுத்தமானது என்பதைப் பொறுத்தே, அவை ஞானத்தை வெளிக்காட்டும் மற்றைய படைப்புக்களிலும், மனிதப் படைப்பு பிரமத்தை கூடுதலாகப் பிரகாசிக்கிறது. மனிதரிலும் ஒவ்வொருவரது காரண உடலுக்கும் ஏற்ப, வெவ்வேறு அளவில், அவர்கள் பிரகாசிக்கிறார்கள். ஜீவன் முத்தன் மிகவும் நன்றாக, பிரமத்தை பிரதிபலிக்கிறான்.

அவதார புருடர்களோ இதனிலும் மேலாக பிரதிபலிக்கிறார்கள் சாயி அவதாரமோ, இதுவரை உலகு கண்ட அதி உச்சமான பிரதிபலனம். அவர் தமது 43 வது பிறந்தின உரையில், தம்மை எவரும் அறியமுடியாது என்று கூறுகிறார். ஆம், இவரது மகிமைகளை நாம் புரிவோமா? இவர் எப்படி, எந்த அளவு ஞானத்தோடு நின்று பேசுகிறார் என்று நாம் அறிவோமா? யாம் எதனையும் அறியோம். இருப்பினும், அதே உரையில், சாஸ்திரப்படிப்பாலும், ஞானானுபவத்தாலும், தம்மை, மனிதன் இனங்கண்டு கொள்ளலாம் எங்கிறார். இற்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பு, பரத்துவாச மகரிசி தமது யாகம் ஒன்றிற்கு ஆசிர்வதிக்கும்படி, தமது இஷ்ட தெய்வமாகிய பார்வதி சமேத பரமேசுவரனை பிரார்த்திததார். மகரிசியின் பக்திக்குக் கட்டுப்பட்டு, சிவசக்தியாக சகுணப் பிரமம் தோன்றி, யாகத்தை ஆசிர்வதித்து, பின்வரும் வாக்கையும் அளித்தது. "முதலில் சிவம் மட்டும் புவியில் தோன்றி, பின்பு சிவமும் சக்தியும் சேர்ந்து சத்யசாயி என்ற பெயரில் தோன்றி, அதன்பின்பு சக்தி மட்டும் பிரேமசாயி எனத்தோன்றி, உலகத்திலே தர்மத்தை தாபனம் செய்யும்" —என்பதே வாக்கு. தமக்குள்ளே சிவசக்தியை உபாசனை செய்து வந்த, பரத்துவாச மகரிசி, புறத்தே ஒளிவடிவில் சிவசக்தியைக் கண்டார் என்க. இந்தச் சம்பவத்தை எமக்கு கூறியுள்ளவரும் சத்யசாயியே. நாம் உபாசனை செய்யும் மூர்த்த வடிவிலே நமக்கு கடவுட் காட்சி கிடைக்கும். கிருஷ்ண ஜயந்தியொன்றின் போது சாயி தாமே முன்பு கிருஸ்ண அவதாரத்தில் அணிந்த முத்து மணி மாலையைச் சிருஷ்டித்துக் காட்டினார். கடவுள் ஒருவர்தானே நமக்குள்ளே இருக்கும் ஒளி, நாம் உபாசிக்கும் சகுண வடிவமோடு புறத்தே, ஒளிமயமாய்த் தோன்றும் என்க.

இனி அவதார புருடர்களைப்பற்றி சுவாமி விவேகானந்தர் கூறியவற்றைப் பார்ப்போம் "ஜீவன் முக்தராகிய, சாதாரண ஆத்மீக ஆசிரியர்களைவிட, உயரிய உன்னதமான இன்னோர் வகையான ஆசிரியர்கள்தான் அவதாரபுருடர்கள். ஒரு தொடுகை அல்லது ஒரு மனவிருப்பத்தின் (Wish) பேரிலே, மற்றவர்களுக்கு ஆத்மீகத்தை அருளிவிடுவார்கள். அதிகம் கீழ்த்தரமான, அதிகம் தரம்குன்றியவர்கள் கூட, இவர்களது கட்டளையின் பேரில், ஒரு வினாடியில், ஞானிகளாகிவிடுகிறார்கள். எல்லா ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்கள் இவர்களே; மனிதனூடாக, கடவுளின் அதிகூடிய பிரதிபலனம். (வெளிப்பாடு). இவர்கள் மூலமாகவன்றி, கடவுளை நாம் காண முடியாது. இவர்களை வழிபடாது, நாம் இருக்கமுடியாது. உண்மை

யில், இவர்களை மட்டுந்தான், நாம் கட்டாயமாக வணங்க வேண்டியது,''

எல்லோரையும் வணங்கலாம், வழிபடலாம். ஆனால், அவதார புருடர்களை, நாம் வணங்கக் கடமைப்பட்டுள்ளோம். (We are bound to worship) என்கிறார்.

இதே அத்தியாயத்தில், பகவான் சாயி ஆற்றும் அற்புதங்கள் எவ்வாறு விஞ்ஞானத்தோடு ஒட்டிப்போகின்றன எனப் பார்ப்போம். ஐதரசனில் மூன்று வகையான, ஒரே அணுவெண்ணைக் கொண்ட அணுக்கள் உண்டு. இதில் முதல் வகையான ஐதரசனுக்கு ஒரு புரோத்தன், கருவிலும், ஒரு இலத்திரன், ஒழுக்கிலும் உண்டு. புரோத்தனையும் இலத்திரனையும் சேர்க்க, ஒரு அணுவும் [கருவினுள்ளே வேறு துணிக்கைகள் இருப்பது பற்றி இங்கு எடுத்துக் கொள்ளவில்லை] இரண்டு ஐதரசன் அணுக்களைச் சேர்க்க ஒரு ஐதரசன் மூலக்கூறும் உருவாகி சடத்தன்மையைப் ($H_2$ வாயு) பெற்று விடுகின்றன. இனி, இந்த ஐதரசன் அணுவின் வளர்ச்சியே, மற்றய மூலகங்கள் என்றும் சொல்லலாம். அதனால், யோகானந்தா பரமகம்சா என்ற யோகி கூறுகிறார். அவதார புருடர்கள் தமது ஒருங்கு செறியப் பெற்ற, மிகவல்லமையுள்ள மனத்திலே, இலத்திரனையும் புரோத்திரனையும், நினைத்து, மனத்திலே ஒருங்கு சேர்க்க, அவதார புருடனின் கையசைப்பில், பிரபஞ்ச சக்தியலைகளில் இருந்து இலத்திரன், புரோத்தன் உருவாகி, மேலும் தேவையான அணுக்களும், சேர்வைகளும் உருவாகி, கணப்பொழுதிலே, பக்தன் விரும்பிய பொருள், அல்லது தாம் பக்தனுக்கு கொடுக்க விரும்பிய பொருள், சடவடிவில் படைக்கப் பட்டுவிடுகிறது. உள்ள மாறிலியான சக்தியில் இருந்தே சடத்தைப் படைத்தார். இப்படியே தொடர்ந்தும் சக்தியைச் சடமாக்கினால், சமநிலை குலையும் என்ற சந்தர்ப்பங்களில் சடமானவற்றை சக்தியாக்கியும் விடுவார்கள் என்று நாம் கொள்ள வேண்டும். சடத்தை சக்தியாக்கிவிடுதலே பகுதியளவிலான அழித்தல் என்றும் (Partial dissolution) சக்தியைச் சடமாக்குவதே பகுதியளவிலான படைத்தல் (Partial Creation) என்றும் கொள்ளலாம்.

இதே கட்டுரையில், இன்னோர் விடயத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். ஒரு மாமரத்து விதையில் இருந்து ஒரு மாமரம் உருவாகி, அந்த மாமரம் அநேக விதைகளைப் போட்டு அநேக மாமரங்களை உருவாக்கி வருகிறது. விதையாகவும், மரமாகவும் உருப்பெறுவது சக்தியே. ஒவ்வொரு விதைக்கும் உயிர் கொடுத்தது பிரமமே.

சக்திக்கு ஆதாரம் பிரமம். பிரமம் மாறுபடாத பொருள். சக்தி அதனது ஆற்றல் இரண்டும் ஒன்றுதான். வேறு பிரித்து அறிய முடியாதது. திருத்தமாகச் சொன்னால் ஒன்றுதான் பொருள் மற்றது அதன் ஆற்றல். இதே போன்றே மற்றய அசையும் ஜீவராசிகளது வித்தும் வளர்ச்சியும். இவ்வாறு பெருகிவருதல், விரிவு (Expansion) அல்லது படைப்பு (Cheation) என்று அழைக்கப்படும். இந்தப் பெருகிவரும் சமநிலையின்மையை சமப்படுத்தவே அழிவு (Partial dissolution) ஏற்படுகிறது. ஒருநாடுஅல்லது ஒரு நாட்டின் பகுதி அழிதல். புயல்மழை, பூகம்பம், அணுக்குண்டு வெடித்தல் போன்ற காரியங்களே இந்த அழித்தலைச் செய்கின்றன என்க. ஆகவே பரப்பிரமம் என்ற நிலைத்த பொருளுக்கு சக்தியென்னும் (மாயை என்றும் சொல்லுவார்கள்) ஆற்றல் உண்டு என்று கண்டோம். இந்தச் சக்தி மூலவடிவில் (Original Form) ஒளியாகவும் ஒலியாகவும் இருப்பதாக, நுண்மையாக (Sensituve) மாறிய யோகிகள், ஞானிகள் கூறுகிறார்கள். நம்போன்ற சாதாரண மக்கள், அந்த ஒளியினதும் ஒலியினதும் (ஓங்கார ஓசை—ஓம், ஓம்) அதிர்வெண்களை, புலனால் நுகர்பு செய்ய முடியாதபடி, சடத்தன்மை (Not sensitive enough) பெற்றிருக்கிறோம். ஆத்மீக பயிற்சிகளால், உடம்பை, மனத்தை நுண்மைப் படுத்தினால், அந்த சக்தியை நுகரலாம். ஆனால் பிரமத்தை காணமுடியாது. ஏனென்றால், நாம் நம்மை காணமுடியாதே. எமக்கு ஓர் ஆடி, அல்லது ஒளியைத் தெறிக்கும் மேற்பரப்பு இருந்தால், பிம்ப வடிவில் நாம் நம்மைக் காணலாம். இந்த மூலாதாரமான ஒளி, ஒலி, வடிவ சக்தியே, எமது (பிரமத்தினது) பிம்பம் போன்றது என்க.

இன்னும் திருத்தமாகச் சொன்னால், சக்தியே பிரமம். இந்தச் சக்திக்கு நிலைக்கும் சைதன்யம் உண்டு. சைதன்யத்தை ஞானம் என்றும் சொல்லாம். இந்தச் சக்திக்கு நிலைப்பு உண்டென்பதை எமக்குளே இருக்கும் 'நான்' என்பது, சக்தியாலாகிய முச்சரரீங்களும் மாறுபட்டாலும், மாறுபடாமல் இருக்கிறது என்ற, ஒன்றைக் கொண்டே நிரூபிக்கின்றோம். இந்த சக்தியாகிய மாயை நிலையில் நின்று, நாம் நோக்குகிறபோது, பிரமத்திற்கு சத்து (என்றுமுள்ளது), சித்து (எல்லாஞானம்), ஆனந்தம் (ஆனந்தமயமானது), ஆகிய மூன்று இயல்புகளும் இருப்பதாகக் கொள்ளுகிறோம். பிரமம் என்று சொல்லுவதைவிட பிரமத்தின் மூலவொளிக்கே, இந்த இயல்புகள் இருப்பதாகச் சொல்லுவதே தருக்கத்திற்குச் சிறந்தது. ஏனென்றால், பிரமம் நிர்க்குணமானது, குணங்கள் அற்றது, என்று சுருதிகளும், சங்கரரும் கூறுகிறார்கள்.

# 4 உருவக்கடவுளும் அருவக்கடவுளும்

நாம் எங்ஙனும் காண்பதுவும் அனுபவிப்பதும் ஒரு பொருளையே தான். விஞ்ஞானிகளைப் பொறுத்தவரை சக்தியே பிரபஞ்சமாக ஒடுங்கி இருக்கிறது. ஒடுங்கிய சடத்தில் 108 மூலகங்கள் (Elements) வரை, கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த சக்தியே, பிரமத்தினது சக்தி இந்தச் சக்திக்கு ஸ்ரீ சங்கரர் கொடுத்த பெயர் மாயை.

பிரமத்தினது சக்தி, என்று இரண்டு பொருளைச் (பிரமமும் சக்தி) யும் சுட்டுவதிலும் பார்க்க, பிரமமே சக்திவடிவில் நமக்கு காட்சியளிக்கிறது என்று சொல்லுவது கூடிய பொருத்தமானது. நாம் யார்? நாமோ, சக்தியால் ஆன காரண—சூக்கும—ஸ்தூலா சரீரங்களைத் தாங்கியவர்கள். நமது கண்ணும் சக்தியே (மாயையே). இந்தக் கண்களால் பிரமத்தினது சக்தியாகிய மாயையே காணலாம். இந்தக் கண்களால் காணுகின்ற மூலகர்த்தாவும் (உண்மையான நான்) பிரபஞ்சமாகக் காட்சியளிக்கும் மாயையின் (சக்தியின்) மூலகர்த்தாவும் ஒருவரே. அவரே பிரமம். ஆதலால் நாம் காணும் பிரபஞ்சக் கூட்டு மொத்தம் பிரமத்தினது, நமக்குத் தோற்று வடிவம். The effect is the cause reproduced in another form என்று சுவாமி விவேகானந்தர் அடிக்கடி சொல்லும் கூற்றின் உட்பொருள் இதுதான்.

ஆகவே, நாம் காணும் சகல பொருட்களும் (உ+ம், மேசை, மரம், மணிக்கூடு, றேடியோ......) கடவுளின் (பிரமத்தின்) உருவங்கள். இந்நிலையிலேதான், நாயன்மார்கள் எல்லாமும் சிவனெனக் கண்டார்கள். அப்பர் சுவாமியின் 'நின்ற திருத்தாண்டகம்' ஒரு நல்ல உதாரணம். இந்தக் கட்டுரையின் பிற்பகுதியில் அதனைக் காண்க. இதிலிருந்து, நாம் காணும் சகலதும் உருவக்கடவுளர் என்று கொள்க. அருவக் கடவுள் என்பது, அந்தர்யாமியாக (மறைந்த பொருளாக) இருக்கும், பிரமத்தையே. இந்தத் தத்துவத்தையே கயிறு பாம்பாகத் தோற்றுகின்றது என்ற உதாரணத்தால் விளங்க வைப்பார்கள். இதனினும் மேலான உதாரணமாக விளங்குவது திருமூலருடைய ஒரு திருமந்திரம்.

''மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்துள் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்''

ஒரு மரத்தால், யானை என்ற உருவம் செய்யப்பட்டிருக்கிறது. நாம் யானையின் அழகை, இரசிக்கிறபொழுது, அது மரம் என்பதை மறந்துவிடுகிறோம். யானையாகவே கண்டனுபவிக்கிறோம். புத்தித் தெளிவின்போது, அது யானையல்ல, மரமே என்று உணருகிறோம். இதே போன்று, பார் (நிலம்) முதலாக உள்ள பஞ்சபூதங்களால் (நிலம், நீர், தீ, காற்று, வெளி) ஆன பிரபஞ்சத்தை நாம் காண்கிற போது, அது பிரமம் (பரம்) என்பதை மறந்துவிடுகிறோம். இதனையே அறியாமை (ignorance) என்று அத்வைதிகள் கூறுவது. இந்த அறியாமைக்கான காரணம் என்னவென்றால், நமது கண்களும் பஞ்சபூதத்தின் படைப்பு என்பதே. பஞ்சபூதம் பஞ்சபூதத்தையே பார்க்கும். ஆனால், ஞான உணர்வு கொண்டு பிரபஞ்சத்தைப் பார்த்தால், ஞானவடிவினதாகிய பிரமமே அதுவென்று தெளியலாம், மேற்படி யானை உருவத்திலே தோன்றும் யானை உருவம் பொய்யென்று இல்லை. எதார்த்த உண்மை அது என்று ஸ்ரீ சங்கரர் சொல்லுவார். காரியம் யானை, காரணம் மரம். ஒன்று காரியம், மற்றது காரணம் என்று தெளிவது ஞானம். மரத்திலே தெரிந்த யானை உருவம், இல்லாத ஒன்றா? அது வெறும் கற்பனையா? இவற்றிற்கு விடை - இல்லாத ஒன்றல்ல; வெறும் கற்பனை அல்ல. அது எதார்த்த உண்மை.

''ஸ்ரீ சங்கரரைப் பொறுத்தவரை தோற்றமாத்திரையிலே உலகம் உண்மையானதே. அது மாயம் அன்று. எதார்த்த உண்மை'' —என்ற வாசகத்தின் பொருள் நமக்கு இப்போ தெளிவாகிவிட்டதல்லவா? இதனைப் புரியாமல், அத்வைத வேதாந்திகளை 'பிரசன்ன பௌத்தர்' (Crypto-Buddhists) என்றோ, அத்வைதத்தை 'மாயா வாதம்' என்றோ, சில சமயவாதிகள் கூறுவது விரும்பத்தக்கதல்ல. அத்வைத தத்துவத்தை புரிந்துகொள்ளுவது கடினம் என்று சுவாமி விவேகானந்தாவே உரையாற்றியிருப்பது, அத்வைதிகளுக்கு ஒரு ஆறுதல் என்றே கூறவேண்டும். பேராசிரியர் இராதாகிருஷ்ணன், ஒரு எழுத்துக்கூட முன்னுக்கோ பின்னுக்கோ சேர்ந்து பொருள் கொள்ள வேண்டாத அளவுக்கு, ஸ்ரீ சங்கரருடைய தத்துவம் முழுமையானது என்று உரைந்திருப்பதுவும், ஸ்ரீ சங்கரருடைய தத்துவச் சிறப்பினை எடுத்துக் காட்டுகிறது. பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா ஒருவராலே, ஸ்ரீ சங்கரருடைய முயற்சி வெற்றிகாணப் போகிறது. ஏனென்றால், பாபா அவர்கள், மிக எளிய முறையிலே அத்வைதத்தை, மக்களுக்குப் புரிய வைக்கிறார். தமது 60 வது வயதிலிருந்து முழுமையும் அத்வைத மதம் பற்றியே பேசிவருகிறார்.

'எதிர்கால மதம் வேதாந்தமா? என்று ஆய்வுசெய்து, சுவாமி விவேகானந்தர் உரையாற்றியிருக்கிறார். இவருடைய விருப்பமும் நிறைவேறவே போகுகிறது. ஏனென்றால், கலியுக மனிதனுக்குச் சமயச் சடங்குகளில் அதிகம் நாட்டமில்லை. தனது புத்திப்பலத்தையே நம்புகிறான். அவனது புத்தியானது, நம்பக்கூடிய தத்துவம் என்றால், அது அத்வைதமே. அத்வைதம் அவனுக்குச் சவாலாக (Challenge) அமைந்துள்ளது. அவ்வளவுக்கு கடினமானது. இக்கட்டுரையின் முற்பகுதியில், பிரமத்தினது, நமக்கு தோற்றுவடிவம் பிரபஞ்சம் என்றோம். இதனையே உருவக்கடவுள் (Personal Cod) என்றோம். ஸ்ரீ சங்கரர், இதனை, குணங்களோடு கூடிய காரணத்தால், சகுணப்பிரமம் என்றார். இதனை ஈஸ்வரன் என்றும் குறிக்கிறார். மரமானது யானையாய் விளங்குவது போல, நிர்க்குணபிரமமானது (குணங்கள் அற்ற, அந்தர்யாமியான பிரமம்) சகுணப்பிரமாகத் தோற்றுகிறது. இதனைவிட, பொதுவழக்கில், சாஸ்திரங்களில், கடவுளருக்கு (உ+ம்; சிவன், விஷ்ணு, உமை, கணபதி, குமரன்) கொடுக்கப்படும் வடிவத்தையும் உருவக் கடவுளர் என்றோ, சகுணக் கடவுளர் என்றோ குறிப்பிடுகிறோம்.

இனி, நடைமுறையில், மக்கள் முதலில், சகுணப் பிரமமொன்றையே உபாசனை செய்யத் தொடங்குகிறார்கள். எளியதிலிருந்தே சிக்கலுக்குச் செல்ல வேண்டும். (From the simple to the Complex, and from the Concrete to the abstract என்ற தத்துவத்திற்கு ஏற்ப, சகுணப்பிரம உபாசனை அவசியமே. தொடர்ந்து, சகுணப்பிரம்ம உபாசனை செய்து உச்சம் பெறுவோர், நேரடியாக விடுதலை (முக்தி) அடையாது, காரண சரீரத்தில் பல காலம் வாழ்ந்து, உலகப் பிரளய காலத்திலேதான் முற்றான விடுதலை அடைவார்கள் என்று உபநிடதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காரணம் ஒன்றை ஒட்டியே நிர்க்குண உபாசனை சிறந்ததென்று கூறுவர். ஆனால் உண்மை நிலையில், ஒருவன் நிர்க்குண உபாசனையை அல்லது சகுண உபாசனையை தேர்ந்தெடுப்பது ஒருவனுக்குள்ளே இருந்து இயக்கும் பிரமத்தின் விருப்பமே. அவதார புருடன் ஒருவரை, உபாசனை செய்து இந்த யுக மக்கள் ஞானமடைய வேண்டுமென்றே சாயி அவதாரம் தோன்றியிருக்கிறது. பக்தியையும் ஞானத்தையும் அளிப்பவராகச் சத்ய சாயி திகழ்கிறார்.

பிரமமே நாம் காணும் பிரபஞ்ச வடிவமெய்திக் காட்சியளிக்கிறது

என்ற தத்துவத்தை பக்தி வடிவில் மாற்றி பரவுகின்ற திருநாவுக்கரசு நாயனாரின் 'நின்ற திருத்தாண்டகம்' இதோ.

## 'நின்ற திருத்தாண்டகம்'

*திருச்சிற்றம்பலம்*

1. இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி இயமான னாயெறியும்
—காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாச மாயட்ட மூர்த்தி
ஆகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருருவுந்
தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி நிமிர்புன் சடையடிகள்
நின்ற வாறே.

2. மண்ணாகி விண்ணாகி மலையு மாகி வயிரமுமாய் மாணிக்கந்—
தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக் கலையாகிக்
கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணு மாகிப் பிரளயத்துக்
கப்பாலோ ரண்ட மாகி
எண்ணாகி எண்ணுக்கோ ரெழுத்துமாகி எழுஞ்சுடரா
—யெம்மடிகள் நின்ற வாறே

3. கல்லாகிக் களறாகிக் கானு மாகிக் காவிரியாய்க் கால்
ஆறாய்க் கழியு மாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப் புரமாகிப் புரமூன்றுங்
—கெடுத்தானாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச் சுலாவாகிச்
—சுலாவுக்கோர் சூழலாகி
நெல்லாகி நிலனாகி நீருமாகி நெடுஞ்சுடராய்
—நிமிர்ந்ததடிகள் நின்ற வாறே.

4. காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க் கனவாகி
நனவாகிக் கங்குலாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக் குரைகடலாய்க்
குரைகடற்கோர் கோமானுமாய்

நீற்றானாய் நீறேற்ற மேனியாகி நீள்விசும்பாய் நீள் விசும்பி
னுச்சியாகி
ஏற்றானா யேறூர்ந்த செல்வனாகி எழுஞ்சுடராய் எம்மடிகள்
நின்ற வாறே.

5. தீயாகி நீராகித் திண்மையாகித் திசையாகி அத்திசைக்கோர்
தெய்வமாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித் தாரகையும் ஞாயிறுந்தண்
மதியு மாகி
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற இரதங்கள் நுகர்வானுந்
தானே யாகி
நீயாகி நானாகி நேர்மையாகி நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள்
நின்ற வாறே.

6. அங்கமா யாதியாய் வேத மாகி அருமறை யோடைம்பூதந்
தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தாமேயாகிப் பால்மதியோடாதியாய்ப்
பான்மை யாகிக்
கங்கையாய்க் காவிரியாய்க் கடலாகி மலையாகிக் கழியு மாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வனாகி எழுஞ்சுடராய் எம்மடிகள்
நின்ற வாறே

7. மாதா பிதாவாகி மக்களாகி மறிகடலும் மால்விசும்புந்தானே
யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக் கொல்புலித்தோ லாடைக்
குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று புனைவார்
பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானு மெனநினைந்தார்க் கெளிதேயாகி அழல் வண்ண
வண்ணர்தாம் நின்றவாறே.

8. ஆவாகி ஆவினில் ஐந்து மாகி அறிவாகி அழலாகி அவியு மாகி
நாவாகி நாவுக்கோர் உரையுமாகி நாதனாய் வேதத்திலுள்ளோ
னாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்றமாகிப் புக்குளால் வாசமாய்
நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலுமாகிச் செழுஞ்சுடராய்
சென்றடிகள் நின்றவாறே.

9. நீராகி நீளகலந் தானே யாகி நிழலாகி நீள் விசும்பி
னுச்சி யாகிப்
பேராகி பேருக்கோர் பெருமையாகி பெரு மதில்கள்
மூன்றினையும் எய்தானாகி
ஆரேனுந் தன்னடைந்தார் தம்மை எல்லாம் ஆட்கொள்ள
வல்லவெம் மீசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாடலாகிப் பரஞ்சுடராய்ச் சென்றடிகள்
நின்ற வாறே.

10. மாலாகி நான்முகனாய் மாபூ தமாய் மருக்கமாய்
அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி யெண்டிசைக்கும் எல்லையாகிப் பரப்பாகிப்
பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோ கமாய்ப் பூதங்க ளாய்ப்புராணன்
தானே யாகி
ஏலா தனவெல்லாம் ஏல்விப் பானாய் எழுஞ் சுடராய்
எம்மடிகள் நின்றவாறே.

## 5. ஞானமார்க்கம்

இறைவனை அடைய, அதாவது இறைவன் நிலையை அடைய, அதாவது நாம் இறைவன் என்பதை அறிந்து கொள்ள, நான்கு பாதைகள் இருப்பதாக இந்து சமயம் கூறும். சரியை (Work/கர்மா) கிரியை (Worship/பக்தி), யோகம் (Psychic control, ராஜயோகம்) ஞானம் (Knowledge) என்பனவே அவை. இவற்றை முறையே, கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகம் என்றும் அழைப்பர். பக்தியோகம், போன்றவற்றை, உபாசனை என்றும், சொல்வர். கர்மகாண்டம், உபாசனை காண்டம், ஞானகாண்டம் என்று வேதங்கள் நான்கையும், தனித்தனி பிரித்ததும் இதனை யொட்டியே.

(I) கருமயோகம்:-

நாம் ஆற்றும் கருமங்களின் பலனைத் துறக்கவேண்டும்; நமக்கு கடமை ஆற்ற உரிமையுண்டே தவிர, பலனை எதிர்பார்க்க, அனு

பவிக்க உரிமையில்லை. தமக்கு இயல்பாயமைந்த கருமங்களை ஆற்றிப், பலனை கடவுளிடம் விடுவதே கருமயோகம். பலனில் பற்றை வைத்தால், அது புதிய ஆசையை மனவுடம்பில் உண்டு பண்ணுகிறது. ஆசைக் கேற்ப பிறவி எடுக்கவேண்டியே வரும். கருமயோகத்தை கடவுளில் நம்பிக்கை அற்றவனும் கூடச் செய்து மேனிலைக்கு வரலாம் நமது தீய கருமங்களைத் தொலைக்க வழி, நல்ல கருமங்களை, பலனில் பற்றுதலன்றிச் செய்தலாகும். முள்ளை முள்ளால் எடுப்பது போல, தீவினையை நல்வினையால் அகற்றுதல். பின்பு இரு முள்ளுகளையும் எறிதல் போல, பலனில் பற்று வையாதிருத்தல். இந்த யோகத்தில் செல்லும்போது ஆசைஅறுவதால், பிறவி அறுகின்றது.

### (II) பக்தியோகம்:-

பக்தியோகம் பலராலும் விரும்பப்படுவதும், இயல்பாகவே நம்மில் தோன்றுவதும், நாம் நமது உறவினரை, அன்பு செய்யுமாப்போல், இறைவனையும் அன்பு செய்கிறோம். அப்பா, அம்மா, மாமா மாமி, பிள்ளை, என்று இறைவனை அழைத்து வழிபடுவது. அன்பு வைப்பது. அன்பு இறுக, இறுக, உலகப்பற்று குறைந்து விடுகிறது. கடவுளை சகுணப்பிரமமாகவே (உருவம், குணம் கூடியது) பக்தி பண்ணுவார்கள். ஈற்றில், நிர்க்குணபிரம வழிபாடாக மாறிவிடும். அப்போது மனத்திலே ஆசைகள் அற்றுப் போகின்றன. பிறவி அறுகின்றது.

### (III) ராஜயோகம்:-

ராஜயோகப் பாதையானது புலனடக்கத்தை, ஸ்தூல உடம்பு வழியாக மனவுடம்புக்கு கொண்டுவருவது. யோகப் பாதையின் எட்டுப் படிகளானவை, இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகியன. சுருக்கமாகச் சொன்னால், ஆசார சீலராய் வாழ்ந்து, மூச்சுக்களைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் மனம் ஒருங்கு செறியப்பெற்று, கடவுளைத் தியானித்து, 'நான்' என்னும் உணர்வற்ற சமாதிநிலைக்குச் செல்லுதலாகும். உடம்பை விடும்போது மகாசமாதி. அதுவே முக்தி.

### (IV) ஞானயோகம்:-

மேற்கூறிய மூன்று மார்க்கங்களில் ஒன்றையேனும் தனித்து நாம் செய்யமுடியாதவர்களாக இருக்கின்றோம். கலியுக மனிதனுக்கு, கருமத்தில் பலனை எதிர்பாராது எதனையும் செய்ய முடியாமல்

இருக்கிறது. அவனுக்கு கடவுளையே பற்றி நின்று, குடும்ப, உலகப் பற்றை துறக்கமுடியாமல் இருக்கிறது. மூச்சை அடக்கித் தியானம் செய்ய, நேரமும் இல்லை, மனமும் இல்லை. கலியுக மனிதனுக்கு, மூளையிலே சில விவாதங்களைப் போட்டு, நீயே நித்தியப்பொருள் என்று நிறுவிவிட்டால் ஏற்பான். இது பகவான் சத்தியசாயியும் ஒத்துக்கொண்டது. நீயார்? நீ எங்கிருந்து வந்தாய்? நீ எங்கே போகிறாய்? நீ காணும் உலகம் உண்மையானதா? அல்லது நீ உண்மையானவனா? 'நானும் பொய், 'நான் காணும் உலகமும் பொய்' என்று கூறிவிடமுடியாது. ஏனென்றால், 'நான் காணும் உலகமும் பொய் என்று நிரூபிக்கும் 'நான்' எப்படிப் பொய்? பொய்யைப் பொய் உணருமா? இந்தவகையான விவாதங்கள் மூலம் 'நான் ஆத்மன்' என்ற நிலையை அல்லது 'எல்லாம் அவனே, நானும் அவனே' என்ற நிலையை நாம் அடைந்தே, தீருவோம். எல்லாம் அவனே' என்ற நிலையில்தான், சைவசமய குரவர்களும் சரி, ஏனைய மதகுரவர்களும் சரி, பரமனை பாடலால் பக்தி பண்ணித் துதித்தனர். உண்மையான ஞானம் உதிக்கும் இடத்தில் உண்மையான பக்தியும் உதிக்கின்றது. தூயபக்தியும்தூய ஞானமும் ஒன்றே என்றார், பகவான் ஸ்ரீ ராம கிருஷ்னர். இந்த நெறியே ஞானமார்க்கம். இந்தநிலையில் எமக்குகருமத்தின் பலன்களில் பற்றில்லை. புனடைக்கத்தை வருந்தி அழைக்கும் அவசியமும் இல்லை. இயல்பான ஞானம், இயல்பான பக்தி. இதுவே மார்க்கம். சைவசமய குரவர்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர், (ஏனைய திருமுறைகளைப் பாடியவர்களில் பலரும்) ஆகியோர் பாடிய பாடல்கள் எல்லாம் ஞானம் நிறைந்தவை. இவர்கள் தத்துவங்களைப் பற்றிப் பாடவில்லை, பதி, பசு, பாசம், என்பவை பற்றிப் பாடவில்லை. 'எல்லாமும் நீயே' என்றுதான் பாடினார்கள். நாம் என்றும் எமது என்றும் ஏதேனும் உண்டா? இருப்பது பிரமம். இயங்குவது, தோன்றுவது அதன் சக்தி, ஆதலால் பிரமமாகிய சிவத்தைவிட வேறெதுவும் உண்டா? இந்தவகையிலே சிவத்திற்கே முழுப்பெருமையையும் அளித்து பாடிப்பரவுதல் சிறந்த பக்தி மார்க்கம் மட்டுமல்ல ஞானமார்க்கமுமாம். பாடிப்பரவி, பேச்சு மடங்கி, மனத்தால் மட்டும் உன்னும் வேளை வருகிறபோது 'நான்' என்ற நினைப்பறுகின்ற அறிவுகடந்தநிலை (Superconscious state) ஏற்படும், இதனை சமாதி என்பர். உடலை விடும்போது மகாசமாதி என்று அழைக்கப்படும். இதுவே முக்தி. பிரமம் தன்னை அறிந்து கொண்டது. பிரமம் விளையாடி முடிந்தது.

இப்போ ஒரு கேள்வி. ஒருவருக்கு, புத்திரீதியாக, தான் பிரமம்

என்று. (Only intellectual assent) விளங்கிக் கொண்டது. ஆனால் பிரமநிலை அனுபூதியாக (பயிற்சிவழி) வரவில்லை. ஆயின், அவர் என்ன சாதனைகளை மேற்கொள்ள வேண்டும்? அதாவது ஞான யோகியின் பாதை முறைகள் என்ன? இதற்கு சுவாமி விவேகானந்தர் சொல்லுகிறார். ''பிரமமாக மாறுவது என்றில்லை. நீ ஏற்கனவே பிரமமாகத்தான் இருக்கிறாய். நீ கடவுளாக மாறவேண்டும், பூரணம் பெறவேண்டும் என்றில்லை. நீ ஏற்கனவே பூரணம். எப்போதாவது நீ பூரணமில்லை என்று எண்ணுகிறாயோ, அது மயக்கம் என்று உணர் ................................ நான் சந்தோசமாக இருக்கிறேன் அல்லது துக்கமாக இருக்கிறேன் என்ற ஒவ்வொரு நினைப்பும் பெரிய மயக்கமே (அறியாமையே); பின்பு இன்னோர் அறியாமைவரும்;- நான் பாடுபட்டு வழிபட்டு விடுதலை பெற முயல வேண்டும்' என்று, இந்த அறியாமை (மாயை), முந்திய அறியாமையைத் துரத்திவிடும். பின்பு இரண்டும் நின்றுவிடும்................................—

.........'நீ அதுவாக இருக்கிறாய்' என்று கேள்விப்பட்டவுடன், ஒரு கணத்தில் இந்தப் பிரபஞ்சம் அகன்றுபோய் உண்மை இயல்பு பிரகாசிக்கக்கூடியவர்களும் இருக்கிறார்கள். ஆனால் மற்றவர்கள், பந்த பாசக் கொள்கையை அகற்ற, பெரிய முயற்சி எடுக்கவேண்டி இருக்கும். இதற்கு யார் ஞானயோகியாக இருக்கத் தகுதி பெற்றவன் என்று நாம் அறியவேண்டும். பின்வரும் பண்புகள் நிறைந்தவரே தகுதியானவர்கள்.

''முதலில், கர்மபலன்களைத் துறந்தவராகவும், இவ்வாழ்விலோ அடுத்த வாழ்விலோ உள்ள இன்பநுகர்வுகளைத் துறந்தவராகவும் இருக்கவேண்டும். நீயே பிரபஞ்சத்தைப் படைத்தவனானால் 'நீ விரும்பிய எல்லாவற்றையும் நீ பெற்றுக்கொள்ளுவாய்; ஏனென்றால், நீ உனக்கு படைத்துக் கொள்ளுவாய்; காலந்தான் முந்தும், பிந்தும். சிலர் உடனடியாகப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்; மற்றவர்களில், அவர்களின் கடந்தகால வாசனைப்பதிவுகள், விரும்பியதைப் பெறுவதற்குத் தடையாக இருக்கும். நாம் எப்போதும், இந்த வாழ்விலோ, அடுத்த வாழ்விலோ, ஆசைகளை அனுபவிப்பதற்கே முதலிடம் கொடுக்கிறோம். வாழ்வு என்று ஒன்று இருப்பதை மறுத்துரையுங்கள்; ஏனென்றால், வாழ்வு என்பது இறப்பின் இன்னோர் நாமம். நீ ஒரு ஜீவராசி என்பதை மறு. யார் வாழ்க்கையை கவனமெடுக்கப்போகிறார்கள்? வாழ்க்கை என்பது, கற்பனைகளில் ஒன்று: இறப்பு அதன் மற்றச் சோடி. இன்பம் என்பது கற்பனைகளில் ஒரு

பகுதி, துன்பம் அதன் மற்றப் பகுதி. இவ்வாறே இந்த இரட்டை அனுபவங்கள் எல்லாம். வாழ்வோடு அல்லது இறப்போடு, உனக்கு என்ன சம்பந்தம்? இவையெல்லாம் மனத்தின் படைப்புகள். இவ்வாறு ஆராய்ந்து நிராகரித்தலே, இவ்வாழ்விலே அல்லது அடுத்த வாழ்விலோ இன்பம் நுகரும் ஆசைகளைத் துறந்து விடுதலாகும்.

''அடுத்து, மனத்தைக் கட்டுப்படுத்துதல் வருகிறது; ஆசை அலைகளை விருத்திசெய்யாது சாந்தப்படுத்துதல், மனத்தை நிலைப்படுத்துதல், புறக்காரணம் அல்லது அகக்காரணங்களால் மனதை சலனப்படுத்தாது இருத்தல், ஆகியவற்றை, மனத் தைரியத்தைக் கொண்டு செய்தல் வேண்டும். ஞானயோகியர், தமது உடல் உதவியையோ அல்லது வெளிச்சக்தியின் உதவியையோ ஏற்பதில்லை. வெறுமனே தத்துவ விசாரணை, அறிவு மற்றும் மனத்துணிபு, ஆகியவையே ஞானயோகி நம்பும் சாதனைக் கருவிகள்.

''அடுத்து திதிக்ஷ என்னும் சகிப்புத்தன்மை (எதையும் தாங்குந் தன்மை) வருகிறது. எல்லாத் துன்பங்களையும் முணுமுணுக்காமல், முறைப்பாடு செய்யாமல் ஏற்றல் வேண்டும். உடலின் இன்ப நுகர்வுகளை நாடி ஓடாமல் இருத்தலே திதிக்ஷ எனப்படுகிறது என்க'' மேலே சுவாமி விவேகானந்தா கூறியது என்னவென்றால் வெறுமனே, புத்திரீதியில், தான் பிரமம் என்று விளங்கி, அனுபூதியில் (நடைமுறையில்) அத்வைத பாவனை கைவரப்பெறாதவன், நிட்சயமாக சாதனைகளை மேற்கொள்ள வேண்டும்; சில பண்புகளைக் கொண்டுள்ளவனாக இருக்கவேண்டும் என்பது. அவற்றையே மேலே தந்துள்ளோம்.

இனி, எவ்வாறு ஒரு குரு, ஒரு ஆத்மீக சாதகனை, ஆத்மீக வளர்ச்சியில் உயர்த்தலாம் என்று பார்ப்போம். பகவான் சாயி கூறுகிறார், ''குருவைத் தேடி அலையாதே. தகுதி வாய்ந்த குருவை நீ கண்டு பிடிப்பது கடினம். கடவுளையே குருவாகக் கொள்'' என்று. சத்ய சாயி பகவானை பக்தர்கள் தமது குருவாகவும் கடவுளாகவும் கொண்டே வாழ்கிறார்கள். குரு வந்து, சாதகனுக்கு தீட்சை செய்து, மந்திரம் உபதேசித்துச் செல்ல வேண்டும். என்ற நியதி இல்லை. ஏனென்றால், பகவான் சாயியின் கூற்றுப்படி அவதார புருடர், தீட்சை கொடுப்பது கிடையாது. அவதார புருடரின் ஒரு சொல்லே, ஆத்மீக சாதகன், தன்னை உணர்ந்துகொள்ளப் போதுமான உந்துசக்தி. நாம் சாயி பகவானின் உபதேசங்களைப் பின்பற்றி வருவோமாயின், அதுவே எமது சாதனை.

அதுவே எமக்கு வீடுபேறு அளிக்க, கூடிய போதுமானது. ஆத்மீக சாதனையில், பத்தின் ஏழு பகுதியும் 'ஆத்மவிசாரம்' என்று சத்ய சாயி கூறுகிறார். ஏனைய மூன்று பகுதியில்தான், ஏனைய தவ, விரதங்கள் தங்கியுள்ளன. பகவான் சாயியின் கூற்றுக்கிணங்க, முதன் முதலில் நமக்குத் தேவையானது சத்சங்கம் (Good Company) இத னைச் சைவம், சங்கமம் என்று அழைக்கும். அடியார் கூட்டம், அடியார் சகவாசம் என்பதே அதன்பொருள். ஆத்மீகத்தில் உயர்ச்சி அடைந்தவரோடு அணைந்து பழகும்போது, சாதகனொருவனுக்கு ஆத் மீகம் துலங்குகிறது. இதுபற்றி சுவாமி விவேகானந்தர் கூறுவதைப் பார்ப்போம். "இந்த துரிதப்படுத்தும் உந்துசக்தி, புத்தகங்களைப் படிப்பதிலிருந்து, பெறப்படமுடியாதது. ஒரு ஆத்மா, இன்னோர் ஆத்மாவிடம் இருந்தே, இந்த உந்துசக்தியைப் பெறலாமேயொழிய, வேறொன்றிலிருந்தல்ல..........................—
.........உந்துசக்தியைக் கொடுப்பவர் குரு; பெறுபவர் சீடர்....... என்று கூறுகிறார்.

ஞானயோகி (ஞானப்பாதையில் செல்லும் ஒருவன்), வெளி சக்தியொன்றையும் நம்பவில்லை. குருவோ, அவதாரமோ கடவுளோ புறத்தேயிருந்து எதனையும் உதவுவதில்லை என்பதே அவனது கருத்து. இருப்பினும் பகவான் சாயி கூறுவதுபோல் ஒருவனுக்கு இயற்கையே மெய்யான குரு, இயற்கையின் நிலையாமையைக் கண்டே ஒருவன், தான் நிலைத்தவன் என்று தருக்கரீதியில் முடிவுகொள்ளு கிறான். ஆகவே புறப்பொருளே, அவனுக்கு, அகப்பொருளை நாட வைத்தது. மாயையே மறைமுகமான குருவாகியது. இந்தரீதியில் ஒரு குரு, சாதகனைத் துலங்கவைக்க முடியும். குருவின் தொழிற் பாட்டை பகவான் சாயி பின்வரும் கதையால் விளங்கவைக்கிறார். ஒருவன் பத்து ரூபா கடன் கேட்டு இன்னொருவனிடம் சென்றான். செல்லும்போது கையில் ஒரு புத்தகத்தையும் வைத்திருந்தான். மற் றவன், இவனுடைய புத்தகத்தை வாங்கி விரித்தபோது, அதில் ஒரு பத்து ரூபாத்தாள் இருந்தது. உடனே உரியவனிடம் காட்டி, நீ தேடிய பணம் உன்னிடமே இருக்கிறது என்றான் மற்றவன். இதே போன்று, நாம் தேடியலையும் ஆத்மா எம்மிடமே இருக்கிறது. குருவோ அதனைஎமக்குக்காட்டித்தருகிறார். எப்படிஒரு ஆத்மாகுரு இன்னோர் ஆத்மாவைத் துலங்கவைக்க முடியும் என்று அத்வைத தத்துவத்தில் அறியவைக்க, இதோ ஒரு உதாரணம் தருகிறோம். சூரியனுடைய ஒளி ஒரு மரத்துண்டிலும், ஒரு பஞ்சுக் குவியலிலும் ஒரு வில்லையிலும் பட்டுக்கொண்டே இருக்கிறது. இப்போது, அந்தக் குவிவுவில்லையைப்

பயன்படுத்தி, ஒளிக்கற்றைகளைக் குவியச்செய்து, பஞ்சுக்குவியலை எரிக்கலாம். ஆனால் அதே அளவு பிரயத்தனத்தோடு, மரத்துண்டை எரிக்க முடியாது. இந்த உவமானக்கதையில், குவிவுவில்லை, குருவுக்கும், பஞ்சு, பக்குவமடைந்த ஆத்மாவுக்கும், மரத்துண்டு, பக்குவப்படாத ஆத்மாவுக்கும், சூரியன் பரப்பிரமத்திற்கும் உவமானம். வில்லையிலும், பஞ்சிலும், மரத்திலும் ஒளி பட்டுக்கொண்டே இருக்கிறது. இருப்பினும் வில்லையினால் பஞ்சை ஒளிரச்செய்ய முடிந்தது. பிரமம் ஒன்றால், ஒளியூட்டப்படும் குருவே, பிரமம் ஒன்றால், ஒளியூட்டப்படும் சீடனுக்கு, பிரமத்தின் வெளிப்பாட்டை கூடுதலாக பெற்றுக்கொடுத்தது. அதாவது, குருவின் உபதேசம், வாழ்வுமுறை, சீடனின் காரண சூக்குமசரீரத்திற்கு வளர்ச்சியைக் கொடுத்தது. ஆகவே பிரமத்தை மிகக்கூடுதலான அளவு பிரதிபலனம் செய்யும் அவதாரரான சாயி, பல பல ஆத்மசாதகருக்கு ஆத்மீகத்தை அருள முடியும் என்பதில் சந்தேகம் இல்லை. சாயியின் உபதேசமும், தரிசனமும் எம்மை மாற்றிவிடுகின்றன. அவரின் பரிசமும் (தொடுகை) மனவிருப்பமும் எம்மை மாற்றிவிடுகின்றன. அடியார்களுக்கு, நம்பிக்கையூட்ட, வெளியில் (Space) இருக்கும் சக்தியை ஒடுக்கி விபூதி, மற்றும் பொருட்களை படைத்தருளுகிறார். மக்கள் ஆங்காங்கே பிரார்த்திக்கும் கடவுளின் பெயரிலே மக்களுக்கு ஆகவேண்டிய நலன்களை அளிக்கிறார்.

மேற்கூறியவாறு பக்தியோடு கலந்த ஞானநெறியே தலையாயது. பகவான் ஸ்ரீ சங்கரர், ஞானத்தை ஓங்கவைத்த அளவிற்கு பக்தியையும் ஓங்கவைக்க முடியவில்லை என்று பகவான் சாயி கூறியுள்ளார். அதாவது, பக்தியும் ஞானமும் கலந்து செல்லும்போது, பலர் பயன் பெறுவர் என்பது கருத்து. பகவான் சாயியின் அவதாரம் இரண்டையும் ஓங்கவைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இக்கட்டுரையில் இருந்து. ஞானயோகமே சிறந்தது என்றும், ஞானயோகத்திற்கு உள்ளுடலாக இருப்பது பக்தியென்றும் கண்டோம். ஞானயோகி, இவ்வுடலிலே, இங்கே முக்தியை அனுபவிக்கிறான். ஞானம் கலவாத சகுணப்பிரம உபாசனா பக்தன், காரண சரீரத்தில் பலகாலம் வாசஞ்செய்து, பிரளயத்தின் போதே முக்தி பெறுகிறான். இக்கருத்துகள் உபநிடதங்களில் காணக்கிடக்கின்றன. விஞ்ஞான ரீதியில் இவற்றை நிரூபிக்க முடியாது. இவை, ஞானிகளுக்கு கிடைத்த வெளிப்பாடே. ஆகவே ஞானம் ஒன்றே முக்திக்கு வழி என்று ஸ்ரீ சங்கரர் கூறியதை பகவான் சாயியும் நாமும் ஒத்துக்கொள்ளுகிறோம். வரட்டு ஞானமாக இல்லாமல் கனிந்த ஞானமாக (பிரமம்பால் நம்

பிக்கையும் அன்பும் உள்ளவராக:– பக்தி உள்ளவராக ஒருவர் இருக்க வேண்டும் என்ற நிலை) இருக்கவேண்டும், என்பதே கருத்து. வரட்டு ஞானக்காரர், பாமரனுடைய பக்தி சாதனைகளை (உ ம் விரதம், பிரதட்டை போன்ற) ஏளனம் செய்யக்கூடாது. அது எல்லாம் பிரமத்தின் லீலா விநோதம் என்று கண்டு கொள்ளவேண்டும். ஒருவன் பிரதட்டை செய்கிறான் என்றால், தானே பிரதட்டை செய்கிறதான அத்வைத விளக்கம் வரவேண்டும். இதுதான் மக்களை வளம்படுத்தும் நடைமுறை வேதாந்தம்.

# 6. சங்கர வேதாந்தமும் சிவசோதி விளக்கமும் அவதார வருகையும்

இரு பெரும் நெறிகள் என்று திரு. க. சொக்கலிங்கம், எம். ஏ. அவர்கள் எழுதிய நூலில் இருந்தே சங்கர வேதாந்தம் என்ற பகுதியை எடுத்துப் போட்டுள்ளோம். அவர், கி. லக்ஷ்மணன் அவர்களின்' இந்திய தத்துவ ஞானம், என்னும் நூலையும், காலாநிதி சந்திரதர்சர்மா அவர்களின் 'A critical Survey of Indian Philosophy' என்னும் நூலையும் ஆதாரங்களாகக் கொண்டு எழுதியதாக, இரு பெரும் நெறிகள் என்ற நூலில் குறிப்பிடுகிறார். வாசகர்கள், ஸ்ரீ சங்கரருடைய நேரடிக் கூற்றுக்களை அறிய விரும்பலாம் என்றே இதனை இங்கு தருகிறோம். பிற்பகுதியில், சிவசோதி விளக்கத்தையும் கண்டுகொள்க.

**சங்கரவேதாந்தம்:—**

சங்கராச்சாரியாரின் கருத்துப்படி உண்மையில் உள்ள பொருள் ஒன்றுதான். உபநிடதங்களில் ஆன்மா என்றும் பிரமம் என்றும் சுட்டப்படுவது எதுவோ அதுவே உள்பொருள். அது பூரணஞானமே சொரூபமானது (ஞானசொரூபம்). வேறு வகையிலே சொல்வதாயின் அதன் சுவரூபமே ஞானம் ஆகும். (சொரூபஞானம்). அது குணங்கள் அற்றது (நிர்க்குணம்). அதற்கு விசேட இயல்புகள் எவையும் இல்லை (நிர்விசேடம்). பிரமம் மாயையாகிய தனது சக்தியோடு இணைந்துள்ளது. மாயையை மூலவித்தை எனவும் குறிக்கலாம். நிர்க்குணப் பிரமம் மாயை காரணமாகக் குணங்கள் உடையதாகத் (சகுணப்பிரமம்) தோற்றுகின்றது. இந்நிலையில் பிரமம் சகுணப்பிர

மம்), சவிசேடப்பிரமம், அபரப்பிரமம் என்ற பெயர்களால் வழங்குகின்றது, அதனை ஈசுவரன் எனவும் குறிப்பர். ஈசுவரனே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியதொழில்களை நிகழ்த்துவன். உலகம் என்பது ஈசுவரனின் தோற்றமே.

சீவன் என்பது விடயம், விடயி ஆகிய இரண்டுடனும் சம்பந்தம் உடையது. அதன் விடய நிலையில் (பௌதிகச் சார்பற்ற நிலையில்) அது ஞானவடிவினதாய்ச் சாட்சியாய் விளங்கும். அதன் விடயி நிலை என்பது அந்தக் கரணங்களோடு கூடிய நிலையாகும். அஃதாவது பொறிகளோடிணைந்து வினைகளைப் புரியும் நிலை. ஆழ்துயிலில் சீவன் நிலைக்கின்ற பொழுதுகள் தவிர்ந்த மற்றைய பொழுதுகளிலெல்லாம் அது செயற்பட்ட வண்ணமே இருக்கும். அந்தக் கரணங்களுக்கு மூலாதாராமாயுள்ளது அவித்தை (அறியாமை). அது ஆன்மாவாகிய பூரணத்தைக் கூறுடையதாகத் தனித்தனி ஆன்மாக்களாகத் தோற்றுவிக்கின்றது. புலக்காட்சியின் பொழுது அந்தக் கரணங்கள் குறித்த பொறியோடிணைந்து புறப்பொருளோடு தொடர்புறுங் காலத்தில் அப்பொருளைத் தனித்த வடிவம் உடையதொன்றாகக் காட்டுவதும் அவித்தையே. விழிப்பு நிலையில் (சாக்கிரம்) அந்தக் கரணம் பொறிகளால் நெறிப்படுத்தப்படுகின்றது. துயில் நிலையில் அந்தக்கரணம் மட்டுமே செயற்படுகின்றது. ஆழ்துயில்நிலையில் அந்தக்கரணம் அவித்தையினுள் மறைந்து நிற்கின்றது. ஆழ்துயில் நிலையிலும் ஆன்மா, தான் தனித்தன்மை உடையது என்ற உணர்வினை இழப்பதில்லை. காரணம் சாட்சியான அது அவித்தையுடன் கூடுவதே. அவித்தையினை அழித்து அதன் கட்டினின்றும் ஆன்மா விடுபடுகையில் ஆன்மா தான் தனியான்மா அன்று, பரமான்மாவே என்ற ஞானத்தை அடைகின்றது.

மாயை என்பது மாயமானதன்று. அது அறிவற்றது மட்டுமன்று, பிழையான அறிவைத் தருவதும் அதுவே. உண்மைக்கும், பொய்மைக்கும் இடையில் குறுக்கிட்டு நிற்பது மாயையின் இயல்பு. அது விளக்க ஒண்ணாதது உள்ளதும் அன்று, இல்லதும் அன்று. உள்ளதும் இல்லதுமாகிய இரண்டியல்பும் கொண்டதும் அன்று.

(1) மாயை உள் பொருளன்று. ஏனெனில் உள்பொருள் பிரமம் மட்டுமே.

(2) அது இல் பொருளுமன்று ஏனெனில் பிரமம் உலகாகத் தோற்றுவதற்குப் பொறுப்பாய் உள்ளது அதுவே.

(3) அது உள்ளது, அது இல்லது என்று கூறுவதும் தவறே, ஏனெனில் அந்தக் கூற்று முரணுடையதாகும்.

ஃ அது உள்ளது இல்லதாகிய இரு இயல்புகளுக்கும் அப்பாலான சதசத் விலட்சணத்தை'தை உடையதாகும். மாயை பொய்யானது என்பதால் மித்யை எனலாம். ஆனால் அது குதிரைக் கொம்பு போன்று உலகினில் இலாப் பொருள் எனலும் தவறே. அது பாவரூபமானது.

சங்கரரைப் பொறுத்தவரை தோற்றமாத்திரையில் உலகம் உண்மையானதே. அது மாயம் அன்று. எதார்த்த உண்மை. அவர் கனவுநிலை(சொப்பனாவஸ்தை)துயிலிருந்து விழிப்புநிலையை(சாக்கிராவஸ்தையை) வேறுபடுத்துகிறார். கனவு நிகழ்ச்சி நடந்து முடியும் வரையில் பொய்யானதன்று. விழித்த பின்னர் தான் அந்நிகழ்ச்சியின் பொய்மையை நாம் உணர்கின்றோம். இதுபோன்றே உண்மை ஞானம் வெளிப்படும்வரை இவ்வுலகம் உண்மையானதே. அதில் நிகழும் நிகழ்வுகளும் சீவன்களின் இயக்கங்களும் செயற்பாடுகளும் உண்மையானவையே. இது வரையில் கனவுநிலையும், விழிப்பு நிலையும் ஒற்றுமைத்தன்மை உடையனவே. ஆனால் கனவு தனிப்பட்டது. அது சீவனால் உருவாக்கப்படுவது. உலகமோ பொதுவானது. அது ஈசுவரனது படைப்பு. சீவனால் பொதுவுக்கும் தனிப்பட்டதற்கும் அடையாளம் காணமுடியாத அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறது. அதற்கு வேறுபாடு ஒன்றே தோற்றுகின்றது (கனவு பொய், நனவு உண்மை என்ற வேறுபாடு) அவித்தையே இல்லாதவற்றைத் தோற்றுவிப்பதும், மறைப்பதும் ஆகிய செயல்களை (ஆவரணம், விஷேபம் நிகழ்த்திச் சீவனைத் தன் கட்டுக்குள் வைத்திருக்கின்றன என்ற உண்மை சீவன்களுக்குப் புலனாவதில்லை. ஈசுவரன் உலகுக்கும் தனக்குமிடையேயுள்ள இணைப்பிலிருந்து எக்காலத்தும் விடுபடாதவன். ஆனால் மாயையின் மறைக்கும் இயல்பினால் அவன் உலகமாக வேறுபட்டுத் தோற்றுகிறான். சீவன்கள் இவ்வுண்மையை உணர்ந்து நிர்க்குணமாகிய பரப்பிரமமே உண்மையானது, என்று அறிவதாகிய ஞானத்தைப் பெறல் வேண்டும். அந்த ஞானம் பெற்றோரே சீவன் முத்தர்கள். (இவ்வுடலுடன் கூடியிருந்த வண்ணமே தமது ஞானத்தினால் முத்தி நிலைக்குத் தகுதி பெற்றோர்) இச் சீவன் முத்தர்கள் தமது இறப்பின் பின் விதேக (தேகம் அற்ற) முத்தியை அடைவர். இதுவே சங்கரரது (கேவலாத்துவித) வேதாந்த சாரம்.

சிவசோதி விளக்கம்:—

வாசகர்களே, இந்த அத்தியாயத்தில் தரப்பட்டுள்படி, பார்க்கும் போது, ஒரே குழப்பமாக இருக்கிறதல்லவா? ஏன், நிர்க்குணபிரம்மம், மாயை, சகுணப்பிரம்மம் (அல்லது) ஈஸ்வரன், என்ற பதங்களையெல்லாம் ஸ்ரீ சங்கரர் பாவித்தார், என்றால், சில அனுபூதி நுட்பங்களை, வேறுபடுத்திக் காட்டவே, நம்மைக் குழப்பவல்ல. உள்ள பொருள் ஒன்றுதான். அந்த ஒன்றில் இருந்துதான், நானும் வந்தேன். நீங்களும் வந்தீர்கள் இந்தப் பிரபஞ்சமும் வந்துள்ளது. இப்போ, எனது ஊனக்கண்ணால், அதாவது, உள்ளபடி காண வல்லமையற்ற சக்தியால் ஆன, இந்தக் கண்ணால், உங்களுடைய ஊனவுடலையும் சடப்பிரபஞ்சத்தையுமே காண்கிறேன். ஆனால் அறிவோடு பார்த்தால், அந்த ஒன்றான நிர்க்குணபிரமத்தில் இருந்து வந்த உங்களை (பிரபஞ்சத்தை) நிர்க்குணபிரமமாக காணமுடியாமல், சகுணப்பிரமமாகவே (குணங்கள், வேறுபாடுகள் உள்ளதாக) காண்கிறேன். முன்பு கூறியபடி, இப்படிக் காண்பதற்கான காரணம், எனது, சடத்தால் (ஊனத்தால்) ஆன காரண-சூக்கும்-ஸ்தூல சரீரமே. இந்த மூன்று சரீரத்தையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் எனக்கும் ஒன்றும் புலப்படாது. காரணம் என்னவென்றால், மூன்று சரீரமும் நீங்கினால் 'நான்' நிர்க்குணபிரம்மம். முச்சரீரங்களும் மாயை. ஆகவே மாயை காரணமாகவே, நான் நிர்க்குணப் பிரமத்தை சகுணப்பிரமமாகக் (ஈஸ்வரனாகக்) காண்கிறேன். நீங்களும் முச்சரீரமாகிய மாயை காரணமாகவே சகுணப்பிரமத்தையே காண்கிறீர்கள். நான் ஒரு சகுணப்பிரமம். காரணம் முச்சரீரம். முச்சரீரமே என்னை சகுணப்பிரமமாகக் காட்டுகிறது. அதாவது மாயையே சகுணப்பிரமம். ஆனால், மாயை ஒரு அசேதனம் (சடம்) என்றமையால், ஈஸ்வரன் என்ற பெயரைக் கொடுத்து, ஈஸ்வரனே சகுணப்பிரமம் என்றும், முத்தொழிலை ஈஸ்வரனே செய்வதாகவும் ஸ்ரீ சங்கரர் கூறுகிறார். நிர்க்குணபிரமம் மரம் எனின், சகுணப்பிரமம் அம்மரத்தால் செய்யப்பட்ட யானை உருவம். மரமும் உண்மை, யானைவடிவமும் உண்மை. ஒன்று காரணம், மற்றது காரியம். பகவான் சாயி சொல்லுவார், "ஏன், பொன் நகையாபரணங்களுக்கு ஏங்குகிறீர்கள்; பொன்னுக்காக ஏங்குங்கள். பொன் இருந்தால், விரும்பிய ஆபரணங்களை, விரும்பிய காலத்தில், விரும்பிய அழகில் செய்துகொள்ளலாம்," இதேபோன்று, நாம் காரியமாகிய பிரபஞ்சத்தில் மயங்காது, காரணமாகிய பிரமத்தை அடையவேண்டும். காரணமே, இன்னோர் வடிவில் காரியமாக உள்ளது. நான் ஒரு நிர்க்குணபிரமம்; நான், பிரபஞ்சத்தின் அந்தர்யாமியாக இருக்கும் நிர்க்குணபிர

மத்தை காணமுடியாது. நான் எப்படி என்னைக் காண்பது; நான் என்னைக் காண்பதென்றால், பிரபஞ்சவடிவில் தான் காணலாம். ஆய்வின் முடிவு உள்ளது ஒரு பொருள் என்பதே.

இனி, முன் அத்தியாயங்களில் கூறியுள்ளபடி, வாசகர்களுக்கு, அத்வைத உண்மையை, நாம் விளங்கிக் கொண்ட வண்ணமாக, விளங்கவைக்க முயலுகிறேன்.

அண்டசராசரமெல்லாம் நிரம்பியபடி, விரிந்து ஒரு ஒளி (பேரொளி) (Light ot Lights) இருக்கிறதாகவும் அந்த ஒளி, ஓம், என்ற சத்தத்துடன் அதிர்ந்துகொண்டு இருப்பதாகவும் கொள்க. இந்தப் பேரொளியே பிரமம் என்று வைத்துக்கொள்க. இந்தப் பேரொளி வெவ்வேறு விதங்களில் (rates) அதிர்ந்துகொண்டு இருக்கிறது என்பதை யோகானந்தா பரமகம்சா தெளிவாகக் கூறியிருக்கிறார். இந்தப் பேரொளிக்கு அவர்கொடுத்த பெயர் COSMIC E᷊ERY. இந்தப் பேரொளி குறைந்த அதிர்வுவிதத்தில் (Vibratory rates) அதிரும் பொழுது சடப்பொருள் பெறப்படுகிறது என்பது எம் கருத்து. சற்று அதிர்வு கூட அதிர, நுண்ணுயிர் பெறப்படும் என்க மேலும் அதிர்வு படிப்படியே கூட, பெரிய பெரிய பிறவிகள் தோன்றும் என்க. மனிதப்பிறவி என்பது' (அதாவது முச்சரீரமும்,) ஒரு குறிக்கப்பட்ட அதிர்வுவிதத்தில், அந்த ஒளி அதிர்வதால் ஏற்பட்டது என்க. அந்த ஒளி, அதிர்வைக் கூட்டிக்கொண்டே அதிகரித்துக்கொண்டே) போகிறது இப்படி அதிர்வு அதிகரிக்க, அதிகரிக்க, அந்த உயிரானது ஆத்மீகத்தில் முன்னேறிக் கொண்டு போகிறது. அந்த அதிர்வு ஒரு குறிக்கப்பட்ட எண்ணிக்கையைத் தாண்டியவுடன், முச்சரீரமும் (குறிப்பாக காரணசரீரம்) சடத்தன்மையற்று ஒளியாகிவிடுகிறது என்க. காரணசரீரம் என்பதே மனம். ஆகவே, ஒளியின் அதிர்வே ஒரு கால எல்லையில், நமது மனத்தையும் அளித்துவிடுகிறது. இதுவே முத்தி. அதாவது சிவமாகிய பேரொளியில், ஜீவாத்மாவாகிய நாங்கள் இரண்டறக் கலந்துவிடுகிறோம். ஆகவே சிவனுக்கும் சீவனுக்கும் உள்ள வித்தியாசம் அந்த ஒளியின் அதிர்வு வீதம். இந்த ஒளியை, அதிர்கின்ற இயக்கம் காரணமாக, நிர்க்குணபிரமம் என அழைக்க, உபநிடதங்கள் இடம் கொடாது. ஆகவே, இந்தப் பேரொளி, பிரமத்தின் சக்தியாகிய மாயை. மாயையில் உள்ள எனக்கு, பிரமம் இந்த ஒளிவடிவமாகவும் ஒலிவடிவமாகவும் தெரிகிறது.

உண்மையில், இந்த ஒளிபற்றி, உபநிடதங்களும் பிரமசூத்திரமும் வேறு சாஸ்திரங்களும் கூறுகின்றன. இந்த ஒளியை, யோகியர், ஞானியர் காணுகின்றனர். இதுதான் புராணங்களில் பேசப்படும் சிவசோதி. சக்தியே ஒடுங்கிச் சடப்பொருளாகின்றது என்ற விஞ்ஞான விளக்கமே, இந்தச் ஒளிச்சக்தியின் அதிர்வு வேறுபாடே சடப்பொருள்கள் என்பது. யோகானந்தா பரமகம்சா என்ற யோகி, இதுபற்றிப் பேசியிருக்கிறார். ஜீவ களும் இந்த ஒளியின் அதிர்வுதான் என்பது பற்றிக் கூறியதாக யான் இன்னமும் அறியவில்லை. ஆனால், சாயி சரவணமுத்து (சத்யசாயி வேதாந்த தபோவன கர்த்தர்) எனக்கு அளிக்கும் விளக்கங்களில் இருந்து மேல்கூறிய முடிபுக்கு வந்துள்ளேன். சாயி சரவணமுத்து, ஒளியை அடிக்கடி காண்பவர் நாயன்மார்களும் கண்டார்கள். மனதை, மனத்தால் ஒருங்கு சேர்ந்தால் (Concentration on mind நமது முச்சரீரமும் (Causal body, Subite body and gross body) நுண்மை பெறுகிறது இதனால் யோகியர் ஞானியர், அந்த ஒளியைக் காண்கின்றனர். சகுணப் பிரமமொன்றை உபாசனை செய்யும் யோகி ஒருவர், சகுணப்பிரம்ம (உருவக்கடவுள், உ+ம்: சிவன்) வடிவிலே தான், அந்த ஒளியைக் காண்கின்றனர். அதாவது, அந்த ஒளி, அவர்கள் உபாசிக்கும் வடிவில் தோன்றுகிறார் என்க. அந்த ஒளியால் படைக்கப்பட்ட மனிதருக்கு, உள்ள வல்லமைகள் எல்லாம், இந்த ஒளிக்கு உரியன. உதாரணமாக, பகவான் சத்யசாயி, தனது ஸ்தூல உடலை விட்டு, சூக்குமத்தில் (காரணமுட்பட) சென்று, வேறு ஸ்தூல உடலை சக்தியினின்றும் தோற்றுவித்து, அந்த உடலில் புகுந்து, பல்லாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள தமது பக்தரிடத்து செல்லுகிறார் என்றால்' மூலப்பேரொளிக்கு, எடுக்க முடியாத வடிவம் உண்டா? அவ்வொளியை வெறுமனே சடத்தன்மை (அசேதனம்) ஆனது என்று கூறிவிட முடியுமா? நாம் பிரபஞ்சத்தில் காணும், மெய்ஞான, விஞ்ஞான அறிவு எல்லாமே அந்தப் பேரொளியிடம் உண்டு. நமக்கு (அந்த ஒளியில் இருந்து வந்த நமக்கு) அது ஒளிவடிவில் தோற்றுகிறது உண்மையான நான், அந்த ஒளியே. அந்த ஒளியை பிரார்த்தித்து வேண்டியதையும் பெறலாம்; விஞ்ஞான விளக்கம் என்னவென்றால், நமது பிரார்த்தனை ஒரு அதிர்வு. இந்த அதிர்வு ஒரு விசையுள்ளதாய் இருந்தால், அந்த ஒளியில், இருந்து வேண்டிய பொருளைப் படைக்கப் பண்ணும். ஆனால், நமக்குப் பிரார்த்தனை செய்யும் சுதந்திரம்

உண்டா? இல்லை. அதுவே, அந்தவொளியே தன் அதிர்வினால், எம்மை இயக்குகிறது. நமது சிந்தனை, சொல், செயல் எல்லாம் அதனதே. இந்த நிலையிலேதான் மணிவாசகர், 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்றார். இந்த நிலையிலே தான் யோகர் சுவாமிகள், கூறும் தமது குருவின் மகாவாக்கியங்களான, எப்பொழுதோ முடிந்த காரியம், முழுதும் உண்மை, ஆர் அறிவார், ஒரு பொல்லாப்புமில்லை, போன்றவற்றிற்கு நாம் அர்த்தம் காணுகிறோம்.

மேலும் ஒரு குறிப்பு. உருவக்கடவுளும் அருவக்கடவுளும் என்ற அத்தியாயத்தின் பிற்பகுதியில்., இடப்பட்டிருக்கும், அப்பர் சுவாமிகளின்' நின்ற திருத்தாண்டகப் பதிகத்தில் முதலாம் பாடல் தவிர்ந்த மற்றய எல்லாப் பாடல்களின் ஈற்றடியிலும், ஒன்றில் எழுஞ்சுடராய் என்று அல்லது நெடுஞ்சுடராய் என்று அல்லது செழுஞ்சுடராய் என்று அல்லது பரஞ்சுடராய் என்று அல்லது அழல் வண்ணமாய் என்று சிவனைச் சோதியாய் அதாவது பேரொளியாய் (ஒளியாய்) சுவாமிகள் வர்ணிப்பதைப் பாருங்கள். சோதியாகிய சிவனே, அத்தனை விபூதிகளாயும் இருக்கிறான் என்று கண்டனுபவித்துப் பாடுகிறார்.

அவதார வருகை:—

பேரொளி அதிர்ந்துகொண்டு இருக்கும்போது, அடிக்கடி பூரணம் பெற்ற காரண சரீரத்தை உண்டுபண்ணும் அதிர்வுகளும் ஏற்படும் என்க. இந்தக் காரண சரீரங்களே, சூக்கும ஸ்தூலங்களை எடுத்து மத குரவர்களாக வருகின்றன. மனித வரலாறு இதுவரை கண்டிராத, வல்லமைகளோடு, சாயியின் காரண சரீரம் அந்தப் பேரொளியின் அதிர்வில் உண்டு பண்ணப்பட்டிருக்கிறது. அது தனக்குகந்த சூக்கும ஸ்தூலங்களை எடுத்து வந்துள்ளது என்க. தர்ம ஸ்தாபனஞ் செய்யும் அந்த மனவுடம்பு (காரண—சூக்குமம்) முதலில் சிரடி சாயித் ஸ்தூலததை எடுத்தது. பின்பு சத்யசாயித் தூலத்தை எடுத்துள்ளது. இனி, இதனை நீக்கிவிட்டு, பிரேம சாயித் ஸ்தூலத்தை எடுதது, பணிமுடிய முச்சரீரத்தையும் நீக்கி ஒளியோடு கலந்துவிடும். பல சாதுக்களின் பிரார்த்தனை அதிர்வுகள், திரண்டு பலம் வாய்ந்த அவதாரத்தை உண்டுபண்ணும் அதிர்வை உண்டாக்கிவிடுகின்றன என்று கொள்ளலாம். பிரமத்திற்கே நிகரான அவதாரங்களை (உ—ம் சாயி) நாம் விளக்குவது இயலாத காரியம் என்றே நினைக்கிறேன். சாயியும் அதனையே சொல்லுகிறார்.

# 7. சமுதாய வளர்ச்சிக்கு அத்வைதம் எவ்வாறு உதவுகிறது?

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', என்றபடியும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற படியும் ஒழுகுவதற்கு, எம்மை நெறிப் படுத்தக் கூடிய ஓரேயொரு சமயக் கொள்கை என்றால், அது அத் வைதமே. அது சமயக் கொள்கை மட்டும் அல்ல, அதுவே பிரபஞ்சம் பற்றிய உண்மையும், உள்ளது ஒன்று என்று தெளிவடைந்தால், அச்சம் இராது. யார் யாருக்கு பயப்படுவது? படைபட்டாளம் எனக்கெதி ராக வருகிறது. ஆனால் வருவது யார்? நானே பல திரளாக வரு கிறேன். அச்சம் இல்லை. பாம்பு யார்? பாம்பின் நஞ்சு எது? நான் என்னைத் தீண்ட முடியுமா? முடியாது. என்னைப் பாம்பு தீண்டி நான் மரணம் என்றால், அதன் அர்த்தம் என்ன? எனது ஸ்தூல உடல், மறுபடியும் பஞ்சபூதங்களாகச் சிதைவடைகிறது. நான், (காரண-சூக்கும சரீரம்) வேறு ஸ்தூலம் ஒன்றை தேர்ந்தெடுக்கிறேன். நானோ, எனது கைவிடப்பட்ட ஸ்தூலமோ, இல்லாமல் போவதில்லை. எனக்கு நெருங்கியவர் இறக்கிறார். இறப்பது என்ன? அவரது ஸ்தூ லம் மற்றும்படி அவரும் நானும் ஒருவரே. உண்மையான நானும் உண்மையான அவரும் ஒருவரே. அந்த ஒருவர் உட்பொருளே. அவ ரது இறப்பினால், எதனையும் நான் இழக்கவில்லை. ஆகவே, அச்ச மின்மை, துன்பமின்மை உறுதிசெய்யப் படுகிறது. இந்த தத்துவத்தை இறந்த அவரும் அறிந்திருந்தால், இறக்கும் தறுவாயில் 'அங்கே சந்திப்போம்'' என்று மனத்தால் உரையாடியிருப்பார்கள்.

நாங்கள், எவ்வளவு கூடுதலாகவும், விரைவாகவும் நம்மைச் சார்ந்தவருக்கு இத்தத்துவத்தினை புரியவைக்கிறோமோ அவ்வளவு ஆனந்த வாழ்வு ஏற்படும். மரணத்தால் அச்சமாகிய துன்பம் ஏற் படாது.

இனி, வெட்கம்—யாருக்கு யார் வெட்கப்படுவது? செல்வம்-எனது அயலவர்கள் செல்வத்தால் இன்பத்தை அனுப்பவித்தால், அது நான் அனுபவித்தது. அந்தஸ்து – அடுத்தவனின் உத்தியோக அந்தஸ்து என்னுடையது (பிரமத்தினுடையது) பொறாமை இல்லை. இனி ஆசையுமில்லை. என்னை மனங்கவர வைக்கும் பொருள் அல்லது உயிர் எது? நான் தான் அது. அது என்னுடைய வடிவே. நான் தான் அந்த வடிவமான பொருள் அல்லது உயிர்.

சாயி பாபா கூறுவார்,'' ''மலரும் பூவாகவும் மின்னும் நட்சத்திரமாகவும் இருப்பது நீ. அப்படி இருக்கையில், உன்னை கவரப் பொருளேது?''

மேலும், இந்தவகையான திருப்தி பூரணமாக ஏற்பட்டு, மனம், சலனமடையாது சாந்தி அடையும்போது, புத்தித் தெளிவு ஏற்படுகிறது. தனிப்பட்ட பிரச்சனையோ, பொதுப்பிரச்சனையோ, அப்பிரச்சனைக்கு வெகுவிரைவாகவும் சரியாகவும் தீர்வு எடுக்கிறோம். மனந் தெளிந்திருப்பதனால், பின்னே (எதிர்காலத்தில்) வரப்போவதை, முன்னே அனுமானிக்கும் சக்தியும் உண்டாகிறது. நாட்டு மக்கள் அரசியலால் குழம்பியிருக்க, அத்வைதி, சாந்தியோடு இருக்கிறான், நாட்டுப் பிரச்சனைக்கு தீர்வையும் காட்டிக் கொடுக்கிறான். சமுதாயம் விடும் தவறைக் கண்டிக்கிறான். சமுதாயம், விரும்பியோ, விரும்பாமலோ, இவனுடைய கட்டுப்பாட்டுக்குள் வரப்பார்க்கிறது. எப்பொழுதும் நடுவுநிலைமையைப் பேணுவதால், வெறுப்பவர்கள் இல்லை: நடுவுநிலைமையை நிலைநிறுத்த வேண்டிய, ஒரு சமுதாயப் பிரச்சனையில், இவன் சரியான தீர்ப்பை வழங்குகிறான். அப்போது, தாக்குண்ட பிரிவினர், இவனை வெறுக்கிறார்கள், ஆனால், பலர் பாராட்டி அணைக்கிறார்கள். சுயநலத்தை பேணாமல், பிறர்நலத்தை இவன் நாடுவதால் (இரண்டும் ஒன்றென்று அறிந்தவன் தானே.) இவனில். இவனால் நன்மை அடைபவர்கள், உயர்ந்த நம்பிக்கையை வைத்து இவனை நேசிக்கிறார்கள். தன்னுடைய கூட்டத்தாரிடையே, இவன் தலைவனாகிறான்.

மேற்கூறிய விதமாக, அளவு கடந்த நன்மையை, நடைமுறை அத்வைதம், மக்களுக்கு அளிக்கிறது. பலரும் இதனை விளங்கப் பயில முன்வராவிட்டாலும், நூறுபேருக்கிடையே ஒரு அத்வைதி இருந்து வழிகாட்டினால், சமுதாயம் நன்மை அடைந்தே தீரும்.
சத்யசாயி அவதாரம், அத்வைதத்தைப் பரப்பி மக்களுக்கு அளப்பரிய நன்மையைச் செய்து வருகிறது. பல அத்வைதிகளை உருவாக்கி அந்த இடங்களில் அற்புதமான மாற்றங்களைச் செய்கிறது.

ஒரு கடவுள் அவதாரம்(சாயி) வந்துநின்று, ''ராமா, கிருஷ்ணா, சாயி பாபா மட்டும் கடவுள் என்று இல்லை. நீயும் கடவுளே'' என்று அத்வைதத்தை பொழிந்து தள்ளினால், அது வரட்டுவேதாந்தமாகாது. இந்த வாசகம் எத்தனையோ பேரை, விழிப்படையச் செய்திருக்கும்.

# 8. புலால் உண்ணல்

இது ஆத்மீக சாதகர்கள் அறிய ஆசைப்படும் விடயம். இஸ்லாத்திலும், கிறிஸ்தவத்திலும் புலால் உண்ணலுக்கு இடமளிக்கப்படுகிறது. உயிர்களைக் கொல்லுவதற்கும் புலால் உண்ணலுக்கும் நிரம்ப வித்தியாசம். உணவுக்காக, உயிர்கள் கொல்லப்பட்டால், அது பாதிப்பை ஏற்படுத்தாது என்பது, அவ்விரு சமயங்களின் கொள்கை. இருப்பினும், இந்து சமயம், பௌத்த சமயம், புலாலை நிராகரிக்கின்றன. உணவுக்காக உண்ணப்படும் போது, உயிர் வதை இடம் பெறுவது தவிர்க்க முடியாதது என்பதற்காக, இந்த இரு சமயங்களும் அகிம்சை அடிப்படையில், நிராகரிக்கின்றன.

சிவநெறியாகிய சைவம் (இந்து சமயப் பிரிவு ஒன்று) புலால் உண்ணலை அடியோடு மறுக்கிறது சைவர்கள் என்றால் புலால் உண்ணாது, தாவர உணவுகளை உண்பவர்கள் என்ற கருத்துத் திரிபும் உண்டு. ஆனால், சைவர்களில் (சிவவழிப்பாட்டினரில்) எத்தனை பேர், உணவில் புலாலை விலக்கியுள்ளோம்? பெரும்பகுதி சைவ மக்கள், தமது சமயக் கோட்பாட்டுக்கு மாறாகவே நடக்கிறார்கள். பெருமையாகச் சொல்லுகின்றோம், ''சைவசமயம் உயிர்கொலையை ஏற்கவில்லை'' என்று ஆனால் புலால் இல்லாமல் நம்மால் வாழ முடியாமலே இருக்கிறது.

உயிர்கொலை, புலால் உண்ணல் என்பவை பற்றி சாதுக்களிடமும் சந்நியாசிகளிடமும் கேட்கிற பொழுது, அவர்கள் வெவ்வேறு விடைகளை அளிக்கிறார்கள் "ஸ்ரீபகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஞானக்குழந்தை" என ஜகன்மாதாவாகிய காளிதேவியாலேயே அருளப்பட்டவர் ஸ்ரீமத் சுவாமி பிரம்மானந்தர். சுவாமி விவேகானந்தரே, சுவாமி பிரம்மானந்தரை' ஆன்மிகச் சுரங்கம் (Spiritual Dynamo) என்று புகழ்ந்தவர். பக்தர் ஒருவர் சுவாமி பிரமானந்தரிடம் கேட்ட கேள்விகளையும் சுவாமியினது பதில்களையும் பாருங்கள்.

பக்தர்: எவ்வகையான உணவை நாம் உட்கொள்ளல் வேண்டும்? உணவிற்கென்று தனிவிதிகள் உள்ளனவா?

சுவாமிகள் :- இது மிகக் கடினமான ஒரு கேள்வி. இதற்கு பதில் சொல்லுவது அதைவிடக்கடினம். மனித உடலின் தன்மையில்

அதிக வேறுபாடு இருக்கிறது. ஒருவனுடைய உடம்பின் தன்மையைப் போல இன்னொருவனுடைய உடம்பு இருப்பதில்லை. எனவே எல்லோருக்கும் பொதுவான விதி ஒன்றை உண்டாக்க முடியாது. ஒரு பொருள், என் உடம்புக்கு ஒத்துக்கொள்ளும்; ஆனால் அது உன் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமற் போகும். எனவேதான், கீதை முதலிய நம்முடைய சாஸ்திரங்களில் உணவைப் பற்றி, சிறப்பாக ஒன்றும் சொல்லப்படவில்லை. கீதையில் உணவைப்பற்றி பொதுவான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது 'மீதூண்' விரும்பேல்'– அதிகச் சாப்பாடு உதவாது; நம்மால் ஜீரணிக்க முடியாத உணவை உட்கொள்ளக் கூடாது. ஒவ்வொருவரும் அவரவர் உடம்புக்கு எது ஒத்துக் கொள்ளுகிறது என்பதை ஆராய்ந்து அறிந்து அதன்படி உண்பதே சாலச் சிறந்தது.

**பக்தர்:–** சுவாமிஜி, மீன் மாமிசம் உண்டால் உயிர்வதை செய்வதாகாதா?

**சுவாமிகள்:–** அது வீண்பேச்சு, மீன் மாமிசம் உண்ணுவது தான் வதையா? அப்படியில்லை. அஹிம்ஸா பரமோ தர்ம'' என்று சொல்லப்படுகிறது. அது எப்போது? சமாதி ஏற்பட்ட பின்னர், ஞானம் அடைந்த பிறகு, எல்லா உயிர்களிலும் இறைவனைக் கண்ட பின்னர் அப்போதுதான் அகிம்சையைப் பற்றி பேசலாம். அந்த சமாதி நிலை அடையாமல் வெறுமனே வாயால் அஹிம்சை ஆகிவிடுமோ? 'நீ எதுவோ அதுவேதான் அந்த எறும்பும்; ஒருவித வேறுபாடும் இல்லை' என்று எப்போது பார்ப்பாயோ அப்போதுதான் சரியான அஹிம்சை வரும். அஹிம்சை என்று சொல்லுகிறாய். உடனே ஹிம்ஸையை விட்டுவிட முடியுமா? என்ன சாப்பிடுகிறாய்?– உருளைக் கிழங்கை நட்டால், செடி உண்டாகிறது. அதில் உயிர் இல்லையா? சாதம் சாப்பிடுவாய் அல்லவா? எந்த நெல்லை குத்தி சாதமாக்கிச் சாப்பிடுகிறாயோ, அந்த நெல்லை விதைத்துப்பார். அது பயிராகும்; அதிலிருந்து மறுபடியும் நெல் உண்டாகும். அதிலென்ன உயிர் இல்லையா? நல்லது தண்ணீரை எடுத்துக்கொள்- அதில் எத்தனை லட்சோபலட்சம் உயிர்கள் இருக்கின்றன? ஒரு 'மைக்ராஸ்கோப்' (பூதக் கண்ணாடி) மூலம் பார். எப்படி அந்தத் தண்ணீரைச் சாப்பிடுவாய்? உயிர் வாழவேண்டுமானால் மூச்சுவிட்டாக வேண்டும். நம் ஒவ்வொரு மூச்சிலும் எண்ணற்ற உயிர்கள் அழிகின்றன. அதிலெல்லாம் ஒரு குற்றமும் இல்லை ஒரு துண்டு மீனில் தான் வந்து விட்டது எல்லாக் குற்றங்களும். இந்த பேச்சு நிற்கக் கூடியதா? நல்லது, யார் மரக்கறி உணவுதான் நல்லது என்கிறார்களோ அவர்கள்,

பால், மோர், நெய், இதெல்லாம் உண்பார்களல்லவா! ஒரு பிராணிக்கு உரியதை வஞ்சித்து தாயிடம் பால்குடிக்கும் கன்றைப் பலவந்தமாக இழுத்துக்கட்டி விட்டு, அந்தப் பாலைத்தானே கறக்கிறார்கள்? பார்க்கப்போனால், அதுவும் மகாபாதகமான செயல்தானே. வீண் பேச்சுக்கள். இவையெல்லாம் நாட்டில் முன்னர் இருந்ததில்லை; பின்னால் வைணவ நெறியால் புகுத்தப்பட்டவை.

சுவாமி பிரம்மானந்தரின் விளக்கங்களைப் பார்த்தீர்களா? இப்படி இவர்பேச, முன்னைய திருவள்ளுவர் என்ன சொன்னார்?

''தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்' (251)

'படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்'' (253)

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்'' (260)

கொல்லாமை பற்றித் திருமூலர் சொன்னார்:—
''கொலையே களவுட் காமம்பொய் கூறல்
மலைவான பாதக மாம்அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோருக்கு
இலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே'' (241)

புலால் மறுத்தல் பற்றித் திருமூலர் சொன்னார்:—
''பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே'' (242)

தமிழிலே தோன்றிய ஒப்பற்ற அறநூலும் (திருக்குறள்) தமிழிலே தோன்றிய ஒப்பற்ற ஆகமநூலும் (திருமந்திரம்) கொலை, புலால் உண்ணலைக் கண்டிக்கின்றன. இதுவரை உலகு கண்டறியாத பரப்பிரமமாகிய இறைவனின் பிரதிநிதித்துவம் அல்லது அவதாரம் என்று அடியேன் கூறுகின்ற பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா, கொலை, மற்றும் உணவு விடையத்தில் கூறுகின்றனவற்றை கீழே பார்ப்போம்.

Try to prevent the five bodily sins – என்று கூறி, கொலை களவு, விபச்சாரம், மதுவருந்தல், மாமிசம் புசித்தல் ஆகிய ஐந்தை யும் நீக்க முயலும்படி உபதேசிக்கிறார். இது மனிதரால் செய்வது கடினம் என்பதற்காக, முயலும்படி வேண்டுகிறார் இன்னோர் உரை யில் எல்லா ஜீவராசிகளுள்ளும் தானே வாசம் செய்கிறதாக, அறிந்து அனுப ப்பவன், எப்படி ஒரு ஜீவராசியின் உடலைச் செகுத்து ஆத் மாவைப் பிரிப்பான்?'' என்று வினாவெழுப்புகிறார். இந்த இடத் திலே, சுவாமி பிரம்மானந்தருடைய விடைகளைக் கவனிக்க வேண்டும். ''நீ எதுவோ அதுவேதான் அந்த எறும்பும்; ஒருவித வேறுபாடும் இல்லை'' என்று எப்போது நீ பார்ப்பாயோ அப்போதுதான் சரி யான அஹிம்சை வரும், என்கிறார். இந்தப் பிரமஞானம் ஏற்பட முன்னர் உயிர்கொலைகளைத் தவிர்க்கமுடியாது என்பது சாயியின னதும் பிரம்மானந்தரதும் கருத்தாக இருக்கலாம். எனினும் உணவுக் காக உயிரைக் கொல்லுவதை சாயி, தனது வாழ்விலும் போதனையி லும் ஒத்துக்கொள்ளவில்லை. தமது பெற்றோர் கோழி இறைச்சி சமைக்கச் சேவலை அடைத்து வைத்திருந்த பொழுது, குழந்தைச் சாயி, சேவலை நெஞ்சோடு அணைத்து அதனைக் கொல்லவேண் டாம் என்று அழுதாராம். பிறப்பிலிருந்து மச்ச உணவை விலக்கிய சாயிக் குழந்தை, அயலில் உள்ள பிராமண வீட்டிலே உணவு வாங் கிச் சாப்பிட்டு வளர்ந்தது. சாயி புலாலை ஒதுக்கினார்; திருமணத் தையும் ஒதுக்கினார்; ஆனால் திருமணத்தை அங்கீகரிக்கிறார். ஆனால் புலாவை உண்ண வேண்டாம் என்று இன்னமும் பொது மேடைகளில் பேசவில்லை. மறைமுகமாக, 'சாத்வீக உணவுகளையே உண்ணுங்கள்' என்று அடிக்கடி கூறுவார். சைவ (தாவர) உணவி லும் ராஜத, தாமத குணங்களைத் தரும் உணவுகள் உண்டு. அதிக பால், தயிர், நெய், மற்றும் சில சில மரக்கறி வகை, சாத்விகத்தை தரா, அளவாகப் புரித்தால், மச்ச உணவும் சாத் கமாக இருக்க லாம். உடலுக்குத் தேவையான சத்துகள் உணவால் கொடுபடா விட்டால், ஆத்டிக வளர்ச்சியுமே தடைப்படும். தாவர உணவு உண் போா, உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் எல்லாம் தமது உணவில் உள்ளதோ என்று கவனிக்கவேண்டும். மச்சமாமிசக்காரரும் அதில் கவனம் எடுக்கவேண்டும்.

அமெரிக்கப் பக்தன் ஹிஸ்லொப், சத்ய சாயியிடம் சில கேள்வி கள் கேட்டார். மீன் உணவு உண்டால் அது தீங்காகுமா? என்ற கேள்விக்கு பகவான் சொன்னது, மீன் எப்பொழுதுமே, தண்ணீருக் குள் தான் வாசம் செய்கிறது, ஆனால் அதன் துர்நாற்றம், அற்றுப் போவதே இல்லை'' என்றார். அதனது விளக்கம், பிரிக்க முடியாத மணத்தையுடைய மீன் உட்கொள்ளப்படும்போது மனத்திலே துர்க் குணங்கள் ஏற்படும் என்பது. முழுச்சம்பாசனையையும் வாசித்தால்

இப்படித்தான் அந்த கருத்து அமைந்து வருவதை, வாசகர்கள் அறியலாம். What about flesh? என்றார் ஹிஸ்லொப் அதனைத் தொடர்ந்து. "It gives you animal Passion" என்றார் பகவான். இறைச்சி மிருக உணர்வுகளைத் தரும் என்பது கருத்து இங்கு நாம் கவனிப்பது என்னவென்றால், உயிர், கொலையாகிறது, ஜீவகாருண்யம், மறுக்கப்படுகிறது என்பதைத் தவிர, மச்சமாமிச உணவுகள் (அல்லது அதிக பால் போன்றவை அல்லது முட்டைகள்) உண்பவருடைய மனத்திலே மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றன. நாம் உண்ணும் உணவுக்கேற்ப, நமது சிந்தனைகள் அமைகின்றன என்பதற்கு விஞ்ஞான ஆராய்ச்சிகளும் விளக்கங்களும் உண்டு. மனமும் ஒரு சடப்பொருள் தான். மிக நுண்ணியது. நல்ல முறையிலே, ஆக்கப்பெற்ற தாவர உணவு, நல்ல ஆத்மீக மனோபாவனையை வளர்க்க உதவும் என்பது கருத்து. அதனால் மச்சமாமிசம் புசிக்காத, பிராமணர்கள் எல்லோரும் ஆத்மீக உயர்ச்சி உடையவர்கள் என்பதல்ல கருத்து, ஏனென்றால், பகவான் சாயியினுடைய போதனை, இதனை விளக்குகிறது. அதாவது, "நீங்கள் உண்ணும் உணவு மட்டும் உங்களுக்கு உணவென்று இல்லை. நீங்கள், ஐந்து புலன்களாலும் நுகருவனவும் உணவே" நல்லதைக் கண்டு, நல்லதை முகர்ந்து, நல்லதைக்கேட்டு, நல்லதை உண்டு, நல்லதை உணர்ந்தால் காரண-சூக்கும—ஸ்தூல சரீரங்களுக்கு நல்லது, என்பது கருத்து. உணவிலே மட்டும் நல்லதை (தாவர உணவு போன்றன) உண்டு, மற்றய ஐந்து புலனாலும் அந்தக் கரணங்களாலும் தீமையானவற்றை நுகர்ந்தால், என்ன ஆவது? வெளிப் பெருமைக்காக, பக்தன் என்று உலகு போற்றுவதற்காக, தாவர உணவை உண்டுகொண்டு, புலன்களாலும் பொறிகளாலும் (அந்தக்கரணங்கள் உட்பட) தீமையானவற்றை ஆற்றிக்கொண்டு இருந்தால், அதில் என்ன பிரயோசனம்? கடவுளைப் பக்தி பண்ணுகிறேன், தாவர உணவு சாப்பிடுகிறேன் என்ற பார்வையில் எல்லாக் சத்துருகளும் அடங்காத உணவை உண்டுகொண்டு, கட்டிலில் வருத்தத்தால் கிடப்போர் அனேகம் பேர் உண்டு.

Non – violence is the least violence என்றார் மகாத்மா காந்தி, அதாவது, தான் அகிம்சை' என்று சொல்லுவது மிகக் குறைந்தளவான கிம்சை என்றார். கோழியை வெட்டுவதிலும் பார்க்க, மீனைப் பிடிப்பது கிம்சை குறைவு. மீனைப் பிடிப்பதிலும், கத்தரிக்காய் பிடுங்குவது கிம்சை (துன்பம்) குறைந்தது, ஆனால் காந்தி மகான் கூறுவது, எந்த விடயத்திலும் மிகக் குறைந்த (the least) கிம்சையைத் தான், தான் அகிம்சை என அழைப்பதாக. ஏனென்

றால், கிம்சை சிறிதளவேனும் செய்யாமல் உயிர்வாழ முடியாது என்பதால், தவிர்க்க முடியாத கிம்சைகளைச் செய்து, தவிர்க்கக் கூடிய கிம்சைகளைத் தவிர்ப்பது மேலானது என்பதை நாம் உணரல் வேண்டும். ஒருவனுடைய குறிப்பிட்ட நோயொன்றிற்கு, வைத்தியர், மாமிசம் சாப்பிட்டுத் தான் நோயைக் குணப்படுத்த வேண்டுமென்று கூறினால், அவனுடைய மனைவி, பிள்ளைகளுக்கு கிம்சை செய்யாமல் இருப்பதற்காக, மாமிசத்தை (உயிருக்கு கிம்சை ஒன்று செய்து) உண்ணலாம் அது ஒப்பீடு. நாம் எந்தக் கட்டத்திலும் மச்ச மாமிசத்தை கைவிடுவதால், மற்றவர்கள் பாதிப்பு அடையாமல் பார்த்துக் கொள்வோமானால், அதுவே சிறந்த முடிபு, அதேநேரத்தில் ஐம்புலன்களால் நாம் அனுபவிப்பதையும் சாத்வீகமாக்கிக் கொள்ள வேண்டும். மேலும் தாவர உணவு புசிப்பதால், ஏனையோரைப் பார்த்து, மனத்தால் தன்னும் இகழும் பாவனை கூடாது. ஏனையோரை என்றது, அசைவ உணவுக்காரரை. நாம் உணவைத் தூய்மையாக்குவது, கொலைகளைத் தவிர்ப்பது எல்லாம் நமக்குள்ளே இருக்கும் மூர்த்தியே எல்லோருள்ளும் இருப்பது என்பதைப் புரிந்துகொள்ளவே, தாவர உணவால் ஒருவருக்கு, மற்றவரில் (அசைவரில்) வெறுப்பு (hatred) வருமேயானால், அந்த தாவர உணவு புசித்தும் பயனில்லை. ஆறு வருடங்களாக மச்ச மாமிசம் தவிர்த்து வந்த ஒரு சாயி பக்தன், தன்னுடைய பக்த அகங்காரத்தை முறியடிக்க மச்ச மாமிசத்தை மறுபடியும் உண்ணத் தொடங்கினான். தொடங்கி இருமாதத்துள், சாயிபடங்களில் விபூதி, குங்குமம் என்பன ஒரு மாதத்திற்கு மேலாகச் சொரிந்தன. சாயி நோக்குவது வெளி ஆசாரம் அல்ல, உள்ளத்தூய்மையே. உள்ளத்தூய்மைதான் பெரிது என்பதற்காக, மச்ச மாமிசத்தை தொடரவேண்டும் என்பதும் தவறு.

சுவாமி விவேகானந்தர், வெளிநாடுகளில் இருந்த போது, தான் மாமிசம் சாப்பிடவேண்டி வந்ததென்றும் தான் அந்தச் சூழ்நிலைகளில், தான் செய்வது தவறென்று தனக்குப் பட்டதாகவும் சொல்லுகிறார். சுருக்கமாகச் சொன்னால், உயர்ந்த ஆத்மீக சாதகர்கள், சைவ உணவையே புசிக்க விரும்புவார்கள். இருப்பினும் ஞானம் கைவரப் பெற்ற ஒருவர் (உ+ம்; சுவாமி விவேகானந்தர்) மாமிச உணவு சாப்பிட்டாலும், அது அவருடைய ஞான அக்கினியிலே பொசுக்கப்பட்டு விடுவதால், அவரை பாதிப்படையச் செய்யாது. ஸ்ரீராமகிருஷ்ண பரமகம்சருடைய சீடர்களுள், தலைசிறந்த இருவர் என்றால், சுவாமி பிரம்மானந்தாவும், சுவாமி விவேகானந்தாவும். இருவர்களுக்கிடையேயும் இந்த விடையத்தில் கருத்துச் சிறிது முரண்

படுகிறது. உலகுக்கு வழிகாட்ட வந்த, பகவான் ஸ்ரீ சத்ய சாயியின் கூற்றுக்களைப் பார்க்கிற பொழுது, மச்சம் மாமிசம் தவிர்த்தல் மிகவும் நல்லது என்று படுகிறது. ஆனால் சாயி, சைவ உணவுகளைப் பார்த்தல்ல அருள் சுரப்பது என்பது தெளிவாகிறது.

ஸ்தூல சரீரம், மனச்சரீரத்தை மாற்றும் என்பது யோகிகளும், விஞ்ஞானிகளும் ஒத்துக்கொண்ட விடயம். நாம் உண்ணும் உணவும், சுற்றாடலால் ஏற்படும் தாக்கங்களும், நமது எண்ணங்களைத் தருகின்றன. மாம்பழத்தை உண்டால், சமிபாடு அடையும் போது, நுண்ணிய பகுதிகளாகிய ஊட்டச் சத்துகள், ஸ்தூல உடம்புக்குச் சேர, அதனினும் நுண்ணிய பகுதி எண்ணத்தை கொடுக்கிறது. எண்ணங்களே (thoughts) மனவுடம்பை (காரண, சூக்கும சரீரம்) வளர்ப்பதும் அல்லது அழிப்பதும். தெய்வீக சிந்தனை, வளருவதற்கு சாத்விகமான உணவுகளும் சாத்விகமான பஞ்சப்புல நுகர்வுகளும், அவசியம் என்பதே பகவான் சாயியின் முடிபாகும்.

# 9 கர்மம்

அத்வைத தத்துவத்திற்கும், கர்மத்திற்கும் என்ன தொடர்புண்டு? மனிதரைப்பொறுத்தவரை,ஏன் ஜீவராசிகள் எல்லாவற்றையும் பொறுத்தவரை மூன்று' சரீரங்கள் உண்டு. காரணசரீரம்-அபிமானம், மகிழ்ச்சி, பேரானந்தம் ஆகியமூன்று இயல்புகளை அடையும் கர்மாவைச் (வினையைச்/செயலைச்)செய்யும்.சூக்குமசரீரம்-எண்ணம்,எண்ணமற்ற தன்மை உள்நோக்கிச் சிந்தித்தல், அறிவாற்றல், பகுத்தறியும் சக்தி,ஞானசக்தி ஆகிய ஆறு இயல்புகளை அடையும் கர்மாவைச் செய்யும். ஆகவே இரு சரீரங்களும் சேர்ந்து, ஒன்பது கர்மங்களையும் செய்யும். இவ்விரு சரீரங்களையும் சேர்த்து, 'மனவுடம்பு' என்றும், 'மனம்' என்றும் விபரிப்பார்கள். அடிக்கடி பொதுவழக்கில் சூக்கும சரீரம் என்று குறிப்பிடும்போது, காரணத்தையும் சூக்குமத்தையும் சேர்த்துக் குறிப்பிடுவார்கள். இதனையொட்டியே சூக்குமசரீரம், ஸ்தூலசரீரம் என்ற இரண்டு பாகுபாடுகளை நூல்களில் காண்கிறோம். இந்தச் சூக்கும சரீரத்தையே (மனவுடம்பையே) ஜீவாத்மா, ஜீவன், உயிர் என்ற பெயர்களால் அழைக்கிறோம். இந்தச் சரீரத்திற்கு காரணமாயிருப்பது பிரமம் என்பதால்,அதாவது ஆக்குகாரணி இயக்குகாரணி ஆகிய இரண்டும் பிரமமே என்பதால், இதனை ஜீவன் என்கிறோம்.இந்தச் சூக்குமமே (மனவுடம்பு) பிறப்பு எடுப்பது. இறக்கிறபோது ஸ்தூலத்தை விட்டுச்

சென்று, வேறு ஸ்தூலத்தைச் சேர்கிறது. சூக்கும உடம்பால் (மன வுடம்பால்) ஆற்றப்படுகின்ற கர்மாக்களுக்கு (வினைகளுக்கு) ஏற்ற படி, அது ஸ்தூலத்தைப் பற்றிநின்று, இன்ப துன்பங்களை அனுப விக்கிறது. நல்ல காரியங்களைச் (கர்மாக்களை) செய்தால், இன்ப மடைகிறது. கெட்டகாரியங்களைச் செய்தால் துன்பமடைகிறது இது, ஒவ்வொருவரும் கண்டுகொள்ளும் உண்மை. எந்தவினை, தனக்கு துன்பத்தைத் தருகிறதோ, அந்த வினையை ஒதுக்கிவிடவேண்டும். ஒதுக்கி, நல்லதையே செய்துகொண்போக, முன்பு செய்த கெட்ட வினையின் பலன்கள் (பிராத்துவ பலன்) மட்டுமே வந்து இப்போ அவனை தாக்கும். கெட்டவினைப் பிராரத்துவம் முடிவடைய, நல்ல வினையே சேகரிக்கப்பட்டு, நல்ல பலன்களே கிட்டிக்கொண்டு வரும். இந்நிலையிலேதான் ஒருவன் சமூகத்திற்கு சேவை செய்யும் தகுதியைப் பெறுகிறான். நல்ல வினையிலும், பலனை விரும்பிச் செய்தால் துன் பம் கிடைக்கும். பலனை விரும்பிச் செய்யும் வினைகளும் தீவினை கள் தான். ஆகவே பலனை விரும்பாது ஒருவன் கருமமாற்றிக் கொண்டு இருப்பானானால், அவனுக்கு அக்கருமத்தால் எத்தீங்கும் இல்லை. அவன் ஞானியாகிறான். அதாவது உண்மையை விளங்கிய வனாகிறான் தீவினை செய்தால், ஏன் துன்பம் வரவேண்டும் என்ற கேள்விக்கு விடை காண்பது தேவையற்றதாயினும் நாம் பின்வரு மாறு அதனை விளக்கலாம். வேதவாக்கியம் ஒன்றுண்டு. ''அது பூர் ணம். இதுவும் பூர்ணம். பூரணத்தில் இருந்து பூரணம் உதயமா கியுள்ளது. பூரணத்தினின்று பூர்ணத்தையெடுத்தும் பூர்ணமே எஞ்சி யிருக்கிறது'' என்பது. (வடமொழியில் ''ஓம் பூர்ணமிதம் .....'' என்ற சுலோகம்) ஆகவே நாம் ஒவ்வொருவரும் பூர்ணமானவர்கள், நிற வானவர்கள், நிறைவுக்குள் ஒரு பிறபொருளைச் சேர்த்தால் சமநிலை குலைந்து, சேர்ந்த அளவு பிற பொருள் வெளித்தள்ளப்பட வேண் டும். ஆகவே ஒருவன், பிற பொருளைக் களவாடுகிறான் என்றால், அதேயளவு பொருளை இழக்க வேண்டிவரும். பிற இன்பத்தைச் சேர்த்தால், அந்தளவு இன்பம் தள்ளுப்பட வேண்டும். அதாவது துன்பப்பட வேண்டும்.

தீவினைகள் எப்போதும் நிறைவினைச் (பூர்ணத்தை) சமநிலை குலைப்பதால், சமநிலையைப் பேணும் முயற்சி துன்பத்தைக் கொடுக் கிறது. ஆகவே, கர்மாதான் ஒருவனைத் துன்பப் படுத்துவதும், இன் பப்படுத்துவதும். இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டவர்களே நாங் கள், என்பதை அனுபூதியில் கண்டவர்களே ஜீவன் முக்தர்கள், நமது (பிரமத்தினது) உண்மைச் சொரூபம் ஞானம். ஆகவே மனவுடம்பில்

இருவினைத் தாக்கங்களும் அற்றால், மனவுடம்பே அற்றுவிடும். மனம் அல்லது மனவுடம்பு என்பது அழிவதே, ஜீவன் அழிந்து பிரமத்தை அடைதல் என்று கூறப்படுகிறது. பொருட்களைப் பிறரிடமிருந்து களவாடும்போது சரி, ஒருவரைப் பற்றி பொறாமை உணர்வுகளை மனத்தில் எண்ணும்போதும் சரி, காரியங்களுக்கு கர்த்தாவாக இருப்பது மனவுடம்பே. மனமே, வெளிச்சென்று, அந்தப் பொருளை விரும்பி, உடலைத் தூண்டியதாலும். பொருள் வந்து சேர்ந்தவுடன், மனமே திருப்தியுற்ற காரணத்தாலும், உடல் செய்யுங்குற்றங்கள், சொல் செய்யுங் குற்றங்கள், மனம் செய்யுங்குற்றங்கள் எல்லாம் மனவுடம்பாலே செய்யப்படுகின்றன. மனமே, பூர்ணப் பொருளாகிய நமது ஆத்மாவின் (பிரமத்தின்) பேச்சாளர் போன்றது (Spokesman போன்றது.) 'மனம்' யாருக்காகப் பேச்சாளராக அமைகிறதோ அவருடைய (பிரமத்தின்) அந்தரங்கச் செயலாளராக, மிக நெருங்கியவராக, 'புத்தி' இருப்பதாகக் கொள்ளலாம். புத்திக்குக் கட்டுப்பட்டவரே மனம்.

எப்படி நாம் இந்த இருவினைகளுக்கு உட்பட்டோம்? முற்பிறப்பு தீவினை ஏற்பட, அதற்கு முந்திய பிறப்பு காரணம் என்று கொண்டு பின்னோக்கிச் சென்றால், ஆ `யிலே, எப்படித் தீவினை, எம்மைப் பற்றிக் கொண்டது? என்ற கேள்விக்கு விடைகூறுவது இயலாது, ஏனென்றால், நாம் இப்போ காலதேச வர்த்தமானத்துக்கு உட்பட்டு இருக்கும் வேளையில், காலதேச வர்த்தமானத்துக்கு அப்பாற்பட்ட விடையைக் கண்டுபிடிக்க முடியாது இருப்பினும் மதங்கள் கூறும் விடையைக் கொண்டு, பின்வருமாறு இதனை விளங்க வைக்கலாம். பிரமத்தினுடைய மாயாசக்தியே, பிரமத்தை கூறுடையதாகக் காட்டுகிறது. இந்தக் கூறும், பூர்ணமென்பதும் வேதவாக்கு. அதாவது நாம் எல்லோரும் (மனவுடம்புகள்) பிரமம் என்னும் நாரில் தொங்கும் வெவ்வேறு நிறமுடைய பூக்கள். மனவுடம்பு அதாவது சூக்குமசரீரம் (காரணம் + சூக்குமம்) பிரமத்தில் தோன்றும்போது மேற்கூறிய ஒன்பது நல்லியல்புவினைகளும் (அபிமானம், மகிழ்ச்சி......... ஞானசக்தி) இருந்தன. இவைகள், குறிப்பாக அபிமானம் (மறுபெயர், பிரியம்) என்பது, ஆசைப்பட தீவினைக்கர்மா துவங்கிவிடும். அது பெருகி இந்நிலைக்கு (எங்களுடைய நிலைக்கு) வந்துவிடும். மறுபடியும் அது ஆனந்தமாயிருக்கும் இலக்கை வைத்து தீவினைக் கர்மாக்களை முடிவுக்கு கொண்டுவரும். சூக்குமத்தில் (மனவுடம்பில்) ஏற்பட்ட மாயை – விகாரம், சூக்குமத்தில் சுருங்கிவிடுகிறது. சூக்குமம் தனது

விகாரத்திற்கு ஏற்றபடி, பலபல ஸ்தூலங்கள் (பிறவிகளை எடுத்து) ஈற்றில் பிறவி எடுக்காது (ஸ்தூலம் எடுக்காமலே) சூக்குமத்தில் வந்து ஓய்ந்து கொள்கிறது. அது நிரந்தர ஆனந்தத்தைத் தேடியே, அபி மானத்தை முற்றிலும் அறுத்து, மனவுடம்மைக் கரைத்து விட்டு பிரமமாகிவிடுகிறது. அபிமானம் போன்ற ஒன்பது சத்காரியங்களடங் கிய சூக்கும உடல் ஏற்பட என்ன காரணமென்று கேட்டால், அது பிரமத்தின் விளையாட்டு (லீலை) என்று பதில் கூறுவாருமுளர். சிறந்தவிடை, அதனுடைய பகுதியாகிய நாங்கள் (உடம்புகள்) அதன் நோக்கத்தை அறியமுடியாது என்பதே. அதற்குத்தான் அந்த விடை தெரியும். அதாவது காலதேசவர்த்த மானத்துக்குட்பட்ட நாங்கள் காலதேச வர்த்தமானத்திற்கு அப்பாற்பட்ட நிலையை விளக்கமுடி யாது. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சரின் உவமானக்கதை ஒன்று உண்டு. கடவுளின் வியாபகத்தை அறிதல் பற்றிய கதை கடலின் ஆழத்தை அளக்கச் செல்லும் உப்பால் செய்யப்பட்ட பாவை, கட லிலே கரைந்துவிடுகிறது. உப்பு, கடலில் இருந்து வந்த பொருள். அது கடலுடன் இரண்டறக் கலக்கலாமேயொழிய, கடலின் ஆழத்தை அளந்து கொண்டு திரும்பிவரமுடியாது. அதுபோல், நாங்கள் பிர மத்தோடு கலந்து விடுதலே, ஆகக்கூடிய உயர்ச்சி. நாம் வாழ்ந்து வரும்போது, நமக்கு இயற்கையே, கர்மதத்துவத்தை விளங்க வைப் பதால், அதாவது நல்லது செய்தால் நன்மை, தீயது செய்தால் தீமை விளையும் என்பதை அறிந்து நமது காரியங்களை நெறிப்படுத்த வேண்டியது தான் பாக்கி.

தீவினை கர்மாக்களைத் தவிர்த்து ஒருவன், நல்வினை கர்மாக் களை பலனில் பற்று வையாது, அகர்ம நிலையில் ஆற்றிக்கொண்டு, அதாவது அர்ப்பண சுபாவத்தோடு ஆற்றிக் கொண்டு சென்றால், அக்கர்மாக்கள் அவனுக்கு ஞானத்தை துலக்கிக் கொண்டிருக்கும். அதனை விடுத்து சும்மா இருக்க, நினைத்தால், அது இலகுவான காரியமாயிராது. ஏனென்றால், சூக்கும சரீரம் (மனவுடம்பு) எண் ணிறந்த தீய எண்ணங்களை எண்ணுவதாகிய கர்மங்களைச் செய்து துன்பத்திற்கு கொண்டுவரும். ஆகவே உடலைச் சோம்பியிருக்கச் செய் யாது, உற்சாகமாக நல்ல, தனக்கு கடமையென்று படுகிற சத்கர் மாக்களை இயற்றிக் கொண்டு இருக்கவேண்டும். இந்த நிலையிலே, நாம் கிருஷ்ணருக்கு புல்லாங்குழலாக இருக்கிறோம். புல்லாங் குழல் வெறுங்கோது. அகங்காரம் முதலிய எச்சரக்கும் அதனுள் இல்லை. இதனை, இறைவன் விரும்பி, தனது கானத்தை மீட்டும் கருவியாகப்பாவிக்கிறான். அதாவது, கடவுளின் தர்மஸ்தாபனப்பணிக்கு,

கருவியாக்கப்படுகிறோம். சாயிபகவான், எங்களை, தமது கருவியாக வரும்படியே அழைக்கிறார் கர்மாக்களைக் கண்டு அஞ்சுதல் கூடாது. அஞ்சும் இயல்பு, நமது விருப்பு வெறுப்புக் காரணமாக ஏற்படுவது. ஒன்றே, உள்பொருள் என்ற தத்துவம் மனதில் படிந்திருந்தால், எக்கருமாவும். வெறுப்பாக இருக்காது. ஏனென்றால், அவன் மனத்தை அத்துவித வஸ்துவுக்குக் கொடுத்துவிட்டான். இப்போது, ஸ்தூலமே உலக கர்மாவைச் செய்கிறது. மனம், அத்துவித உண்மையை அறிந்து ஆனந்திக்கிறது. இருப்பது எங்கும் அதே பொருளாயிருக்க விருப்பேது, வெறுப்பேது? ஞானத்தில் தளைத்தலாகிய ஆனந்தத்திலே அவன் இருப்பான். அவன் என்றும் உள்ளவன், ஞானத்தால், ஆனந்த முற்றான். அதுவே சத்து, சித்து, ஆன்ந்த நிலை எனப்படும். அவன் இப்போ சச்சிதானந்தம்.

சத்கர்மாக்களில் பரமனை பக்தி பண்ணுதலாகிய நினைத்தல், புகழ்பாடுதல், புகழ்கேட்டல் போன்ற கர்மாக்கள் உள்ளன மேலும் யோகம் பண்ணுதலாகிய, ஆசனத்திருத்தல், பிராணாயாமம் செய்தல், தியானம் செய்தல் போன்ற கர்மாக்கள் உள்ளன ஞானப் பாதையிலே, குருவிடம் கேட்டல், சி·தித்தல், தெளிதல், நிட்டை கூடல், குருவின் புகழ்பாடுதல், பூசித்தல் போன்ற கர்மாக்கள் உள்ளன. சரியை வழியிலும் கோயில் தொண்டுகள் பலவுண்டு. இப்படியாக, சரியா, கிரியா, யோகா, ஞானா பாதங்களில் அளவிறந்த சத்கர்மாக்கள் இருந்தபோதும், அயலவனுக்கு (ஒருவனுக்கு) தேவையேற்பட்ட போது, உதவி செய்வதிலும் பெரிய கர்மா இல்லை. உதாரணமாக, சாயி கூறுவார், ஒருவன் தியானம் பண்ணிக்கொண்டு இருக்கிறபோது, ஒரு அவலக்குரல் கேட்டால், உடனே தியானம் கலைந்து, அந்த இடத்திற்குச் சென்று, அவர்களுடைய துன்பத்தை நீக்குவது தியானத்திலும் பார்க்க ஆயிரம் மடங்கு மேலானது. அதுவே தியாகம். ஏன் பாருங்கள் நாமெல்லோரும் பஜனைகளுக்கும் கோயில்களுக்கும் போகும், அதே நேரத்தில், அயலவனாகிய நமது சகோதரத்திற்கு ஆகவேண்டிய. பல உதவிகளைச் செய்யாமல் இருக்கிறோம். காரணம் ஞானம் இல்லை. ஞானம் என்பது எல்லோரிடமும் இருப்பது. கடவுளே என்பதும் எல்லோரும் கடவுளே என்பதுவும். நான்தான் அயலவன் என்ற உருவுடனும் பெயருடனும் ஆபத்துக்குள்ளாகி இருக்கிறேன். அஞ்ஞானம் காரணமாக, அது வேறு ஆத்மா என்று எண்ணிக் கொண்டு, அவன் தனது வினைக்கு அலைகிறான் என்று சமாதானம் கூறிக்கொள்கிறோம். என்னை எல்லோரிடத்தும் கண்டு, சேவை செய்வதே ஞானமுயர உதவும். நாம் வணங்கும் தெய்வம் சாயி என்றால், சாயியை எல்லோரிடமும் கண்டு வாழவேண்டும், சாயியே ஒரு ஏழையாகவும், நோயாளியாக

கவும் இருக்கிறார் என்ற விளக்கம் வேண்டும். நாம் காணும் பிரபஞ்சமும் உயிர்களுமே சாயியின் விஸ்வரூபம். எனக்கு ஒருவர் ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்கிறார் என்றால், அந்த ஒருவர் சாயியே என்று விளங்க வேண்டும். ஒருவர் என்னைத் தண்டிக்கிறார் என்றால், சாயியே என்னைத் தண்டிக்கிறார் என்ற பக்குவ நிலை ஏற்பட வேண்டும். இந்தப் பக்குவநிலையில் ஆற்றப்படும் சேவையே ஞானமளிக்கும் கர்மா. இக் கர்மாக்களை எல்லோரும் விரும்பிச் செல்யவேண்டும். ஏனென்றால் அது எங்களைப் பந்தத்தினின்று விடுவிக்கும். நாம் பிறவி எடுத்ததும் இதற்காகவே. இந்தப் பேரானந்தத்தை அனுபவிக்கவே.

# 10. பக்தி

நாம் காணும் உலகிலே ஏற்படும் மாற்றங்களையும், நமது சொந்த அனுபவத்திலே, நம்மால் எக்காரியமும் திட்டமிட்டுச் செய்ய முடியாது என்பதை உணர்ந்த நிலையிலும், ஒரு உயிர் இறப்பு, பொருள் இழப்பு என்பன நமது கட்டுப்பாட்டுக்குள் இல்லாததையும் உணர்ந்து, நாம், நமது முன்னோர் கூறியபடி கடவுள் இருக்கிறார் என்று நம்பி, நமது துன்பங்களை அவருக்கு எடுத்துரைத்து, நம்மைக் காக்கும்படி கோருவதிலிருந்து, இறைபால் பக்தி துவங்கிறது. சிலர் இயல்பாகவே, இளமையிலிருந்து கடவுள் நாட்டமுடையவராக இருப்பார்கள். உதாரணம், சம்பந்தப் பெருமான். எதுவித காரணமும் இல்லாமல், இறைவன்பால் பக்தி ஏற்படுமாயின் அது, முற்பிறப்புப் பக்தியின் எச்சமாகும்.

சிலர் சிவனை வணங்குவர், சிலர் விஷ்ணுவை வணங்குவர், சிலர் யேசுவை வணங்குவர்...... இப்படியாக, ஒவ்வொருவரும் தமக்கு விரும்பிய கடவுள் மூர்த்தங்களையோ, அவதாரங்களையோ வணங்குவர் இந்த உபாசனை, பக்தனுக்கு, இந்த சம்சார உலகில் உள்ள பிரச்சனைக்குத் தீர்வாக இருக்கிறது தன்னுடைய கடவுள் தன்னைக் காப்பாரென்று நம்பி வாழுகிறான் சிவன் சிவலோகத்தில் இருப்பதாகவும், விஷ்ணு, வைகுந்தத்தில் இருப்பதாகவும், அப்படி ஒவ்வொரு வழிபாட்டுக்காரரும், தமது தெய்வத்திற்கு ஒவ்வொரு இடம் கொடுத்திருக்கிறார்கள். கடவுளைப் புறத்தே, தூரத்தே வைத்திருக்கும்போது நமக்குச் சாந்தி கிட்டுவதில்லை. பக்தியும் இறுக்கமானதாகவில்லை காரணம், தான் வேறு, தான் வணங்கும் கடவுள் வேறு, தனது அயலவன் வேறு என்று முத்திற மனப்பான்மையில் வாழ்கிறான். எனது

அயலவனுக்கு சுவீப் விழுந்துவிட்டால், எனக்கு அது பொறாமை. எனது கடவுளை நான் கேட்கிறேன், ஏன் இந்தப் பொல்லாதவனுக்குப் பணத்தைக் கொடுக்கிறாய், ஏழைக்கு ஒரு ஐந்து சதம் கொடாதவன் இவன், என்று. இப்படியாக, நான் வேறு, அயலவன் வேறு, கடவுள் வேறு என்று எண்ணுவதால், ஒருபோதும் சாந்தி ஏற்படாது. தத்துவ விசாரணை செய்து, பிரபஞ்சத்திலே ஒருவர் தான் இருக்க முடியும், அவர் தான் பிரபஞ்ச வடிவாய் இருக்கிறார் என்ற அத்வைத விளக்கத்திற்கு ஒருவன் வரவேண்டும். திடீரென, ஒருவன் அந்நிலைக்கு வரமுடியாது என்ற காரணத்தினால் தான், பக்தி சாதனங்கள் பல, மகான்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அடிப்படையான பக்தி சாதனம் பஜனை செய்தல். காகமுள்ள மரத்தடியில் நின்று கையைத் தட்டினால், காகங்கள் பறப்பதுபோல, கைகொட்டித் தாளம்போட்டு பஜனை செய்தால், மனத்தில் உள்ள காம, குரோத, லோப, மோக, மதமாச்சரியங்கள் பறந்து, சாந்தி கிடைப்பதாக பகவான் சாயி சொல்லுவார் பஜனை, விரதம், சேவை அல்லது தியானம் போன்ற உபாசனா சாதனங்களால், ஒருவன் படிப்படியாக உயர்ச்சி அடைந்து, ஆத்ம விசாரம், உலக நிலையாமை பற்றிய விசாரம் ஆகிய யுக்திகளில். பத்தில் ஏழுபங்கு தன்னை ஈடுபடுத்தி, ஒருவன் அத்வைத பாவனைக்கு வரவேண்டும் என்பது பகவானுடைய கூற்று. அவரது விருப்பமும் அதுவே.

பக்தி மார்க்கத்தில், ஒரு அவதார புருடனை உபாசித்தல் மிகவும் இனிமை பயக்கும். அதுவும் நிலவுலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு அவதாரரை உபாசித்தல், கூடிய இனிமையும் உற்சாகமும் தரும். கடவுளுக்குத்தான், எனது கஷ்டம் விளங்காமல் விட்டாலும், எனது பிரார்த்தனை, கடவுளது காதில் விழாவிட்டாலும், சாயிபாபாவின் காதுகளில் இது விழாதா? அவருக்கு எனது மனநோக்குப் புரியாதா? எத்தனையோ அற்புதங்களை, எத்தனையோ விதமாகச் செய்யும் சாயி பகவானுக்கு, நிச்சயமாக எனது துன்பம் விளங்கும் எத்தனையோ, சிறு பிரச்சனைகளுக்கெல்லாம் ஆறுதல் தந்த அவர், எனது இந்தப் பிரச்சனைக்கும் ஆறுதல் தருவார் என்று நம்புகிறோம். சாயியினுடைய தோற்றம், செந்நிறவாடை எல்லாம். நம்மைக் கவர்ந்து, அவரின் மேலே பற்றும் பாசமும் ஏற்பட வழியமைக்கிறது. நமது மனதிலே, எமக்கு மிகவேதனையைத்தரும் பிரச்சனையை அவரிடம் மாறி மாறி விண்ணப்பித்து, என் ஆசையைப் பூர்த்தியாக்கு என்று கேட்டால் அவர் இப்படிச் சொல்கிறார், ''ராமா, கிருஷ்ணா, சாயிபாபா போன்றோர் மட்டும் கடவுள் அல்லர். நீயும் கடவுளே''. இது நமக்குப் பெரிய ஏற்க முடியாத ஒரு உபதேசமாகத் தோன்றினாலும், காலப்போக்கில்

நாம் அத்வைத தத்துவத்தினைப் புரிந்து, சாந்தியோடு வாழ வழிவகுக்கிறது. நான் வேறு, அயலவன் வேறு, கடவுள் வேறு, இந்தச் சட உலகம் வேறு என்று எண்ணாமல் எல்லாமும் ஒருவரே. ஒரு பொருளே இவ்வாறு பலவாகக் காட்சியளிக்கிறது என்ற ஞானவிளக்கத்தில் பக்தி செய்தல் தலையாயது இதுவே அத்வைத பக்தி. இந்த நிலையிலே, திருவாதவூரடிகள் புராணத்தையோ, கந்தபுராணத்தையோ, பெரிய புராணத்தையோ, திருவிளையாடற் புராணத்தையோ படிப்பது, பயன் சொல்லுவது, பயன் கேட்பது எல்லாம் நம்மை இறைவன்பால் அன்புகொள்ளச் செய்கிறது.

திருவாதவூரடிகள் புராணத்திலே, முதல் அமைச்சராகிய வாதவூரரது (மணிவாசகர்) ஆணையின்கீழ் வேலைசெய்த காரியதரிசியொருவர், செம்மனச் செல்வியின் கூலியாளாகிய சிவபெருமான் கோலினால் அடிக்கும்போது அந்த அடி எல்லோர் மீதும் பட்டது. அந்தவிடத்தில் இல்லாத வாதவூரர் மேலும் அந்த அடி பட்டது. பின்பு அவர் அவ்விடம் வந்து,சிவபெருமானே கூலியாளாக வந்து மறைந்தார் என்பதனை அறிந்து, தான் அந்தக் கூலியாளைக் கண்டுகொள்ள பலன் இல்லாது போய் விட்டதே என்றும், கூலியாள் தோற்றத்தில், செம்மனச்செல்வியின் பின்னராக, நதிக்கரை நோக்கி, பெருமான் வந்ததைக் காண முடியவில்லையே என்றும் புலம்புகிறார் அடுத்த பாடலில், அந்தக் காட்சியைக்கண்ட நதிக்கரை மக்களா, பாண்டியமன்னனா, மதுரை வாழ் மக்களா, அன்றி பிட்டு அவித்து அளித்த செம்மனச் செல்வியா? — யார் இவர்களுள்ளே, பெருமான் கூலியாளாய் வரும்படியான சிவபுண்ணியஞ் செய்தார்கள் என்று பெருமானையே கேட்கிறார். இரு பாடல்களும் இதோ:—

(மண்சுமந்த சுருக்கம் — பாடல் இல. 65, 66)

" கட்டுமரைத் துணிச்சீரைக் கச்சையுமத் திருத்தோளிற்
கொட்டுமுடித் தலைமீது கவிழ்த்ததொரு கூடையுமாய்ப்
பிட்டிடுநற் றவமுடையாள் பின்புவருந் திருக்கோல
மிட்டமுறத் தொழும்படி நான் கண்டிலனே யிறையோனே "

" தாரூருஞ் சடைமுடியாய் தவம்பெரிது முயன்றவர்க
ணீரூரும் புகழ்வைகை நெடுங்கரைமே னின்றாரோ
சீரூருங் கனகமுடித் தென்னவனோ மதுரையெனும்
பேரூரி லிருப்பவரோ பிட்டமுதிட் டருள்வாளோ "

மேலே தந்த பாடல்களைப் படிக்கும்போது, பயன் கேட்பவர் களுக்கு, சொல்லுபவர்களுக்கு, படிப்பவர்களுக்கு, எல்லோருக்குமே கண்ணீர் சொரியும், சாயி அவதாரரே, வேண்டிய இடங்களில், வேண் டிய வேடங்களில் பக்தருக்கு முன்னராகத் தோன்றி, ஆகவேண்டிய தைச் செய்துவிட்டு, மெதுவாக நழுவி மறைந்து விடுகிறார். அப்படி யாயிருக்கிறபோது, மெய்யான அடியார்களுக்கு சிவசோதியாகிய பிரம ஒளி, விரும்பிய உருவில் வந்து விரும்பிய விளையாடல்களைச் செய்யும் என்பது உறுதி. ஆகவே வாதவூரடிகள் சரித்திரம் பொய்யல்ல. தோன் றும், இதுபோன்ற உருவங்கள் எல்லாம், பிரமத்தை பிரதிநிதித்துவம் செய்யும் சகுணக்கடவுளாகின்றன. இப்படித்தான் ஒவ்வொரு புராணத் திலும், மனத்தை இறைவன்பால் ஈர்க்கின்ற யுக்திகளே, முழுவிடத்தி லும் கையாளப்படுகின்றன. இதனைவிட கந்தபுராணம், ஞானவழி நிற்போரும் நன்மையடையக் கூடியவிதமாக, தத்துவச் சிறப்புக்களை யும், பல புராண உபகதைகளையும் கொண்டு,சிறப்புற்று விளங்குகிறது. ஆகமவழிச் சமயச் சடங்குகளெல்லாம் பக்தியை வளர்க்கும் சாதனங் களே. அத்துவித பக்தியானது சிவத்தை, உயிர்களிலே காண்பதாக அமையவேண்டும். சாயி பகவான் ஒருமுறை கூறினார்: கிருஷ்ண பர மாத்மா, அர்ச்சுனனைப் பார்த்து, கடவுளின் விலாசம் என்னவென்று தெரியுமா என்று கேட்டாராம். தெரியாதென்று விடை சொன்ன அர்ச்சுனனுக்கு, (பகவத் கீதையில்), "நான் சகல ஜீவராசிகளதும் இரு தயக் கமலத்தில் வாசஞ் செய்கிறேன்" என்று சொன்னாராம். அதற்குப் பிறகுதான், அர்ச்சுனனால் இறைவனோடு (கிருஷ்ணரோடு) தொடர்பு கொள்ள முடிந்தது. அதுவரை விலாசம் தெரியாது. அதாவது பிழை யான விலாசம். ஆகவே தொடர்பில்லை. ஸ்தூலத்தொடர்பு தொடர் பாகாது.

ஆகவே, நாம் இறைவனை எல்லாரிடத்திலும் காணவேண்டும். எல்லாருமாகக் காணவேண்டும். கடவுளின் விஸ்வரூபமே இந்தப்பிர பஞ்சம். இந்த அளவு விளக்கம் எல்லோருக்கும் உடனடியாக ஏற் படாது. ஏனென்றால், நமது கல்வி அமைப்பு, இன்னமும் ஆத்மீகக் கல்வியின் வளர்ச்சியைக் கவனிக்கவில்லை. சமய அனுபூதிமான்களை, கல்விப்பீடங்களில் இருத்தி, சமயக் கல்வியை வளர்க்க, நமது சமுதா யம் முன்வரவேண்டும். இந்த யுக அவதாரரான சாயி பகவான், இப் படி ஆகவேண்டிய செயற்பாடுகளைச் செய்தே, ஒய்வடைவார். 'சுவாமி பேச்சுக்கள் அத்வைதத்தோடு கூடியவைகளாக இருக்கின்றன. ஏனென னில் துவைதம் எதுவும் இங்கு இல்லை. அதாவது மற்றொன்று எதுவும் இல்லை இங்கு. ஏகமேவ அத்விதீயம் ப்ரஹ்ம—உள்ளது ஒன்றே! எவ்வ

ளவு விதமாகக் கூறினாலும் அவ்விடத்திற்கே வந்து சேர்ந்தாக வேண்டும்' என்று பகவான் சாயி கூறுகிறார். இந்த வாக்கில் நம்பிக்கை இருக்கவேண்டும் இருந்தால், ஒன்றென்பதை உணர்ந்து கொள்ளலாம். இநத நம்பிக்கையிலும் விளக்கவுணர்விலும் வளரும் பக்தியே சிறந்தது.

தூய பக்தியும், தூய ஞானமும் ஒன்றே இந்த நிலையில் ஆற்றப் படும் கர்மா, நிஷ்காமிய கர்மாவாகிறது. இந்த நிலையிலே ஏற்படும் யோகசாந்தி, தியானத்தால் பெறப்படும் சாந்தியாகிறது இந்த நிலையிலே உள்ளவனுக்கு பிரபஞ்சமே கடவுள். ஆனால் உள்ளார்த்தமான, உபாசனை நிர்க்குணப் பிரம உபாசனையே.

## 11. வேதாந்த சித்தாந்த ஒற்றுமை வேற்றுமைகள்

இங்கு வேதாந்தம் என்ற பதத்தால் சங்கரரின் அத்வைதத்தையே குறிக்கிறோம். அத்வைதம் என்ற வடமொழிச்சொல், தமிழில் அத்துவிதம் என வழங்குகிறது. வேதாந்திகளும் அத்துவிதம் என்று பேசுகிறார்கள். சித்தாந்திகளும் அத்துவிதம் என்று பேசுகிறார்கள். சித்தாந்தம் கடவுள், உயிர், தளை என, முப்பொருள் அநாதியாகவே உள்ள உள்பொருள் என வாதிட, வேதாந்தம், பிரமம் ஒன்றே உள் பொருள் என்றும், மாயையாகிய பிரமத்தின் சக்தி உள்பொருள், இல் பொருள் என்ற இலக்கணங்களுக்கு அப்பாற்பட்ட இலக்கணமுடையது என்று கூறும். அதாவது, மாயை சதசத்விலட்சணத்தை உடையது என்று கூறும். உள்ளது ஒரு பொருள்தான். அந்த ஒரு பொருளை ஞானக்கண் கொண்டு பார்த்தால் அது பிரமம். ஊனக்கண் கொண்டு பார்த்தால் மாயை. ஊனக்கண் நீங்கியே தீரும் இதற்கு விளக்கம் நமது அனுபவம். ஊனக்கண் நீங்குவதால், ஊனக்கண் நிலை தற்காலிகம். ஊனக்கண்ணுக்கே மாயை தெரிவதால், மாயை ஒருவனுக்குத் தற்காலிகமானது. அவனுக்கு நிரந்தரமானது பிரமம். அதாவது அஞ்ஞானி. முச்சரீரங்களும் அமைத்துக்கொடுத்த அறியாமைக் கண் கொண்டு பார்க்கிறபோது இருப்பது மாயையாகவே தெரிகிறது (மாயை என்றால் மாற்றமடைவது என்பது கருத்து). முச்சரீரமும் (காரண—சூக்கும—ஸ்தூல) நீங்கிய நிலையில் அனுபவிக்கப்படுவது பிரமம். (பிரமம் என்றால் சத்து, சித்து, ஆனந்தம்). வேதாந்திகளின் ஜீவன்,

அறியாமை (முச்சரீரநிலை காரணமாக) காரணமாக ஆனந்தமற்று இருக்கிறான். இதற்கு மாறாக, சித்தாந்தத்தில் உயிர், ஆணவம் (அணுத்தன்மை நிலை) காரணமாக, ஆனந்தமற்று இருக்கிறது. வேதாந்திகள், ஜீவன் என்றது, பிரம ஆதாரத்தில் நிலைக்கும் காரண சூக்கும சரீரத்தை (மனவுடம்பு). (மனவுடம்பே, இறப்பின்போது, வெளிச்சென்று, ஸ்தூலத்தைச் சேர்கின்றது பிரமமே மனவுடம்பின் காரணப் பொருளாதலால், அது வாழ்வு உடையதாகத் தோற்றுகிறது. அதனால் ஜீவன் என்று பெயர்). சித்தாந்தத்தில், உயிரானது சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய, சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் உள் பொருள். வேதாந்தத்தில், மனவுடம்பு நீக்கம் பெறுதல். அதாவது மனவுடம்பு சிதைவடையும் நிலை முக்தி. மற்றும்படி, முக்தி அடையப்பட்டபடியே இருக்கிறது சித்தாந்தத்தில், கேவல நிலையில் ஆணவத்தின் பிடியிலிருந்த நாங்கள், இப்போ, பெத்த நிலையில் ஆணவத்தின் பிடியிலிருந்து விலகுவதற்காக, கடவுள் தந்த கரணங்களைப் பாவித்துக் கொண்டு இருக்கிறோம். இந்நிலையில், இறைவன் உயிர்களோடு, ஒன்றாய், உடனாய், வேறாய்க் கலந்திருக்கிறான். கலப்பால் ஒன்றாயும் பொருள்த் தன்மையால் வேறாயுமிருக்கிறான். இந்தப் பெத்தநிலையில் கடவுள் உயிரோடு அத்துவிதமாக இருக்கிறார் இனிவரப்போகும் முக்தி நிலையில் (சுத்த நிலையில்) உயிர் கடவுளோடு அத்துவிதமாக இருக்கும். அத்துவிதமாக இருந்தாலும், இறைவனுடைய ஐந்தொழிலில், முந்நிலை உயிர்கள் ஈடுபடா ஆனால், அவரது பேரானந்தத்தை அனுபவித்துக்கொண்டு இருக்கும். கேவலநிலையில் ஆணவத்துக்கு அடிமையாக்கப்பட்டிருந்தது சுத்தநிலையில் (முக்தி நிலையில்) ஆண்டவனுக்கு அடிமையாக்கப்பட்டிருக்கிறது பெத்தநிலை என்பது, துன்பந் தரும் ஆணவத்தின் பிடியிலிருந்து இன்பந்தரும் சிவத்தின் அணைப்புக்கு உள்ளாகும் படிமுறையே. சிவம் உயிரோடு அத்துவிதப்பட்டிருக்கும் நிலையிலிருந்து, உயிரும் சிவத்தோடு அத்துவிதப்படும் நிலைக்கு வருவது முக்தி வேதாந்தத்தில் ஐந்தொழில்களையும் சகுணப்பிரமமாகிய ஈஸ்வரனே செய்கிறான் என்று சொல்லப்படுகிறது இதன் விளக்கம் என்னவெனில் நிர்க்குணபிரமமானது, அதனது சக்தியாகிய மாயை காரணமாக, நமக்கு சகுணப்பிரமமாகத் தோற்றுகிறது. இதன் கூடிய விளக்கம் முன் அத்தியாயங்களில் பரக்கத் தரப்பட்டுள்ளது.

சித்தாந்தத்தில், ஆணவத்தைப் போக்க, கன்ம மலம் (மற்றும் மாயை மலம்) இறைவனால் இடையிலே சேர்க்கப்பட்டது ஆணவத்தின் வெளிப்பாடாகிய நான், எனது என்ற அகங்கார மமகாரங்கள், கன்மத்தை துணைகொண்டு நல்வினை, தீவினைகளை பெருக்குகின்றன.

ஆணவமழிந்துபோக, இவ்வினைகளே உதவுகின்றன. அதாவது, இரு வினை நேரொப்பில் இன்னருட்சக்தி, குருவென வந்து மும்மலங்களையும் நீக்கும். அந்நிலையில் ஜீவன்-முக்தி கிடைக்கிறது. உடல் பிரிய பரமுக்தி கிடைக்கிறது. வேதாந்தத்திலும், முச்சரீரம் கொடுத்த அறியாமை நீங்க, அதாவது தான் உண்மையில் பிரமமே என்றறிய, நல்வினை தீவினைகளே உதவுகின்றன. கர்மபலத் தியாகமாகிய நேரொப்பில் ஞானமுதயமாகிறது. ஞானநிலையில் உள்ளோரது போதனைகள் ஞானமடைய பெருமளவில் உதவுகின்றன. ஆனால் ஞானமடைவது (முக்தியடைவது) அவனேதான். புறப்பொருள் எதுவும், முக்தியை அளிப்பது அல்ல, ஏனென்றால் பிறபொருள் எதுவும் இல்லை. அனாத்ம தத்துவம் அழிந்துபோதல் முக்தி.

மேற்கூறியவைகளே சில முக்கிய வேறுபாடுகள். ஆனால் சித்தாந்தத்தில், சரியா, கிரியா, யோகா, ஞானா பாதங்களில் உள்ள ஆன்மாக்கள் முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திகளை அடைவதாகக் கொள்ளப்படுகிறது. மேலும், ஆணவமலம் மட்டுமுடையார் விஞ்ஞானகலர் என்றும், ஆணவம், கன்மம் ஆகிய இரண்டுமுடை பிரளயாகலர் என்றும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் உடையார் (நாங்கள்—உடம்பு, கருவி, உலகம், நுகர்பொருள் ஆகிய மாயாகாரியமுள்ளார்) சகலர் என்றும் மூவகை ஆன்மாக்கள் பற்றிக் கூறப்படுகிறது. எந்த ஆன்மாவாயினும் எந்த முத்தி (நாலினுள்) அடைந்தாலும் 'உயிரத்துவிதம்' என்ற நிலையே பெறப்படுகிறது. (அதாவது பெத்தநிலையில் சிவன் உயிரோடு அத்துவிதம். முத்திநிலையில் உயிரும் சிவனோடு அத்துவிதமாதல்—ஒன்றாகாமல், இரண்டாகாமல், ஒன்றும் இரண்டும் இன்றாகாமல் தாடலைபோல் கூடுதல்).

எல்லோரும் கடவுளரே என்று வேதாந்தி சொன்னால், மக்கள் ஏன் துன்பத்துக்குள்ளாக வேண்டும் என்று சித்தாந்தி கேட்கிறான். அதே வேளையில், முக்தி என்பது இடையிலே அடையப்பெறும் நிலையென்று சித்தாந்தி சொன்னால், அந்த முத்தி இடையிலே நீங்கும் (நிரந்தரமல்ல) என்று வேதாந்தி சொல்லுகிறான். அறிவு மாறுபடுவதற்கேற்ப நமது கொள்கைகளும் மாறுபடும். எல்லோரும் இறைநிலை எய்தியே தீருவார்கள். ''பூமி உருண்டையானது. அதன் மேற்பரப்பில் வாழுகிறோம். அண்டவெளியிலே பூமி தன்னையும் சுழற்றி, சூரியனையும் சுற்றி வருகிறது. வெளியிலே பூமி சுழல்கிறபோது, நாம் வாழும் மேற்பரப்பு, ஒரு முறை கீழே போகும். ஆனால் நாம் விழமாட்டோம் அது எப்படி? — இந்தப் பகுதியில் பேசப்பட்டிருக்கிற வாசகங்களின் உட்பொருள் எல்லோருக்கும் விளங்குமா? எத்தனையோபேர், நாம் பூமிக்குள்ளே இருக்

கிறோம் என்று எண்ணுகிறார்கள் (உ-ம்: சிறுவர்கள்). அண்டத்து வெளியில் மேல் கீழ் என்று இல்லை என்றும், புவியினுடைய ஈர்ப்புவிசை காரணமாக (நிறை காரணமாகவே) நாம் புவியோடு இணைந்து, புவியை விட்டு விலத்துப்படாது வாழுகிறோம் என்பது எம்மில் பலருக்கு விளங்காமல் இருக்கலாம். அதேபோலவே, வேதாந்திகள், நாமெல்லோரும் பூரணம் பெற்றவர்கள், நாம் துன்பத்திற்குள் அகப்படவில்லை, அறிவுக்குறைவு காரணமாகவே, ஒருவன் தான் துன்பப்படுவதாக எண்ணுகிறான். அறிவு வளர்ச்சியில்,இந்தப்பிரபஞ்சமே கடவுளின் 'தோற்று வடிவம்' என்று அறிகிறான். "உண்மை வடிவம்" பிரமமாகிய ஞானம். தோற்றுவடிவத்தில் (சகுணப்பிரமத்தில்) குறைநிறை தென்படுகிறது,நிறையுள்ளவர்கள், குறையுள்ளவர்கள் இருபாலாரும் உண்டு. நிறையுள்ளவன் குறையுள்ளவனைக் கண்டித்தே திருவான். குறையைக் கண்டு, அது பிரமம் என்று ஒயப்போகிறதில்லை. எல்லாம் பிரமம் என்றதற்காக, பிழை தண்டிக்கப்பட வேண்டியதில்லை என்றில்லை. பிழை, தண்டிக்கப்படவேண்டும். சரி, உற்சாகப்படுத்தப்பட வேண்டும். இந்த நியதிக்குட்பட்டே சகுணப்பிரமம் விளையாடுகிறது. நான் ஒரு சகுணப்பிரமம். சகுணப்பிரமம் ஒடுங்கிவிடும். ஒடுங்கி நிர்க்குணபிரமாகிறது, என்று ஒரு விளக்கம் கூறலாம். உதாரணமாக, கடலிலே தோன்றும் அலைகள், கலைந்து கடலேயாகின்றன. மனவுடம்பு ஆனது, தூலவுடம்புகள் பல எடுத்து, ஈற்றில் கரைந்துவிடுகிறது மனம் அழிகிறது. அதுவே நம்முடைய முத்தியென்று சொல்லப்படுகிறது. இதற்கு இன்னோர் உதாரணத்தையும் வேதாந்திகள் சொல்வர். பானை உடையும் போது,பானையில் இருந்த வெளி, பானைக்கு வெளியே ஏற்கனவே இருந்த வெளியோடு கலந்து ஒரே வெளியாகிறது. அதாவது முன்பு இருந்தது ஓரே பரவெளி அந்த வெளியிலே, வெளியை மூலப்பொருளாகக் கொண்ட ஒரு பானை தோன்றியது. பானை தோன்றியதால் பரவெளியில் கொஞ்சவெளி பானைக்குள் அகப்பட்டுக்கொண்டது. பழையபடி பானை உடைய பானைக்கு வெளியேயும் உள்ளேயும் இருந்த வெளிகள் சங்கமித்துக் கொண்டன. திருத்தமாகச் சொன்னால், பரவெளி, பானையினூடாக (சுவரூடாக) பானையின் வெளியோடு இணைந்தே இருந்தது, பிரிவில்லை. ஆனால் பானை உடைந்து மண்ணாகி, மண் நீரில் ஒடுங்கி, நீர் தீயில் ஒடுங்கி, தீ காற்றில் ஒடுங்கி, காற்று வெளியில் ஒடுங்கி பரவெளியாகியது.

மேலே வேதாந்திகளின் முத்திவிளக்கம் தரப்பட்டது போல், சித்தாந்திகளின் முத்தி விளக்கத்தை பின்வருமாறு தரலாம். கேவலநிலையில் ஆணவத்திற்கு அடிமைப்பட்டிருந்த உயிரோடு பெத்தநிலையில்

(சகல நிலையில்) சிவம் அத்துவிதப்பட்டிருக்கும். முத்தி நிலையில், உயிர் சிவத்தோடு அத்துவிதப்படும். உதாரணமாக ஒரு உபகதை சொல்லலாம். வயதுவந்த ஒரு தாயானவள், தனது ஒரே ஒரு வாலிப வயதுடைய மகனோடு வாழ்கிறாள். வாலிபனோ, உழைப்பதும் குடிப் பதுமே வேலை. தாய்க்குக் கஞ்சிகூட வார்க்கான். இருந்தும் தாயோ, மகனுக்காகவே வாழ்கிறாள். அவனுக்கு சமைத்துப் போடுவாள், தான் உண்ணாள். உண்ண வசதியில்லை. தாயோ, பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்றபடி, அன்புவடிவாக இருக்கிறாள். இந்த நிலையே, ''சிவம் உயிரோடு அத்துவிதம்'' என்பது. இனி, மகன், தனது பிழையை உணர்ந்து தாயை நேசிக்கத் துவங்கிய நிலையைப் பார்ப்போம். இங்கு, தாய் மகனோடு அத்துவிதம் என்ற நிலையில் ஒரு படி முன்னேற்றங் காணப்பட்டு, மகன் தாயோடு அத்துவிதம் என்ற நிலையுண்டாகிறது. உயிர் சிவத்தோடு அத்துவிதமாகவே முத்தி என்று சித்தாந்திகள் கூறுகிறார்கள். இங்கே வேதாந்தக் கருத்து எட்டுவதாகத் தெரிகிறது வேதாந்தப்படி, பிரமமே ஜீவனாக இருக்கிறது. (சிவமே ஜீவனாக இருக்கிறது). ஜீவன், தான் பிரமமே என அறிதல் முக்தி. ஆகவே, சித்தாந்த சொற்பிரயோகத்தைப் பாவித்தால் பின்வருமாறு கூறலாம். அ—து:— மனிதர் நிலையில், பிரமம் ஜீவனோடு அத்துவிதம்; முத்திநிலையில், ஜீவன் பிரமத்தோடு அத்துவிதம் என்று கூறலாம். 'நான்' எனும் அகங்காரம், பிரமத்தை ஜீவனாக்குகிறது. அகங்கார மழுக்கம் பிரமத்தை வெளிக்கொணர்கிறது என்று விளங்கிக் கொள் வோம்.

மேலும் சித்தாந்திகள், உயிர்கள் முத்திநிலையிற்கூட, சிவத்தினது ஐந்தொழில்களை நிகழ்த்தா எனச்சொல்லுவார்கள். வேதாந்திகளைப் பொறுத்தவரை, படைப்பு முதலாம் தொழில்கள், உள்ளது போலத் தோற்றுகிறது. முத்திநிலையில் படைப்பு இல்லை. அன்றும், இன்றும், என்றும் முத்தியிலேதான் ஒருவன் இருக்கிறான். முத்தி, புதிதாக இடையிலே அடையப்பட்டதல்ல.

பகுதி II

# பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு—1.

## சாயி யார்?

[ஆங்கில சனாதன சாரதி வெளியீடு, யூலை 1974இல் பகவான் சாயி படைத்த பேச்சின் தமிழ் வடிவம். தமிழில் தந்தவர் நூலாசிரியர்.]

கடவுள், கணிக்கப்பட முடியாதவர். வெளி உலகிலே கண்டு அவரை உணர, அடைய முடியாது. ஒவ்வொரு ஜீவராசியினதும், இருதயமாக விளங்குபவர் அவரே. இரத்தினக் கற்களை, நிலத்துக் கடியிலேதான் காணலாம். அவை காற்றிலே மிதப்பவையல்ல. அதே போன்று, கடவுளையும் உன்னுடைய இருக்கையின் அடியிலே கண்டு பிடி. வெளியே புறவுலகில் அல்ல. உடம்பு, அதற்காகவே தரப்பட்டிருக்கிறது. சொத்துவழி வந்த முத்துப்பதித்த பொற்பாத்திரத்திலே, தனது நாளாந்த உணவைச் சமைத்தவன்போல, நீ உனது உடம்பை, வீண் பிரயோசனம் செய்கிறாய்.

கடவுளை, எங்குமுள்ளவர், எல்லாமறிபவர், எல்லா வல்லமையும் உள்ளவர் என்று, மனிதன் உயர்த்திப் பேசுகிறான். ஆனால் தனக்குளே அவரது இருக்கையைக் கவனியாது விட்டுவிடுகிறான். (எங்குமுள்ளவர், மனிதனிடமும் இருப்பார்). பலர், கடவுளின் குணங்களை விபரிக்க முயன்று, அவர் இப்படிப்பட்டவர், அப்படிப்பட்டவர் என்று உரைக்கிறார்கள். ஆனால், இவை, அவர்களின் ஊகங்களும், அவர்களின் விருப்பு வெறுப்புகளின் பிரதிபலிப்புகளுமாகும்.

கடவுள் இப்படியானவர், அப்படியானவர் என்று, யார் உறுதி கூறமுடியும்? இந்த வடிவமுடையவர் அல்லர், இந்தக் குணமுடையவரல்லர் என்று யார்தான், உறுதியுரைக்க முடியும்? கடற்கரைக்குச் சென்றவர் காவிச்செல்லும், பாத்திரத்தின் கொள்ளளவுக்கு ஏற்பவே, ஒவ்வொருவரும் கடனீரை ஏந்த முடியும். அந்தக் கணியத்திலிருந்து, விரிந்த கணியத்தின் அந்தச் சிறு பகுதியையே, அவர்கள் அறியமுடியும்.

ஒவ்வொரு சமயமும், தான் எல்லைபோடும் எல்லைக் கோட்டுக்குள்ளேதான், கடவுளுக்கு இலக்கணம் சொல்ல முடியும். ஆனால், அச்சமயம், தான் கடவுளைப் பிடித்துவிட்டதாகச் சொல்லும். யானை பார்க்கச் சென்ற குருடர் கதைபோலவே, ஒவ்வொரு சமயமும், தாம் கண்ட கடவுள் பற்றிய தரிசனம் நிறைவானதும் முழுமையானதும் என்று சொல்லும்.

எல்லா வடிவங்களும், எல்லாப் பெயர்களும் எல்லாப் பண்புகளும், எல்லாத் தத்துவங்களும் அடங்கியவர்தான் கடவுள் என்பதனை ஒவ்வொரு சமயமும் மறக்கின்றன. மானிட சமுதாயத்தின் சமயமென்றால், அது, இந்த ஒவ்வொரு சமயப் பிரிவினதும் மொத்தக் கூட்டுத் தொகையே. ஏனென்றால், சமயம் ஒன்றே உண்டு. அதுதான் அன்பு மதம் (அன்பை அடிப்படையாக்கொண்ட சமயம்). யானையைப் பார்க்கச் சென்ற குருட்டுத் தத்துவ ஞானிகள் கண்ட யானையின் ஒவ்வொரு உறுப்பும், யானையின் இரத்தத்தாலேதான் இயங்கின. தனியானதும், வேறுபட்டதும் என்று தமக்குள்ளே நினைக்கின்ற சமயங்கள் எல்லாம் அன்பென்னும் ஒரே ஆற்றலினாலேதான் வளம் பெறுகின்றன.

கட்புலனானது உண்மையைக் கண்டுகொள்ள ஆற்றலற்றது. அது தவறானதும் பயனற்றதுமான தகவல்களையே திரட்டுகிறது. (உ-ம். ஏழு நிறங்கொண்ட சூரியவொளி வெண்ணிறவொளியாய் தோற்றுகிறது). பலர் என்னுடைய செயற்பாடுகளை அவதானிக்கிறார்கள். பின்பு என்னுடைய இயல்பு இத்தகையது, அத்தகையது என்று கூறுகிறார்கள். ஆனால், அவர்கள், புனிதமாய், அளப்பரியதாய், நிலையான உண்மையாய் இருக்கும் என்னை அளந்தறியமுடியாதவர்களாய் இருக்கின்றனர். சாயியின் ஆற்றல் எல்லையற்றது; அது தொடர்ந்தும் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது ஆற்றலின் எல்லா வடிவ வேறுபாடுகளும், இந்தச் சாயியின் உள்ளங்கையிலே அடங்கியிருக்கிறது. (All Forms of 'power' are resident in this Sai Palm).

பட்டம்பெற்றவர்கள், யோகியர், பண்டிதர்கள், ஞானிகள் போன்ற பலரும் என்னை விளங்கிக்கொண்டதாகச் சொல்லுகிறார்கள். முக்கியமற்றதும், இந்தச் சாயி சக்தியின் மிகமிகச் சிறிதாகவுள்ள, இயல்பான, வெளி வெளிப்பாடாகின்றதுமான, அற்புதங்களைமட்டுமே கண்டு என்னையறிந்ததாகச் சொல்லுகிறார்கள். பிருந்தாவனத்தில் (சாயியின் இரண்டாவது வாசஸ்தலம்) உள்ளதும், எல்லா ஆற்றல்களுக்கும் எல்லா ஞானத்திற்கும் ஊற்றிடமாகவுள்ளதுமான இந்த மூலப்பொருளோடு தொடர்புகொள்ள, அவர்கள் விரும்பவில்லை. தங்களுடைய வேதசாஸ்திரப் படிப்புகளை, ஒரு கூட்டத்தில் மக்களிடையே ஒப்புவித்து, புகழுடையும் சந்தர்ப்பமொன்று கிடைத்துவிட்டால், அதுவே திருப்தியென்று இருக்கிறார்கள். ஆனால், அதேநேரம், வேதங்கள் வெளிவந்த மூலப்பொருள் தம்மத்தியில் தங்களுக்காக வந்திருக்கிறது என்பதை அறியாது, வேதசாஸ்திர விற்பன்னர் என்ற பெயரெடுத்தால் போதுமென்று நினைக்கிறார்கள்.

எல்லா யுகங்களிலும் இப்படியேதான் நடந்திருக்கிறது. மக்கள் பௌதிகரீதியில் அவதாரத்திற்கு நெருக்கமாக இருக்கலாம் அவதாரத்தி அற்புதங்களைப் பெரிதுபடுத்திக்கொண்டு, தமது அதிஷ்டத்தை அறியாதவராய், வீணே வாழ்ந்துபோகிறார்கள். ஒரு யானையின்மீது உட்காரும் ஒரு நுளம்பு எவ்வளவு சிறிய பருமனாகத் தோற்றுமோ, அதேபோன்று அவதாரங்களின் பெருமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அவதாரங்கள் செய்யும் அற்புதங்கள் மிகமிகச் சிறிய பெறுமதியானவை. ஆதலால், நீங்கள் எனது அற்புதங்கள்பற்றி ஆரவாரித்துப் பேசும்போது, எனது விலைமதிப்பற்ற தெய்வீகத்தை — எனது நிலையான உண்மைத் தத்துவத்தை, அறியாது, நீங்கள் அலைகிறீர்களே என, கவலையில் சிரிக்கிறேன்.

எனது ஆற்றல்களை அளந்தறியமுடியாது. எனது உண்மை, விளங்கப்படுத்தப்பட முடியாதது — அதன் ஆழத்தை அறியமுடியாது. இப்போ. தேவை ஏற்பட்ட காரணத்தாலேயே, என்னைப்பற்றி இங்கே பேசுகிறேன். ஆனால், நான் இப்போது செய்துகொண்டிருப்பது ஒரு 'Visiting Card' போன்று, உங்களை என்பால் ஈர்ப்பதே ஒரு உண்மை சொல்லுகிறேன், கேளுங்கள். அவதாரங்களில், கிருஷ்ண பரமாத்மாவால்தான், சத்தியத்தைப் (Truth, கடவுள்) பற்றிய முக்கியமான ஆணித்தரமான பிரகடனங்கள், தெளிவாகவும், தவறில்லாமலும் உரைக்கப்பட்டன. அப்படியிருந்தும், கிருஷ்ண அவதாரத்தின்போது அவர் தோல்வியையும் கண்டிருக்கிறார் என்பதை நீங்கள் அவதானிக்கலாம். அச்சந்தர்ப்பங்களில் அவர் கண்ட தோல்விகள், அவர் முன் கூட்டியே திட்டமிட்டு, இயக்கிய நாடகத்தின் பகுதிகள் என்பதையும் நீங்கள் அறியவேண்டும். கௌரவர்களுக்கு (மகாபாரதத்தில் வரும், துரியோதனன் முதலியோர்) எதிரான போரை நிறுத்தும்படி பல அரசர்கள், கிருஷ்ண பரமாத்மாவைக் கேட்டபோது, கௌரவர்களது அரசமன்றுக்கு, தான் மேற்கொண்ட சமாதானத்தூது 'தோல்வி' கண்டு விட்டது என்று பதிலளித்தார். அத்தூது, வெற்றியடையவேண்டுமென்று, அவரே விரும்பியிருக்கவில்லை. அந்தப் போர் இடம்பெற வேண்டும் என்று அவர் தீர்மானித்திருந்தார் (முன்னரே). அவரது தூதின் நோக்கம், கௌரவர்களது பேராசையையும் அதர்மத்தையும் வெளிக்காட்டி, உலகமக்கள் முன்பாக, அவர்களைக் கண்டிக்கவேண்டும் என்பதாகும். ஆனால், இந்த சாயி நாடகத்தில், அப்படியான தோல்விக் காட்சிகள் இல்லை என்பதை நான் கண்டிப்பாக, உங்களுக்குச்

சொல்லவேண்டும். நான் என்ன விரும்புகிறேனோ, அது நடந்தே தீரும். என்ன திட்டம் போடுகிறேனோ அது வெற்றி பெற வேண்டும். நான் சத்யமாக இருக்கிறேன். சத்தியம் தயங்க, அல்லது பயப்பட, அல்லது வளைந்து கொடுக்க வேண்டிய தேவையில்லை.

என்னைப் பொறுத்த வரையில், விரும்புதல் என்பதே, தேவைக்கு அதிகமானது. ஏனென்றால், நிதானமான அன்பும் நிதான நம்பிக்கையும் உள்ள பக்தர்களுக்கு என்னுடைய கிருபை எப்பொழுதுமே கிடைக்கக் கூடியதாகவுள்ளது. நான் பக்தர்கள் மத்தியில், அவர்களோடு பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் திரிவதால், புத்திசாலிகள் கூட, என்னுடைய உண்மையான, ஆற்றலை, புகழை அல்லது அவதாரமாக இருக்கும் எனது பணிகளை, கண்டுகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள். எவ்வளவு சிக்கலாக இருந்தாலும் எந்தப் பிரச்சனையையும் என்னால் தீர்க்கமுடியும். மிகவும் நுணுக்கமான விசாரணைக்கும், மிகவும் நுணுக்கமான கணிப்பீட்டுக்கும் அப்பாலே நான் இருக்கிறேன். எனது பிரேமையினை (அன்பினை) அறிந்து அதனை அனுபவித்தவர்கள் மட்டுமே, தாம், எனது உண்மையியல்பின் ஒரு சிறு பகுதியைக் கண்டதாகக் கூறலாம். ஏனென்றால், மனித சமூகம் என்னை அடைவதற்குரிய பாதை அன்புவழியேயாகும்.

வெளிக்கண்களால் பார்த்து என்னையறிய முயலவேண்டாம். ஒரு கோயிலுக்குச் சென்று, சொரூபத்தின் முன்னராக நின்று ஆண்டவனை மூடிய கண்களால் பிரார்த்திக்கிறீர்கள் அல்லவா? ஏன? ஏனென்றால் உள் ஞானக்கண் மட்டும், ஆண்டவனை உங்களுக்கு காட்டுமென்று நீங்கள் உணருவதனால். ஆதலால், என்னிடம் அற்ப உலகப் பொருட்களை கோராதீர்கள். ஆனால் என்னையே வேண்டுமென்று கேளுங்கள். அப்போ உங்களுக்கு பலன் கிடைக்கும். அன்பின் நிறைவினால், கிருபைச் சின்னங்களாக, நான் தரும் பொருட்களை, நீங்கள் பெறக்கூடாதென்று இல்லை. ஏன் நான் உங்களுக்கு மோதிரங்கள், தாயத்துக்கள், செபமாலைகள் போன்றவற்றைத் தருகிறேன் தெரியுமா? எனக்கும், பொருட்களைப் பெறுபவருக்குமிடையே இருக்கும் பிணைப்பைக் காட்டவே. அவர்களுக்கு ஒரு கஷ்டம் வருகிறபோது, அந்தப் பொருள், ஒரு மின்னல் வேகத்தில் என்னிடம் வந்து, தேவையான பாதுகாப்பு கிருபையைப் பெற்றுக்கொண்டு, மின்னல் வேகத்தில் அவரிடம் (ஆபத்தில் இருக்கும்) சென்றுவிடுகிறது. எந்தப் பெயரிலும் சரி எந்த உருவிலும் சரி, என்னை அழைக்கும் எல்லோருக்கும் அந்தப் பாதுகாப்புக் கிருபை கிடைக்கும். கொடைப் பொருட்களை அணிபவர்க்கு மட்டும் என்றல்ல . அன்பு என்னும் பிணைப்பே, கடவுளின் கிருபையை வென்றெடுக்கும் உபாயம்.

சாயி பாபா என்ற, பெயரின் கருத்தைப் பாருங்கள். சா என்றால் தெய்வீகம். ஆய் என்றால் ஆயி என்றால் 'தாய்'. பாபா என்றால் 'தந்தை'. ஆகவே அந்தப் பெயரின் கருத்து, தெய்வீகத் தாயும் தந்தையும் (தெய்வத் தாய் தந்தை) என்பது. உங்களுடைய உடல் ரீதியான பெற்றோர், சுயநலங் கலந்த அன்போடு உங்களை நேசிக்கலாம். ஆனால் சாயி மாதாவும் பிதாவும் ஆன இது, அன்பைச் சொரியும் அல்லது தண்டிக்கும். என்ன நோக்கில் என்றால், ஆத்மனை அடைகின்ற உங்கள் முயற்சியில் உங்களுக்கு வெற்றி கிடைக்கவேண்டும் என்பதற்காக.

இதற்காக, சாயி எல்லா மனித இனங்களையும் ஒரு இனமாக ஒற்றுமைப் படுத்துகின்ற உயரிய பணியினை ஒப்பேற்றவே வந்திருக்கிறார். சகோதரத்துவம் என்ற பிணைப்பினாலே இனங்களை இணைக்க வேண்டும். ஒவ்வொரு உயிரும் அடிப்படையில் ஆத்மா, என்ற உண்மையினை உறுதிப்படுத்தி, துலக்கி, அதன் மூலமாக இந்த இணைப்பினைச் செய்ய வேண்டும். பிரபஞ்ச ஆதார ஆத்மனும் மனித ஆத்மனும் ஒன்றென்ற தத்துவத்தினை நிறுவவேண்டும். மனிதனை மனிதனோடு இணைக்கும் பொதுவான ஆத்மீகத் தொடர்பினை விளங்கவைத்து, மனிதன், மிருகநிலையைத் தாண்டி தெய்வநிலைக்கு உயரும்படி, அவனுக்கு அறிவுறுத்த வேண்டும். இவ்வழிவகைகளால், மனித குலத்தை ஒன்றாக்க வேண்டும்.

நான் அன்பின் வடிவம். அன்பே எனது உபகரணம். அன்பில்லாத பிராணியே உலகில் இல்லை. கீழ்மட்டப் பிராணி, குறைந்தது தன்னையாவது நேசிக்கிறது (அன்பு செய்கிறது). அந்தப் பிராணியினது ஆத்மாவும் கடவுளே. மலேரியா நோயாளிகள் இனிப்பை வெறுப்பது போலவும் நீரிழிவு நோயாளிகள் இனிப்பை விலக்குவது போலவும் சிலர் கடவுளை வெறுக்கலாம் அல்லது மறுக்கலாம், ஆனால் எல்லோரும் ஆஸ்திகர்களே. ஏனென்றால், எல்லோரிடமும் அன்பு மலருகிறது. தங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள், தங்களுடைய வருத்தம் மாறியவுடன், கடவுளை விரும்பி கடவுளை வணங்குவார்கள்.

நான் என்னுடைய உண்மைபற்றி இவ்வளவும் சொல்லவேண்டியிருந்தது ஏனென்றால், இதனைச் சிந்தித்து நீங்கள் இன்பமடைய வேண்டும் என்றும், விதிக்கப்பட்ட ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து, உங்கள் இருதயங்களில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சாயியைத் தெரிசித்தலாகிய விடுதலையை நீங்கள் அடைய உற்சாகமூட்ட வேண்டும் என்றுமாகும்.

பின்னிணைப்பு -2

# சமூகவாழ்வும் ஆத்மீக சாதனையும்

**(பகவான் சாயியின் பேச்சின் முற்பகுதியை நூலாசிரியர், தமிழில் தந்தது)**

பலர் கேட்கிறார்கள், ஆத்மீகத்திற்கும் (அல்லது ஆத்மீக விருத்தி செய்யும் விசாரத்திற்கும்) சமூகவியல் வளர்ச்சிக்கும் என்ன தொடர்பென்று. இதே விதமான இன்னொரு கேள்வி - ஆத்மீகம் பயிலும் ஒரு சாதகனுக்கும், சமுதாயத்திற்கும் (அல்லது சமுதாய பிரச்சனைகளுக்கும்) என்ன சம்பந்தமென்று. சமுதாய பிரச்சனைகளுக்கு, சமயம் (ஆத்மீகம்) வழிகாட்டாத என்ற தொனிப்புடைய இந்த இரு கேள்வி நோக்கும் தப்பானது.

மனிதனுடைய ஆத்மா மலர்ச்சியடையாமல், எந்தவொரு சமுதாய இலட்சியமும் பலனளிக்காது. ஆத்மாவை வளர்ச்சியடையைச் செய்யாமல், மனித சமுதாயம், தனது வெளிப்பாடான தெய்வீகத்தை, உணர்ந்து கொள்ளாது. கவனமான, தொடர்ச்சியான கவனம், ஆத்ம வளர்ச்சியில் எடுக்கப்படவேண்டும். ஒரு தனி நபரிலும் அவரூடாகவுந்தான், தெய்வீகந் தன்னை வெளிப்படுத்தும். இந்த மாறுதல் அடையும் உலகமாகிய ஜகத்தையே, நாம் விளங்கிக்கொள்ளலாம் (பஞ்ச புலன்களால்). ஆனால் இந்த ஜகத்தை இயக்கும் கடவுளைக் காணவோ, கேட்கவோ, மணக்கவோ, சுவைக்கவோ, தொடவோ நம்மால் முடியாது. இதே விதமாக ஒரு தனி நபரையே நாம் புரிந்துகொள்ளலாம்; ஆனால் சமுதாயம் என்ற அமைப்பைப் புரியமுடியாது. ஏனென்றால், சமுதாயமென்பது, மூலகங்களின் கூறுகளால் ஆன, ஒரு வேறுபட்ட கட்டட அமைப்பல்ல. சமுதாயமென்பது தெய்வ சங்கல்பத்தால் உண்டாக்கப்பட்ட, தெய்வத்தின் மறு வடிவம்.

மனிதன் அழியக்கூடியவன் (அ—து, காரண— சூக்கும—ஸ்தூல அமைப்பு); அவன் மண்ணாக இருக்கிறான், மண்ணுக்கே திரும்பிச் செல்கிறான். ஆனால் அவனுக்குள்ளே, அழியாத தீச்சுடரின் பொறியாக, அங்கே 'ஆத்மா' பிரகாசித்துக்கொண்டு இருக்கிறது. இது வேதாந்திகளால், கதையாக்கப்பட்ட முகஸ்துதி வசனமல்ல. ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு உயிர்கள் கூட்டமைப்புக்கும் (சமுதா

யத்திற்கும்) ஆத்மாவே மூலமும் மூச்சுமாகவும் (ஆரம்பமும் ஆதாரமும்) இருக்கிறது. ஆத்மாதான் உயிர்களின் ஒரேயொரு ஆரம்பம், ஆக்கு பொருள், ஆதாரமாக (Source, Substance and sustenance) இருக்கிறது. ஆத்மாவே கடவுள். தனிநபராத்மாதான் பிரபஞ்ச ஆத்மா. அது பிரபஞ்ச ஆத்மாவுக்கு குறைவானதே அல்ல. அது பிரபஞ்ச ஆத்மாவே தான். (the particular is the universal, no less) ஆகவே ஒவ்வொரு ஜீவராசியையும் ஒவ்வொரு மனிதனையும், கடவுளின் குழந்தையாகக் காணுங்கள், அல்லது ஒரு சகோதரனாகக் காணுங்கள். அவ்வாறு கண்டு, அந்தஸ்து நிறம், வர்க்கம், தேசம், சாதி, ஆகியவற்றின் அடிப்படையில் எழும், சுருங்கிய சிந்தனைகளை, வெறுப்புகளை அகற்றி விடுங்கள். இந்தவகையான அன்பு நிறைந்த உளப்பாங்கிலேயே உங்களை இயங்கும்படி சாயி, எப்பொழுதும் உங்களை எச்சரிக்கை செய்தும், வழிப்படுத்தியும் வருகிறார். சிந்தனை, சொல், செயல் எல்லாம் இந்தப் பரந்த, ஒன்றென்ற, அடிப்படையிலேயே இருக்கவேண்டும்.

இயற்கை தந்த வளங்களை, மக்களிடையே சமமான அளவில் அல்லது சமமற்ற ஒரு அளவில் பகிரும் திட்டத்தை, சமுதாயம் வகுப்பதன் மூலமல்ல, சமுதாய நிறைவு ஏற்படுவது. ஓரே ஒரு பிரபஞ்ச ஆத்மாவே உண்டு என்ற அறிவையும், அந்த அறிவு தரும் ஆனந்தத்தையும், சமுதாய நடவடிக்கைகளிலும், தீர்மானங்களிலும், அமைத்து விரிவாக்குவதே, ஒரு சமுதாயம் செய்யவேண்டிய முதலும் இறுதியுமான பணியாகும். "ஆத்மாவுக்கு இறப்பில்லை; ஆகவே பௌதிகக் கூடுகளான உடம்புகளைச் கொல்லலாம்" என்று சாயி வழிகாட்டவில்லை. சாயி போர்களை ஊக்குவிப்பவரும் அல்லர். உமக்கு மிகவும் நெருங்கிய குடும்பத்தவரிலும் உறவினரிலும் பார்க்க, கூடிய நெருங்கியவராக ஆத்மாவைக் கொள்ள வேண்டும் என்றே சாயி கேட்கிறது. நீ இப்படி ஆக்கிவிட்டாயானால், சரியான பாதையை விட்டு, நீ ஒரு போதும் மாறமாட்டாய். இதுமட்டுமே அந்த உறவைப் பேணிக்கொள்ளும்.

குடும்பப் பாசம், ஒருவன் தனது உரிமையான பிற கடமைகளை செய்யவிடாது தடுக்கிறது. ஆனால், கடவுள் நாட்டம், ஆனந்தமும் வெற்றியுமளிக்கும் புதியதொரு அர்ப்பண சுபாவத்தோடு அதே கடமைகளை செய்யத் தூண்டுகிறது. கடவுளின் மேல் அன்பைத் தவிர வேறெதுவும், இப்படியான கடமைசெய்யும் பாவனையைத் தராது. அவன் தனது கடமையைச் செய்கிறபோது, அது அவனுக்கு உயரிய

ஞானத்தையும் சொரிந்துவிடுகிறது. எனவே இந்தவாசகம் ஏற்பட்டது. அதாவது, "ஆத்மாவை உணர்ந்தடையும் எதிர்பார்ப்புடன் சம்சார உலகில் (நாம் காணும் உலகில்) பிரவேசியாதே; ஆத்மாவை அறிந்தபின் அதனுள் பிரவேசி" (அதன் பொருள், ஆத்ம தத்துவத்தை அறிந்து உலகுக்குச் சேவை செய்; அறிய முதல் சேவை செய்து, மாண்டு போகாதே என்பது). ஏனென்றால், ஆத்மாவை அறிந்தபின், நீ ஒரு புதிய விளக்கத்தில், பிரபஞ்சத்தைப் பார்ப்பாய்; அத்துடன் உமது வாழ்க்கையே, ஒரு அன்பு ததும்பும் கொண்டாட்டமாக மாறிவிடுகிறது.

## பின்னிணைப்பு - 3

### ஆத்மீக சாதனைகள் (பயிற்சிகள்) பற்றி பகவான் சாயி பேசுகிறார்.

[நூலாசிரியர் தொகுத்தது]

"ஆத்மீகப் பயிற்சிகளான, பஜனை செய்தல், இறை நாம் ஓதுதல், விரதம் அனுட்டித்தல், தியானம் செய்தல் போன்ற செயற்பாடுகள், முதலில் ஒருவன் தனது சொந்த முன்னேற்றத்திற்கு செய்யப்படுவனவாக இருக்கலாம். ஆனால் அதனைத் தொடர்ந்து, உலகப் பொருள்களினுடைய அல்லது உயிர்களுடைய நிலையாமை பற்றி சிந்தித்தல் ஏற்படும். சாதனையின் பத்துப் பங்கில் ஏழு பங்கும் நிலைப்பு—நிலையாமை பற்றிய விசாரமேயாக இருக்க வேண்டும். நீங்கள் எண்ணலாம், உங்களுக்கு இயல்பாகவே கடவுள் பால் அன்பு இருப்பதாக. அது, ஒரு வெறும் எண்ணமாகவும், இருக்கலாம். உண்மையான அன்பு, கடவுள்பால் ஏற்படும் பட்சத்தில், உண்மையான, நாம் எல்லோரும் ஒருவரே' என்ற அனுபூதி ஏற்படும் பட்சத்தில், உமது மனைவிக்கு தலைவலி ஏற்பட்டால், உமக்கும் அதேவிதமாக தலைவலி ஏற்படவேண்டும். அது இல்லையேல், ஆத்மா ஒன்றுதான் என்ற உம்முடைய பேச்சு, ஒரு வெறும் நினைப்பளவில் மட்டுந்தான். அது மெய்யான அனுபவமல்ல. சரியானதும், நிதானமானதுமான சாதனைகளால், நிட்சயம், எல்லாமும் ஒன்றுதான் என்ற உண்மை அனுபவம், இயல்பாகவே, ஒருவரிடம் ஏற்படும். சீரடி சாயிபாபாவின் உடலில் நான் வாழ்ந்து வந்த பொழுது ஒரு பக்தை, இனிப்புப் பண்டம் செய்து ஒரு பாத்திரத்தில் வைத்து, எனக்கு கொண்டு வந்து தர இருக்கையில், ஒரு நாய் அந்த இனிப்புணவில் வாய் வைத்து அருந்தியதைக் கண்ட, அந்த பெண்

மணி, அந்த நாய்க்கு அடித்தார். பின்பு இன்னொரு பாத்திரத்தில் வேறு இனிப்புணவை வைத்து எனக்கு கொண்டுவந்து அர்ப்பணிக்கையில், நான், நீர் முன்பு அளித்த உணவை உண்டு பசி தீர்ந்து விட்டேன் என்று கூறி உணவை ஏற்க மறுத்தேன். அதற்கு அவர் முதன் முதலாக இப்பொழுது தான், எனக்கு உணவைத் தருவதாக வாதிட்டார். இல்லை. நீர் அளித்து உணவை நான் உண்டு கொண்டு இருந்தபொழுது நீரே எனக்கு அடித்தீர் என்று கூறி, பிரபஞ்ச உயிர் ஒன்றே ஒன்றுதான் என்பதை, அவருக்குப் புகட்டினேன்.''

மேற்கூறிய சம்பவத்தில், அத்வைத உணர்வை சிர்டி சாயி, தனது அடியவருக்கு விளங்க வைத்ததைப் பாருங்கள். எண்பத்து நான்கு இலட்ச யோனிபேத (Species) உயிர்களாக, எண்ணிறந்த உயிர்கள் இந்தப் பிரபஞ்ச முழுமையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. உயிர்கள் என்று பன்மையில் (உயிர் என்று சொல்லாது) சொல்வதன் விளக்கம், உயிர்களின் காரண–சூக்கும-ஸ்தூல சரீரம் (அ–து: மன முதலாய அந்தக்கரணங்கள் தொடங்கி வெளியுடம்பு வரை உள்ள அமைப்பு) வேறுபட்டது. ஒரு உயிர், சாதாரணமாக இறக்கும்போது, ஸ்தூல உடம்பை பிரிகிறது. மனவுடம்பு சென்று வேறு ஸ்தூலத்தை எடுக்கும்போது, பிறக்கிறது என்று சொல்லப்படும். முக்தியடையும் பக்குவநிலையில் எல்லா உடம்புகளுமே (மனமுதலாய) பிரிகிறது. பிரிந்தால் அங்கு எஞ்சியிருப்பது, ஒருவருமில்லை. எஞ்சியிருப்பது 'உண்மை' மட்டுந்தான். அந்த உண்மைதான், நமக்குள்ளே இப்பொழுதே இருந்துகொண்டு இருப்பதும். அது இணைக்கப்பட்ட படியே வெளிக்குளும் வெளியாய் பரந்திருக்கிறது. அது பிரமம் என்று உபநிடதங்களில் சுட்டப்படுகிறது. அதுவே பிரபஞ்ச உயிர். அப்படியானால், பக்குவப்பட்டுக்கொண்டு சென்று முத்தி அடைவது எது? இதுதான், எமது முன்கட்டுரைகளில் பல இடங்களில் தெளிவாக்கப் பட்டுள்ள மனம்' (மனவுடம்பு) என்பது. இதனையே ஜீவன் என்கிறோம். ஜீவன் என்ற ஒரு தோற்றப்பாடானது ஒரு சங்கிலி வடிவத்தில் துவங்கிய இடத்திற்கு சென்று முடிந்தது.

சத்யசாயி பாபா மீண்டும் பேசுகிறார். ''சாதனைகளில் பத்துக் கட்டங்கள் இருக்கின்றன. வெவ்வேறு அதிர்வுகளைக் கொண்டு, உதாரணமாக மணி, புல்லாங்குழல், சங்கு, ஓம், இடிமுழக்கம் ...... என்று அந்தக் கட்டங்களை அழைப்பர். சகல புலன்களும் கடந்த நிலையிலேதான் பத்தாவது கட்டம் அடையப்படுகிறது. புலன்களைக் கடந்த நிலையிலேதான் 'ஆனந்தம்' எனப்படும் கட்டத்திற்கு வருகிறோம். இந்த நிலையில், ஒருவர், கடவுளைப் பற்றியே எண்ணு

கிறார், கடவுளையே சாப்பிடுகிறார் (உணவு கடவுளாகிறது), கடவுளையே குடிக்கிறார், கடவுளையே சுவாசிக்கிறார், கடவுளாகவே வாழுகிறார். மேற்படி கூறப்பட்ட பத்துக் கட்டங்களை ஒழுங்காக ஒருவர் தாண்டி வரவேண்டும் என்று இல்லை. ஒருவர் நேரடியாக பத்தாவது நிலைக்கும் போகலாம். அல்லது இடையிலே உள்ள நிலையொன்றுக்கும் (கட்டத்திற்கும்) போகலாம். எப்படியாயினும் கடைசிக் கட்டம் போய் சேரும் வரைக்கும் ஒருவர் ஆறுதல் அடையார். ஏனென்றால், உண்மை ஆனந்தம் பத்தாவது கட்டத்திலேதான் உதயமாகும். அப்பொழுது அவருடைய எண்ணங்கள், ஆசைகள் எல்லாமே கடவுள் தான்.''

பொதுவாகப் பேசுவோம். எண்ணங்கள் எல்லாமே ஜடந்தான். அதாவது அசேதனம். சக்தியின் மிக நுண்ணிய சடவடிவம் என்று கொள்ளவேண்டும். நமது உணவில் இருந்தும் சுற்றாடலில் இருந்துமே இந்த எண்ணங்கள் வருகின்றன. சாத்வீக உணவை உண்டு, நல்லவற்றை எண்ணி, நல்ல சுற்றாடலை விரும்பினால், நல்ல எண்ணங்கள் மட்டுமே வரும். சிலர் மனத்தில் (MIND) இருந்து எண்ணங்கள் (THOUGHTS) வருவதாக, தவறுதலாக நினைக்கிறார்கள். மனந்தான் வெளியே சென்று எண்ணங்களைப் பிடித்து, அவற்றோடு பிணைந்துகொண்டு இருக்கிறது. ஆசை கடவுள்பால் இருந்தால், மனம் வெளியே போகாது,.

மேற்படி பகவானது பேச்சுக்கு ஆதாரமாக, ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சருடைய உவமானக் கதைகள் பல உண்டு. அதாவது உணவு எப்படி எண்ணங்களைத் தருகின்றது என்பதற்கு. ஒரு பக்தை வீட்டு வேலைக்காரி, களவு செய்வதில் வல்லவள். அவள் சமைத்த, உணவை உண்ட. சந்நியாசி ஒருவர், அந்த பக்தையின் ரம்ளர் பேணியை. இடுப்புக்குள் செருகி, களவாடிக் கொண்டு சென்றுவிட்டார். அதே சந்நியாசி பல தடவைகள், இந்த பக்தை வீட்டில் சாப்பிடுகிறார். ஆனால், இந்த முறை,பக்தை சமைக்கவில்லை. வேலைக்காரியே சமைத்தது. இந்த பக்தை தனது குருவிடம் சென்று, அந்தச் சந்நியாசி களவுசெய்யக் காரணம் என்ன வென்று கேட்ட பொழுதே, குருவானவர், சமையல் செய்தவருடைய எண்ணப்பதிவுகள், சாப்பாட்டில் கலந்து, சந்நியாசிக்கு அந்த களவுணர்வைக் கொடுத்தாகப் பதிலளித்தார். பகவான் சாயி சொல்லுவார், அரிசியை, வாங்கத் தேடிய பணமும் தூய முறையில் பெறப்பட்டிருந்து, சமைத்தவர் சுத்த உணர்வோடு இருந்து சமைத்து, உணவைப் பரிமாறியவரும்

சுத்த மனத்தோடு இருந்தால்தான் அந்த உணவு புனிதமானது என்று. இதற்காகத்தான் சில சாதுக்கள், தாமாகவே சமைத்து, உண்பார்கள். மச்சமாமிச உணவுகளிலும் பார்க்க, மரக்கறி உணவுகள் நல்ல உணர்வைத் தருகின்றன மேலும் கடவுளைத் தேடுபவர்கள் உள்ளேயே தேடவேண்டும். வெளியே இருப்பது சகுணப்பிரம்மம். இது காரியம். உள்ளே இருப்பது நிர்க்குணப்பிரம்மம். இது காரணம். காரணத்தையே நோக்கி நாம் பயனடையவேண்டும். அதனால் தான் பாபா சொல்லுகிறார், ஆசை கடவுள்பால் இருந்தால், மனம் வெளியே போகாது. மனம் வெளியே போய்க் கருவிகளின் உதவியுடன் காரியப் பொருளைக் கவர்ந்து இன்ப துன்பங்களுக்கு ஆட்படும். இதனைத் தடுக்க வழி, உள்ளே இருக்கும் காரணப் பொருளை விரும்புதலேயாகும். பொன்னையோ, பொன் ஆபரணங்களையோ, புத்திமான் விரும்புவான்? பொன்னிருந்தால், விரும்பிய ஆபரணங்களை, விரும்பிய நேரத்தில் விரும்பிய வடிவில் செய்துகொள்ளலாம். அதுபோன்று, காரணமான நிர்க்குணபிரமத்தை நாம் நாடவேண்டும். காணும் காரிய பிரபஞ்சத்தில், இத்தனை புதுமைகளும் இனிமைகளும் நிறைந்திருந்தால், காரணமாகிய பிரமத்தில், அடங்காத புதுமைகளும் இனிமைகளும் உண்டா? ஆத்மீக சாதனையின் பத்தில் ஏழுபங்கும் விசாரம் என்று பகவான் கூறுவதை, எல்லோரும் அறிய வேண்டும். சத்சங்கங்களில் ஈடுபடவேண்டும். பகவான் கூறுகிறார், ''நீயும் சாயிபாபா'' என்று. நாம் அதனை ஏற்காது நாம் பாவிகள் என்று சொல்லி, பாபாவிடம் இவ்வுலக நலன்களைக் கேட்கின்றோம். எதனைப் பெற்றால், நாம் எல்லாமும் பெற்றுவிட்டோமோ, அதனை நாம் பெற முயல்வதில்லை. அதுதான் பகவான் நமக்கு அளிக்கும் அத்வைத ஞானம். நாம் இன்னமும், பஜனை பாடுவதில் போட்டி உணர்வோடும். சேவையாற்றுதலில் போட்டி உணர்வோடும் இருந்து அவற்றிற்கு மாசு கற்பிக்கிறோமேயொழிய அவற்றைச் செவ்வனே செய்வதில்லை. பாபா எல்லா மதங்களையும் ஏற்று அனுசரிக்கிறார், ஆனால், நாம் சமயப் பாகுபாடு காட்டுகிறோம். ஆகவே, நாம் நமது அறியாமையில் இருந்து விடுபட, சாயியை, ஞானத்தை அருளும்படி பிரார்த்தனை செய்வோமாக. கடவுளிடம் பக்தி, ஞானம், விவேகம் (discrimination) வைராக்கியம் (Renunciation) ஆகியவற்றை தரும்படியாக பிரார்த்திக்கும்படி, ஸ்ரீ இராமகிருஷ்ணர் அடிக்கடி கூறுவார்.

பகவான் தொடர்ந்து பேசுகிறார். "உங்களில் பலர் கடுமையான தவங்கள், விரதங்களை அனுட்டித்து உங்களை வாட்டுகிறீர்

கள். ஆனால், பக்தியாலும், அந்தப் பக்தியால் நெறிப்படுத் தப்பட்ட வாழ்வாலுமே, நீங்கள் என்னை அடையலாம். உடம்பின், அடிப்படைத் தேவைகளைக் குறைத்துவிடாதீர்கள். நீங்கள் பெற்ற புனிதமான கருவிதான் உங்கள் உடம்பு. இதனைக் கொண்டே உங்கள் இலக்கினை நீங்கள் அடையவேண்டி இருக்கிறது. எளிய நல்வாழ்வு வாழ்க; சத்துவ உணவை உட்கொள்க; பேச்சில் நேர்மை உள்ளவர்களாக இருங்கள்; அன்பான பணியை ஆற்றுங்கள்; சாது வானவர்களாகவும், பொறுமையுள்ளவர்களாகவும் இருங்கள்; மனச் சாந்தி நிலைகுலையாமல் பார்த்துக்கொள்ளவும். உங்களுடைய இருத யத்தில்இருக்கும்என்மீது உங்களுடைய எண்ணங்களைத் திசைதிருப்புங் கள் உங்களை வெற்றியுள்ள ஆத்ம சாதகனாக மாற்றவே உங்களை பல வழியிலும் சோதிக்கிறேன்.உங்களைக் கசக்கிப் பிழிந்து,கண்ணீரில் வாழ வைக்கிறேன். ஏனென்றால் உங்களைத் திருத்தவே நான் வந்திருக்கி றேன். நீங்கள் வெற்றி பொருந்திய சாதகனாக மாறும்வரை, நான் விடமாட்டேன். அப்படி ஆகுமுதல், நீங்கள் மனம்மாறிப் போனாலும் நான் விடவேமாட்டேன். என்னிடமிருந்து நீங்கள் தப்பிக்கொள்ள முடியாது என்னால் பார்க்க முடியாதது ஒன்றுமில்லை. எனக்குத் தெரியாத பாதைகளும் இல்லை. என்னுடைய நிறைவு மட்டுப்படுத் தப்படாத ஒன்று. நான் தான் எல்லாமும் அடங்கிய முழுமை. பரி பூரணமான மனவொடுக்கத்தையோ, பரிபூரணமான துறவினையோ நான் உங்களிடமிருந்து கேட்கவில்லை· எல்லா உயிர்களிலும் என் னையே கண்டு, அந்த உயிர்கள் மூலமாக எனக்கு பணிசெய்யும் அந்த அன்பு ஒன்றையே நான் கேட்கிறேன். ஈற்றில் நீங்கள்உங்களில் எனது சங்கல்பத்தைப் பிரதிபலிக்க வேண்டும் என்பது''

[ஒரு அமெரிக்கப் பக்தனது உரையாடலில் இருந்தும், 1974 ஆண்டு ஆங்கில சனாதன சாரதியில் பகவான் எழுதியதிலிருந்தும் தொகுக்கப்பட்டது ]

## பின்னிணைப்பு - 4

### சத்யசாயி பாபாவின் கடித மறுமொழியின் சுருக்கம்,
*(தமிழில் சுருக்கித் தந்தவர் நூலாசிரியர்)*

சத்ய சாயி பாவுக்கு இருபது வயதளவில், பத்திரைகளிலும் சாயிபாபாவின் அருட்செயல்களைபற்றி எழுதத்தொடங்கினார்கள். ஒருசில பத்திரிகைக் கூற்றுக்களை, பாபாவின் தமையன், சேசம

ராஜு வாசித்து கவலையடைந்தார். காரணம், உண்மைகளைத் திரிபுபடுத்தி எழுதியிருந்தார்கள். வேதனையுற்ற தமையனார், தனது தெய்வத் தம்பிக்கு, ஏதும் தீங்கினை இழைத்தும்விடலாம் என்று அச்சமுற்று ஒரு கடிதம் பாபாவுக்கு எழுதினார். அதற்கு பாபா 1947-05-25 அன்று, ஒரு பதில் கடிதம் எழுதினார். அக்கடிதத்தை ஏறக்குறைய மூன்றில் ஒன்றாகச் சுருக்கித் தமிழில் தருகிறோம்.

அன்புள்ளவரே

நீரெழுதி யனுப்பிய கடிதம் கிடைத்தது. நீர் கவலையுறும் காரணமுமறிவேன். ஞானியர், யோகியர், துறவிகள், இருடிகள், சாதுக்களாகியோரது நடத்தைகளை மற்றயோர் கண்டுபிடிக்க முடியாது. தமது குணங்களைக் கொண்டே, மகான்களைப் பார்க்கிறார்கள்.

அவ்வகையான மக்களைக் கண்டு அஞ்சி நமது போக்கினை மாற்றக் கூடாது. சரியெதுவோ அதனை நாம் செய்தாகவேண்டும். காய்த்த மரமே கல்லெறிபடும். இது உலக வழக்கு. மக்கள், காமக் குரோதம், அகங்கார முடையவர்களாதலால், உண்மையை அறியும் பொறுமையை இழந்திருக்கிறார்கள். அவர்களுகாக, நாம் கவலைப் பட வேண்டியிருக்கிறது. அவர்கள் உண்மையை அறிந்திருந்தால் அப்படிப் பேசவோ, எழுதவோ மாட்டார்கள். நீங்கள் மனத்தில் அதைப் பொருட்படுத்தாதீர்கள். அசத்தியம் தோல்வியுறும் சத்தியம் எப்போதும் வென்றே தீரும்.

மகான்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று சாஸ்திர மெதுவும் இல்லை. அவர்களுக்கு, அவர்களுடைய பாதை தெரியும். தன்னம்பிக்கையும், பிறர்நலமும் அவர்களுடைய அடையாளங்கள். தமது பக்தர்களுக்கு ஆகவேண்டிய நலன்களைக் கவனிப்பதில் கருத்தாக இருப்பார்கள்.

புகழும் இகழும் ஆத்மாவைத் தீண்டா. வெளி உடலையே அவை தீண்டமுடியும். மனித சமுதாயத்தை, வளர்த்து ஆனந்த வாழ்வை அளிக்கும்பணி எனக்குண்டு. வழிதவறியவர்களை வழிக்குக் கொணர்ந்து பாதுகாப்பளிப்பது எனது விரதம் ஏழைகள் துன்பங்களை நீக்கி, தேவையானவற்றை அளிக்கும் பணியிலே நான் விரும்பி ஈடுபட்டிருக்கிறேன். என்னை வணங்கி ஆராதிப்பவர்களை நான் நேரடியாகக் காப்பதால், நான் பெருமைப்படவும் இடமுண்டு. நான் எதிர்பார்க்கும் பக்திக்கு, நான் ஒரு வரைவிலக்கணம் வைத்திருக்கிறேன்; எனக்குப் பக்தியாருயிப்

பவர்கள் இன்பத்தையும் துன்பத்தையும்,இலாபத்தையும் நட்டத்தையும் சமநோக்கில் பார்க்கவேண்டும் (சமமாக மதிக்க வேண்டும்) என்பதே அது. அந்தவிதமாக நான் பக்தர்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டிருக்கையில், என்னை, யார் களங்கப்படுத்த முடியும்? கீழ்ப்பட்டவர்களே, புகழாலும் இகழாலும் பாதிப்படைபவர்கள். சாதுக்களுடைய வாழ்க்கைச் சரிதங்களில், அவர்களுடைய வாழ்வுமுறையைத் திரித்துக் கூறி, களங்கப்படுத்த முனைந்த சம்பவங்களையும் நீங்கள் வாசித்திருப்பீர்கள், எக்காலத்தும் எங்கேயும் இது, மகான்களுக்கு உரிய சவால்

எனது நோக்கத்தை, எனது தீர்மானத்தை நான் கைவிடமாட்டேன். நான் செய்வேன் என்பதும் எனக்குத் தெரியும். எனது செயற்பாட்டால், விளையும் புகழ், இகழ், மரியாதை, அவமரியாதை ஆகியவற்றை சமநோக்கிலே பார்ப்பேன். உள்ளார்ந்த நிலையில் நான் பாதிப்படையவில்லை. நான் வெளியுலகுக்காகவே செயற்படுகிறேன்.வெளியுலகுக்காகவும் நான் வந்திருப்பதை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவுமே நான் பேசுவது இயங்குவது எல்லாம்.

நான் ஓரிடத்தையோ ஒரு பெயரையோ கொண்டவனல்லன். எனது,உனது என்பது என்னிடமில்லை. எந்தப் பெயரில் அழைத்தாலும் நான் மறுமொழி பகர்கிறேன். நான் எங்கே அழைக்கப்படுகிறேனோ அங்கே போகிறேன். இதுதான் என்னுடைய முதல் விரதம். நான் இதுவரைக்கும் (1947—05—25) இதனை வெளிப்படுத்த முடியவில்லை. என்னைப் பொறுத்தவரை, உலகமானது எனக்கு, தூரமானதும் பிறிதானதும். மனித சமூகத்திற்காகவே நான் செயற்படுகிறேன். எவராயினும் சரி, என்ன முறையில் விசாரஞ் செய்தாலும் சரி, எவ்வளவு காலம் முயன்றாலும் சரி, எனது கீர்த்தியை (மகிமையை) விளங்கிக்கொள்ள முடியாது.

(அண்ணனாகிய) நீங்களே, எனது முழுமையான புகழை, அடுத்து வரும் வருடங்களில் காணப்போகிறீர்கள். பக்தகோடிகள், பொறுமையும் சகிப்புத்தன்மையும் உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

இந்த விபரங்கள் எல்லாம், உலகத்தவருக்கு, தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று நான் அக்கறையோ ஆவலோ கொள்ளவில்லை. இவ்வார்த்தைகளை எழுத வேண்டிய தேவையும் எனக்கில்லை, நான் மறுமொழி தராவிட்டால், நீங்கள் வேதனைப்படுவீர்கள் என்று எண்ணியே இதனை எழுதியுள்ளேன்.

பாபா

பின்னிணைப்பு—5

# இயேசுவும், சத்தியசாயிபாபாவும், நீங்களும்

ஆங்கிலத்தில் பாடியவர்; வண. றொபெட் ஈ. பைப்ஸ்
(தமிழாக்கம்· நவாலியூர் நா. சச்சிதானந்தன்)

1. இயேசுவும் பாபாவும் ஒருயிர் பாரீர்
கீழ்த்திசைதோன்றி மேற்றிசை சென்றது அவர்தம் போதனை
''உனை நேசிப்பது போற் பிறர்தனை நேசி''
இது ஆதார சுருதியோடான் மீக இசையாம்

2. மேற்கே இன்றைய நற்றினமதற்கு
வழிகோல பாபா இயேசுவை அனுப்பினார்
தலையிற் கிரீடத்தோடாட்டின் ஒலியுடன்
பாபா வருவார் எமைத் துயிலெழுப்ப

3. தன்பாட்டிசைக்க வழியெது அமையுமோ
அப்போதுன்னைக் குழலாயமைப்பார்
இயேசு தாமும் கிறிஸ்து ஆவதற்குச்
செய்த தியாகம் யாம் செய்தல் வேண்டும்

4. மனத்தின் மாசு மறைந்திட முதற்கண்
முயற்சிமேல் முயற்சியோடு காலமும் சேரப்
பூரண ஒளியுடன் பாபா வாழ்ந்திடும்
உமதிதயத்தில் ஆனந்தம் திளைக்கும்

5. பிதாவின் ஆணையில் வாழ்ந்தனர் இயேசு
புதிய உலகம் சிருஷ்டிக்க வந்த
இயேசுவின் உருவத்தை நாம் கண்டாலும்
உள்நின்றியங்கினர் பாபாவன்றோ?

6. பிதாவன்றி நானல்ல என்றார் இயேசு
அவரை ஆன்மீகக் கண்ணாற் காண்பீர்
அப்போது நீவிர் பிரம்மத்தின் ஒளியிற்
தியானிக்கும்போது ஆன்மா விழிக்கும்

7. ஓம் எனும் நாதத்தில் நீவிர் ஒளிர்வீர்
அறிபவர் நீரே அறியும் பொருளும் அறிவும் நீரே
இது கண்டார் இயேசு இருபதோடாறில்
பாபாவே கிறிஸ்து பரமாத்மா என்றனர்

8. மனமுடைந்திழந்தோர்க்கு நம்பிக்கையூட்டக்
காணிக்கையாகும் உண்மை அன்பு
பாபா கிறிஸ்துவின் சாராம்சம் அன்பே
செயலில் அன்பு அது சேவையின் பெறுமதி

9. அவருக்கு ஆசையோ, தேவையோ இல்லை
உலகிற்கு அவர் ஓர் தெய்வ ஒளியாம்
கிறிஸ்து அன்பர் இதயம் இறைவன் உறைவிடம்
நெஞ்சத்திற் கொள்வார் பாபாவின் வார்த்தை எக்கணத்திலுமே

10. சாந்தியென்பதுவே பாபாவின் பரிசு
துன்பத்தோடிடரும் விடுபட்டோடி
மக்கள் வாழத்தந்தார் கிறிஸ்துவின் மூலம்
மனத்திருள் போக்க மாதவம் செய்வீர்

11. மனிதகுலத்தில் ஒரு சிலர்க்காயினும்
நலன் கருதாமற் பெருமை கொள்ளாமல்
இறையுணர்வோடு சேவையாற்றின்
உம்முள்ளேயுணர்வீர் உண்மைப் பொருளை

12. உமைத்தவிரமற்றோர்கள் தீயர் என உலகுக்குக்
காட்டமுனையாதீர் தேநீர் கோப்பி அருந்தாமல்
ஒழுக்கமெனும் குவளையில் ஒவ்வொரு காலையும் பானம் அருந்துவீர்
மற்றையோரின் தீச்செயல்கள் உம்மைப் பித்தராக்கிவிடும்

13. நேர்மையெனும் காற்றைச் சுவாசித்து
இறவாமையென்னும் உணர்வை மதிய உணவாகக்கொண்டு
தீயதிலும் நல்லதையே நீ கண்டு
உன்னைச் சபிப்போரையும் ஆசிர்வதித்தால் என்றும் குழப்பமில்லை

14. கிறிஸ்துவைப்போல் வாழ்வை விளையாட்டாகக் கொள்க
இழந்தவர்களைக் காக்கச் சிலுவையிற் சில நாள்
வாழ்வைத் துறந்த கர்த்தரைப்போன்றே பாபாவும்:
உரிய பெறுமதி செலுத்தினால் நீங்களும் இயேசுவாகலாம்

15. உணர்விலும் உடலிலும் ஆன்மாவிலும் உயிர்ப்படைக
உண்மைப்பொருள் - பாபா - அதுவே எம் குறிக்கோள்
யேசுவைப் பின்பற்றாவிடில் கிருஷ்ணனைப் பின்பற்று
ஆனால் நீலவண்ண ஆயனுக்கு நீ குழலாக வேண்டும்

16. கிருஷ்ணனைப் பின்பற்றாவிடில் இராமனை ஒளியெனக்கொள்
உருவத்திற் காணாவிடினும் சீதைபோல் பக்தியுடன்
லக்ஷ்மணனைப் போல் தூய பணிவுடன்
பரதனின் தர்மத்தைப்போல் சத்துருக்கனின் வீரத்துடன் பற்றுக

17. இராமனைப் பற்றாவிடின் சொராஸ்ரரைப் பற்றுக
ஆனால் இருளிலும் இதயத்தில் ஒளியே வேண்டும்
இருள் கழிந்ததும் இரவி யை வழிபடு
வேறெதுவுமின்றி உள்ளம் ஒளிரட்டும்

18. குழப்பமும் பதற்றமும் கவனத்தைத் திருப்பினால்
இரவியை விடுத்து மதிதனை வணங்குக
சந்திரனின் மென்மையான ஒளிக்கதிர்
உங்கள் இதயத்திற்கு இதம் அளிக்கும்

19. சந்திரனை விரும்பாவிடின் சக்கரத்தை நாடுக
காற்றாடியந்திரம் போல் அது சுழலும்
ஒவ்வொரு காரணத்தின் காரியத்திற்கும்
செயலுக்கும் நியதிக்கும் ஏற்ப அது சுழலும்

20. இவையெல்லாம் சரிசெய்யும் சக்கரம்
தர்மத்தைச் சரிவரக் கடைப்பிடித்தாலே
சக்கரம் வேண்டாவிடில் தாரகையை நினையுங்கள்
அது பிறையைவிட்டு என்றும் விலகாது

21. நட்சத்திரமும் பிறையும் உமக்கு வேண்டாவிடின்
சிறு பொழுது அனுமானை வணங்கிடுவீர்
தாம் விரும்பும் மாத்திரமே உடல் மாற்றம் அடைவதனை
இராமகிருஷ்ண பரமஹம்சர் தன்னுள்ளே உணர்ந்திருந்தார்

22. வானரத் தெய்வத்தை வழிபட நீர் விரும்பாவிடின்
மரத்தையோ செடியையோ நீர் நடக்கும் நிலத்தினையோ
ஆற்றையோ கடலையோ வானத்தையோ வணங்கிடுவீர்
உடலழியும் முன் உமது வாழ்வினை நீர் தேடிடுவீர்

23. இயற்கையை வணங்காவிடின் ஷேர்தியை வணங்குக
அஃதெனில் நீவிர் இன்றைய கடவுளுக்கண்மையில் வருவீர்
ஷேர்திக்குச் சாதிபேதமென்றில்லை யாவும் சமமே
எம் கடமை வெவ்வேறாயினும் உலகம் வாழ்தல் வேண்டும்

24. மனதை ஒடுக்கிட எதைநீர் தேர்ந்தாலும்
மற்றைய தெய்வீகப் பெயரெதுவும் சிறந்ததுவே
இறைவனை உருவத்தில் உயிருடனே காண்பதாயின்
இக்காலம் பிறந்த நீர் அதிஷ்டத்திற்குரியவரே

25. ஐந்தடி உயரத்தில் ஓர் மனிதர் இருக்கின்றார்
இவரையே இயேசு முன்னொருகாற் கூறிவைத்தார்
சடை கொண்ட முடியுடனும் வெள்ளாட்டின் குரலுடனும்
வீசும் வலதுகரம் வரவேற்கும் புன்னகையால்

26. அன்பு வழிந்தோட அவர் கண்கள் ஒளிவீசும்
எம்மை வழிப்படுத்த எமை வளைப்பார், முறிப்பார் வடிவமைப்பார்
எங்கும் நிறைதெய்வம் அவரே ஆகி நிற்பார்
எம்முன்னே அவர்வாழ நாம் அவரே ஆகிடுவோம்

27. இதயத்தில் அன்புடன் அவர் பெயர் கூறிடுவீர்
ஆசை விடுத்து அவர் பகுதியாய் வாழ்வீர்
தம்பெரும் விருப்பினால் உலகை மாற்றிட
அவர் வழிவாழ்ந்து அவர் முத்தெனவும் ஆவீர்

28. இதுவேயிறுதியென இக்கணம் போற்றுதும்
பாபாவை எண்ணி முகத்திரை நீக்குதும்
அவரை உணர்ந்து, சுவாசித்து, ருசித்து
உண்மைப் பொருளாய் அவரை நோக்குதும்

29. தொடர்ந்து முயலின் மாறுதல் கிட்டும்
இறுகிய இதயம் பாபாவால் இழகும்
அன்பைத் தவிர்ந்த வேறேதும் இல்லையேல்
கவலையறு உலகில் எம்வசம் இழக்கலாம்

30 உம்முளேயுள்ள உண்மையை நம்புதும்
உமது ஈடேற்றம் பாபாவின் விருப்பு
மனோதிடம், விசுவாசம் முற்றாகக் கொள்ளுதும்
பணிவே கிறிஸ்துவின் பண்பென உணருதும்

31. பிரம்மத்தின் ஒளியினை அப்போ வளரக் காண்பீர்
ஆண், பெண், குழந்தை அவரவர் இதயத்துள்
வானத்தின் பெரிய பரப்பு அஃதாக
நீலவண்ணனாய் பாபா உறைவார்

**பின்னிணைப்பு—6**

# சாயி சரவணமுத்து அருளிய சில தழுவற்பாடல்கள்

1. ஆயினை, மனையை, சேயினை, பிதாவை
அனத்தினை, தனத்தினை, விரும்பும்
பேயினை, மறந்து; நோயினை, மூப்பை,
பிறப்பினை, இறப்பினை, துடைப்பீர்
ஆயனை, முளரிவாயனை, எங்கள்
அமலனை, கமலனைப் பயந்த
தாயனை, நெடியமாயனை, வடபால்
தரங்கனை, அரங்கனை தொழுமே

2. தானே தனக்கு ஒத்ததாள்—தாமரைக்குச் சரண்புகுந்து
ஆள் ஆனேன்; இனி, உன் அருள் அறியேன் எமது—
ஸ்ரீ சத்திய சாயி பகவனே
தேனே! என் தீவினைக்கு ஓர் மருந்தே! பெருந்தேவர்க்கு எல்லாம்
கோனே, புட்டபர்த்தியிலே சித்திராதிக்கரையினிலே அமர்ந்தவனே

3. காய், இலை தின்றும், கானில் உறைந்தும், கதிதேடித்
தீயிடை நின்றும், பூவலம் வந்தும், திரிவீர்காள்!
தாயினும் அன்பன் — பூமகள் நண்பன் எங்கள் சாயீசன்
பாயல் முகுந்தன் சிவசாயியீசனை பணிவீரே

4. சாயீசனையே செவிகள் கேட்க; புட்டபர்த்தி பிரசாந்தி
ஈசனையே சென்னி இறைஞ்சிடுக; நேசமுடன்
சிவசக்தி ஈசனையே காண்க இகண; இணர்கொள்காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துக எம்வாய்

5. தேடுகின்றனை, ஐம்பொறிகளுக்கு இரை;
தேடியும் கிடையாமல்,
வாடுகின்றனை; வீடு சென்று, என்று இனி
மருவுவை? - மட நெஞ்சே
ஆடுகின்றிலை, அழுகிலை, தொழுகிலை
சாயீசனை கரம் கூப்பி
பாடுகின்றிலை, நினைக்கிலை — பதின்மர்த்தம்
பாடலின் படியாயே

6. காணாத புதுமை பல காட்டுவான்; கட்செவிகள்
எட்டையும் எடுத்து ஆட்டுவன்:
கடல் பருகுவன் பெரிய ககன வரையை சிறிய
கடுகினில் அடைத்து வைப்பான்:
வீண் ஆரவாரம் மூதண்டம் உறவிளைவிப்பன்
இரவு பகல் மாறாடுவன்:
விண்ணையும் மறைப்பன்; எழுமண்ணையும் எடுப்பன்
இவை விளையாடும் வித்தை அன்றால்
நீள் நாகணைப் பள்ளியில் திரு அரங்கத்து
நெடிது ஊழி துயிலும் பிரான்
நெற்றிக்கண் ஆனவனை, நான்முகனை, வாசவனை,
நிமிரும் இருசுடரை முதலாச்
சேண் நாடர் யாவரையும் அடிமைகொண்டு அவர்அவர்
சிரத்தில் பொறித்து விட்ட
திருச்சக்கரப் பொறி இலாத கடவுளைத்
தேடி இனி முன் விடுவனே

7. ஆனந்தமாய், 'அரங்கற்கே உயிர்கள் அடிமை' என்னும்
ஞானந்தனால் ஐம்பொறிவாயில் சாந்தி, நல்தாளை பற்றி
ஈனம்தரும் பற்று அற்று, என்றும், யான் எனது என்னும்
அபிமானம் தவிர்ந்து இருப்பார்க்கு- இதுபோல்- இல்லை மாதவமே

8. மா தவங்கள் என்று ஓது அவங்களின்
மருவு சிவன் என்றொருவன் நீ! பெரும்
பூதம் அல்லை இந்திரியம் அல்லை ஐம்
புலனும் அல்லை நல்புத்தி அல்லை காண்
சீதரன், பரந்தாமன், வாமனன்
திரு அரங்கனுக்கு, அடிமை நீ: உனக்கு
எது இல்லை என்று அறி: அறிந்தபின்
ஈதின் மா தவம் இல்லை எங்குமே

9. ஒரு பொருள் அல்லேன், இருவினை உடையேன்,
உனது தொண்டு எனும் துறை குளித்து, உன்
பெருகு தண்ணளியின் பாசம் தொட்டு இழிந்து
பெரியது ஓர் முத்தியான் பெற்றேன்
திருவும், மா மணியும், சங்கமும், ஏந்தி
செய்ய தாமரை பலபூத்து
கருநிறம் உடைத்தாய்: சித்திரா நதிபொரு தரங்கம்
கலந்து ஓர் கருணை வாரிதியே

10. புண் ஆர் உடற் பிறவி போதும் எனக்கும், உனக்கும்
எண்ணாது இருந்தது இனிப்போதும் சாயீசா
குழற்கானாய் புட்டபர்த்தி பிரசாந்திக்கோயிலாய்:
நின் பொற் கழற்கு ஆளாய் நின்றேனைக்கா

11. நம்பி நின்றேன் நின் சரணாரவிந்தத்தை நல்நெஞ்ச என்னும்
செம்பின் இன்றே பொறித்தேன், உனக்கு ஆள் என்று
தெய்வக் குழாம்
பம்பி நின்தேசு எறிக்கும் பதம் காணப் பதறுகின்றேன்
கொம்பின் இன்தேன் சொரியும் சோலை மாமலைக்
கொற்றவனே

12. கொண்ட மருந்தும் கடைவாய் வழி உக கோழை வந்து
கண்டம் அருந்துயர் ஆம்போது உன்பாதம் கருதறியேன்
வண்டு அமரும் துளவோனே தென்சோலை மலைக்கு அரசே
அண்டம் அருந்தும் பிரானே—இன்றே உன் அடைக்கலமே

13. பொருள் ஆசை, மண் ஆசை, பூங்குழலார் போகத்து
இருள் ஆசை, சிந்தித்து இராதே, அருளாளன்
அர்ச்சித்துப் பிரசாந்தி நிலையமாம் புட்டபர்த்தி சாயி ஈசன் தாள்
இச்சித்திருப்பது யாம் என்று

14. ஆதியிலே சாயி பூவும் பிஞ்சுமாகி
அதில் ஒரு ஆதியும் சோதியும் இருந்தால்
சாலவே மாந்தர் எல்லாம் தன்குருவென்றே வாழ்வர்
ஆதியிலே சாயி இல்லை என்றால்
இங்குவந்து மாந்தர் எல்லாம் உறைவர் உண்டோ
கண்டாய் இந்த வையகத்தில்.

## பின்னிணைப்பு—7

# ஸ்ரீ சத்திய சாயி சேவா பாலவிகாஸ் மாணவருக்கு உதவக்கூடிய சில, புராணப் பின்னணியுடைய கதைகள்:

1. உலகத்தை உண்டு, ஆலின் இலையில் துயிலுதல்: பிரளய கால வெள்ளத்திலே ஏழு உலகங்களையும் வயிற்றில் அடக்கி, ஓர் ஆலின் இளந்தளிரின் மேலே, ஒரு குழவி ஆய், மெள்ளத்து"யின்றான்; பிறகு, உமிழ்ந்து அண்டமும் உயிரும் மீண்டும் தோன்றச் செய்தான்.

2. மார்க்கண்டேயனுக்குப் பிரளயத்தில் உலகம் காட்டியது: நீண்ட ஆயுள் பெற்ற மார்க்கண்டேய முனிவனுக்குப் பிரளயக் காட்சியைக் காணுமாறு அனுக்கிரகித்து, பின்னர், பிரளய வெள்ளத்தில் ஆலில் இலையில் அறிதுயில் அமர்ந்த பெருமான் முன்பே அழிந்து போன உலகங்களையும், சராசரங்களையும் தன் திருவயிற்றினுள்ளே அம் முனிவனுக்குக் காட்டியருளினன்.

3. உந்திமேல் நான்முகனைப் படைத்து, உலகமும் உயிர்களும் தருதல்: உலகத்தைப் படைப்பதற்காக, தன் உந்தித் தாமரையின் மேலே நான்முகனைத் தோற்றுவித்து, வேதங்களையும் அவனுக்குக் கொடுத்தான். அந்நான்முகன் சங்கரனையும், பிற தேவதைகளையும், உலகங்களையும், உயிர்களையும் படைத்தான்.

4. கடல் கடைதல்: தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்த போது இரு திறத்தார்க்கும் ஒப்ப உதவியாய் நின்று,கடல் சுழன்று கதறி நுரை சிந்த, மந்தரமலையைச் சுற்றிய பாம்பின் உடல் தேயக் கடைந்தான். அச்சமயம் கூர்மம் ஆகி, மலை தாழாது தாங்கியும் நின்றான். கடலிலிருந்து அமுதம் எழுந்ததோடு, நஞ்சு, திருமகள், சந்திரன், கற்பகம் முதலிய வேறு பல பொருள்களும் தோன்றின. திருமால் பெண்மை வடிவுகொண்டு, அமுதத்தைக் கவர்ந்த அசுரரிடமிருந்து மீட்டு, தேவர்கள் அமுதத்தை உண்ண உதவி செய்தான். நஞ்சைச் சிவபெருமான் அமுது செய்தான். திருமகளைத் திருமால் மார்பில் கொண்டான், கற்பக விருட்சம் முதலியவற்றைத் தேவர்கள் அடைந்தனர்.

5. தேவாசுரயுத்தம்: தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நிகழ்ந்த பெரும் போரில், திருமால் தேவர்களுக்காகப் புள் ஊர்ந்து, ஆழி ஏந்தி, அசுரர்கள் அலமந்துவீயப் பொருதான்.

6. திருமால் உபேந்திரன் ஆனமை: ஒரு சமயம் திருமால் காசியப்ப முனிவனது மனைவியாகிய அதிதி வயிற்றில் இந்திரனுக்குத் தம்பியாய்ப் பிறந்து, உபேந்திரன் எனப்பெயர் கொண்டு, தேவலோகத்தில் இந்திரனது அருகில் இருந்து, அவனது துயரைத் தீர்த்து, எல்லா உயிர்களையும் பாதுகாத்தனன்.

7. மது-கைடபர் மாண்டது: வலிமையால் எழுந்த மது-கைடபர்களால் துன்புற்று, விண்ணோர் பரவ, அவர்களைக் கோபித்து, அழித்தான்.

8. வெள்ளி நாட்டம் கெடுத்தது: திருமால் குறள் வடிவத்தில் சென்று, மாவலியிடம் மூவடி மண் வேண்டியபோது, மாவலியினது அருகில் இருந்த சுக்கிராசாரியர், 'இவனுக்குத் தானம் கொடுத்தலாகாது; அழிவு வரும்' என்று தடுத்தார். அவரது பேச்சை மறுத்து, மாவலி தானம் வழங்கி, நீர் வார்த்தபோது, மாவலியின் கமண்டல நீர் விழாதபடி சிறிய வடிவுடன் சென்று சுக்கிராசாரியர் தடுத்தார். வாமனவடிவம் கொண்ட பெருமான் கைத்தருப்பையால் கமண்டலத்தின் துவாரத்தைக் குடைய, சுக்கிரனது ஒரு கண் சிதைவுற்றது.

9. கஜேந்திரனுக்கு முத்தி அளித்தல்: பொய்கையில் இறங்கி, நாள் மலர் பறித்து. தினந்தோறும் தொழுகின்ற யானையை ஒரு நாள் அங்கு வாழ்ந்த கொடிய முதலை பற்றியது. அதற்கு வருந்தி, 'உன்

சரண் அன்றி, வேறு புகலிடம் எதுவும் இல்லை' என்று கதறி, 'ஆதி மூலமே!' என்று அழைக்க, திருமால் தனது ஆழிப்படையால் முதலையைக் கொன்று, யானையை விடுவித்தான்,

10. துருவன் பேறு பெறுதல்: உத்தானபாதன் என்னும் அரசனுக்குச் சுநீதி என்னும் மனைவியினிடத்தில் பிறந்தவன் துருவன். சிங்காதனத்தில் மாற்றாந்தாயின் மகனான உத்தமன் தன் தகப்பன் மடியிலே இருந்ததைப்போல் தானும் இருக்க விரும்பியபோது சுருசி,வேறொருத்தியின் வயிற்றில் பிறந்த நீ அதற்கு உரியன் அல்லை' என்று தடுத்துவிட்டாள். துருவன் மிகவும் வருந்தி, தன் தாயிடம் அனுமதி பெற்று, அருகில் உள்ள ஒரு வனத்தில் சென்று, ஸப்தரிஷிகளின் வாயிலாக, துவாதசாட்சர மகாமந்திர உபதேசம் பெற்று, தவம் செய்தான். அம்மந்திரத்தின் மகிமையால் திருமாலின் திருவினைப் பெற்று, எல்லா நட்சத்திரங்களுக்கும், இருடிகளுக்கும் மேலான பதவிகளைப் பெற்றான்.

11. சிவபெருமான் கறைக்கண்டான் ஆனது: பாற்கடல் கடைந்த பொழுது எழுந்த விஷத்தைக்கண்டு, தேவர் முதலிய எல்லோரும் அஞ்சி ஓட, சிவபெருமான் அதனை உண்டு, எல்லோரையும் காத்தான். அவன் உண்ட விஷம் கழுத்தில் தங்கி, அவனது கழுத்தைக் கருமை ஆக்கியமையால், கறைக்கண்டன் ஆனான்.

12. சிவன் பிறை சூடியது: தக்கன் சாபத்தால் கலைகள் தேயப் பெற்ற சந்திரன் ஒரு கலையோடு சிவபிரானைச் சரணம் அடைய, அப்பெருமான் அருள்புரிந்து, அந்த ஒற்றைக் கலையைத் தலையில் அணிந்து,மீண்டும் கலைகள் வளர்ந்து வரும்படி அருள்புரிந்தான். திருப்பாற்கடல் கடைகையில் தோன்றிய சந்திரனைத்தலையில் சூடினான் என்றும் கூறுவர்.

13. சிவன் கங்கை தரித்தது: கபில முனிவனின் சாபத்தால் சாம்பலான தம் முதாதைகளை நற்கதியில் சேர்க்கும் பொருட்டு, பகீரதச் சக்கரவர்த்தி தவம்புரிந்து, ஆகாயகங்கையைப் பூவுலகிற்குக் கொணர்ந்தான். மேலிருந்து இறங்கும் அதன் வேகத்தைத் தாங்கும் வல்லமை பூமிக்கு இல்லாமை பற்றிச் சிவபிரானைப் பிரார்த்திக்க, அவனது வேண்டுகோளின்படி' சிவபெருமான் கங்கையைத் தன் முடியில் ஏற்று, சிறிது சிறிதாகப் பூமிக்கு வரவிட்டான்.

14. சிவன் அரவம் பூண்டது: தாருகாவனத்து இருடிகள், ஒரு சமயம், சிவபிரானைக் கொல்லவேண்டி, அபிசார யாகம் இயற்றி, அத்தீயிலிருந்து தோன்றிய பாம்புகள், பூதங்கள், மான், புலி, முயலகன்,

வெண்தலை முதலியவற்றைச் சிவபெருமான் மீது ஏவினர். அவன் நாகங்களை ஆபரணமாகவும், பூதங்களைத் தன் கணங்களாகவும் கொண்டு, மான், புலி ஆகியவற்றை உரித்து அவற்றின் தோலைப் போர்த்து, முயலகனையும் அடக்கி ஒடுக்கினான்.

15. சிவபெருமான் திரிபுரம் எரித்தது: பொன், வெள்ளி, இரும்புகளால் ஆகிய மூன்று அரண்களை உடைய மூன்று அசுரர்கள் அந்த அரண்களோடே பறந்து, பல இடங்களையும் பாழாக்கி, தேவர் முதலிய யாவர்க்கும் பெரும் துன்பம் இழைத்து வந்தனர். தேவர்களின் வேண்டுதலுக்கு இரங்கி, சிவபெருமான் பூமியைத் தேராகவும், அத்தேவர்களையே படைக்கலம் முதலியனவாகவும் கொண்டு, போருக்குப் புறப்பட்டனன். தேவர்கள் தங்கள் தங்கள் வல்லமையை நினைந்து அகங்கரிக்க, அவர்கள் உதவியை ஏற்காமல், சிவபிரான் தனது சிரிப்பினாலேயே முப்புரங்களை எரித்தான்

16. சிவன் பாண்டரங்கம் ஆடியது: திரிபுரம் எரித்த காலத்தில் தனது தேரில் நின்ற பிரமன் காணுமாறு பைரவ வடிவமாகிய சிவபெருமான் வெண்ணீற்றை அணிந்து, பாண்டரங்கக் கூத்து ஆடினான்.

17. இராவணன் வெள்ளிமலை பறித்தது: இராவணன் அளகாபுரி சென்று. குபேரனை வென்று, மீளுங்காலத்து, அவன் ஏறிவந்த புஷ்பகவிமானம் சிவபிரான் வீற்றிருக்கும் கைலாயத்தில் தடைப்பட்டது. உடனே இராவணன் வெகுண்டு, அம்மலையையே பறித்து எறிய முற்பட்டான். அப்பொழுது சிவபெருமான் தன் காலால் அழுத்த, அம்மலையின் கீழ் அவன் அகப்பட்டு, மீள வழி அறியாது, சாமகானம் பாடி, சிவபிரானது அன்புக்குப் பாத்திரனாகி, விடுதலை பெற்றான்.

18. இராவணனைக் கார்த்தவீரியன் வென்றது: இராவணன் திக்குவிசயம் செய்த காலத்து, கார்த்தவீரியனது மாகிஷ்மதி நகரத்திற்கும் சென்று, போர்செய்ய முயன்றான். கார்த்தவீரியன் நர்மதைக் கரையில் நீராடுகின்றான் என்ற செய்தி அறிந்து, அங்கே தன் சேனைகளுடன் சென்று எதிர்த்தான். ஆயிரம் புயமும் பெரு வல்லமையும் படைத்த கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனைப் பிடித்துத் தன் கைகளால் புடைத்து, தன்நகரில் கொண்டுசென்று, சிறை வைத்தான். பின்னர் இச்செய்தி அறிந்த இராவணனின் பாட்டனார் ஆகிய புலஸ்தியர் கார்த்தவீரியனிடம் சமாதானம் பேசி, இராவணனை விடுவித்தார்

19. கோவலில் நடந்தது: முதலாழ்வார்களாகிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும், ஒரு சமயம் சூரியாஸ்த மனத்தின் பின், திருக்கோவலூரில் ஓர் இல்லத்தின் இடைகழியில், சந்தித்தார்கள். அப்பொழுது பெருமானும் அங்கு எழுந்தருளி அவர்களிடையில் வர, பெருமானது சோதியைக்கண்டு மூவரும் பாமாலை புனைந்து ஏத்தினர்.

20. பட்டர்பிரான் கிழி அறுத்தது: பாண்டியனது பேரவையில் வித்தியாசுல்கமாகக் கட்டி வைத்த பொற்கிழியை, பெரியாழ்வார், 'நாராயணனே ஆதிபரன்' என்று மறை உரைத்து அறுத்தார்.

21. ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையை உவத்தல்: பெரியாழ்வாரின் பெண் கொடியாகிய ஆண்டாள் நாராயணனையே தன் நாயகனாக வரித்து, அப்பெருமானுக்குச் சாத்தத் தம் தந்தை கட்டி வைத்திருக்கும் மாலையை, அவருக்குத் தெரியாமல், நாள்தோறும் அணிந்து, கண்ணாடியின் முன்னால் நின்று, தன் அழகை நோக்கி, பின், கூடையில் கழற்றிவைத்து வந்தாள். ஒரு நாள் கோதை மாலை சூடியிருத்தலைக் கண்ட தந்தை, அம்மாலை கோதை சூடியதனால் தூய்மை இழந்தது என்று எண்ணி,வேறு மாலை கட்டிப் பெருமானுக்குச் சமர்ப்பித்தார். ஆனால், பெருமானோ பெரியாழ்வாரது கனவில் தோன்றி, 'கோதை சூடிக்கொடுத்த மாலையே தனக்கு உவப்பாவது' என்று தெரிவித்தான். இதனால் ஆண்டாள், 'சூடிக்கொடுத்தாள்' என்னும் திருநாமம் பெற்றாள்.

22. தொண்டைமானுக்குச் சங்கு ஆழி கொடுத்தது: தொண்டைமான் சக்கரவர்த்தி அரசபாரம் வகித்தும், பக்தியில் சிறந்து, தவவொழுக்கமுடையவனாய், திருவேங்கடப் பெருமானிடம் பேரன்பு கொண்டிருந்தான். அவன் திருமலையில் இருத்தலை உணர்ந்த பகைவர்கள் அவனது நாட்டைக் கைக்கொள்ள, அவன் அது குறித்துப் பெருமானிடம் முறையிட்டான். அவனுக்காகத் திருவேங்கடமுடையான் தனது சங்கு சக்கரங்களை அவனுக்குக் கொடுத்து, 'இவற்றைக் கொண்டு பகைவரை வென்றிடுக' எனப் பணித்தான். அவ்வாறே தொண்டைமானும் பகைவரை ஓட்டி, தன் அரசை நிலைபெறச் செய்தான்.

**பின்னிணைப்பு—8**

# சாயி பேசுகிறார்

## (தமிழில் நூலாசிரியர்)

1. வேதபுருடனே புருஷோத்தமன், அதாவது உத்தமபுருடன். ஏனென்றால், அவனே, தன்னிலிருந்து தனது விருப்பப்படி (திட்டப்படி அல்லது சங்கல்பத்தின்படி) தன்னையே பிரபஞ்சமாகவும் அதன் கூறுகளாகவும் வெளிப்படுத்தினான் (படைத்தான்). அவனைத் தவிர்ந்த ஒன்றும் இங்கு இல்லை. ஆதலால், நீங்கள் எப்படி அவனைத் தவிர்ந்த வேறு பொருளாகலாம்? இந்த விடயங்களில், நம்பிக்கையே முதல் வர வேண்டியது. நம்பிக்கை முக்கியம். நீ தெய்வம் என்பதை நீ நம்பவேண்டும். அதன் பின்பு, நீ தெய்வத்துவ இறைமை அந்தஸ்தோடு நடந்து கொள்ளவேண்டும். அப்பொழுது, உனக்கு தெய்வானுபூதி கிட்டும். அதாவது அந்த அனுபவம், அந்தத் தரிசனம், அந்த விளக்க உணர்வு, அந்த விழிப்புணர்வு, அந்த ஆனந்தம், உனக்குக் கிட்டுகிறது. அதன் விளைவாக, என்றுமழியா, நித்தியானந்தத்தில் நீ லயித்துக்கொள்கிறாய்.

2. தெய்வமொன்றே, அதற்கன்னியமாக வேறெதுவுமில்லை என்று கூறிக்கொண்டு, இந்த கிரியைகள் மூலமாக ஒருவரையே நீங்கள் அங்கீகரித்தாலும், உங்களுடைய புலன்கள், உங்களுடைய புத்தி, உங்களுடைய மனம், (அதனுடைய ஆசைகள்) எல்லாமும் பலதையே நாடியோடுவதில் அக்கறையாக இருக்கின்றன; ஒன்றினை நாடுவதாக இல்லை. இதுதான், பலயீனர்கள் மேலும், அறிவிலிகள் மேலும், வலையை வீசுகின்ற மாயையாகும். பன்முகப்பட்ட புலன்களின் பேராசை வழிச்செல்ல ஒருவனை, இந்த மாயை உந்துகிறது.

3. தன்னையே கடவுளாகவும் படைப்பாகவும் உருவகப்படுத்தும், எங்கும் பரந்த பூர்ணப்பொருளை, அந்த ஒன்றினை உணர்வதற்கு (அடைவதற்கு) சேவையைத் தவிர பெறுமதி கூடியதும் பலன் கூடியதுமான ஒழுக்கம் வேறொன்றில்லை. சகஸ்ரநாமார்ச்சனையில் உள்ள 1008 நாமங்களும் ஒருவரையே சென்றடைகிறது. ஆயிரம் முகங்கள் (மக்கள்) உடைய சமுதாயத்தின் ஆயிரம் நாமங்களும் ஒருவரையே குறிக்கிறது. அந்த ஒரு கடவுளே ஆயிரம் கதாபாத்திரங்களிலும் விளையாடுபவர். ஆயிரமுடம்புகளில் உள்ளடக்கப்பட்டவர்போல அந்த ஒரு கடவுள் தோற்றுகிறார். நீங்கள் உணரவேண்டியதும், வாழ்வில் அதிவிலையுயர்ந்த பொருளாக பேணவேண்டியதும் இந்த உண்மையைத் தான்.

(i) The Vedapurusha is the Purushottama, the Supremest purusha, for by his will, he manifested himself as cosmos and its components, out of himself. There is nothing that is not he. So how can you be different? In these matters, faith comes first. It has to. Believe that you are Divine. Conduct yourselves in accordance with that sovereign status. Then you will be blessed with the Anubuti, the experience, the vision, the realisation, the awareness, the bliss and as a result you are merged in that everlasling Ananda.

(ii) Though you are acknowledging only One in all these rites, proclaiming the one Advaitic Divine, your sense and your intellect and your mind with its pack of desires insist on running after many. This is the Maya that casts its enchantment on weak and ignorant men. It urges man towards, wild prolific greeds of the manyfaced senses.

(iii) To realise the one universal absolute which personalises itself into God and creation there is no discipline more valuable and more effective than SEVA. All these 1008 names of the Sahasranamarchana reach the One. All the 1000 names of thousand-faced soceity connote only the one God that plays in those 1000 roles. The one appears as if it is enshrined in the 1000 bodies. This is the truth you have to realise and cherish as the most precious in life.

## பின்னிணைப்பு—9

### சாயிபாபா, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரது கருத்துக்கள் அடங்கிய கட்டுரை (நூலாசிரியர்)

# மனம்

*பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா கூறுவார்:–* Watch your Words Actions, Thoughts, Character, and Heart என்று. இதன் அர்த்தம்,

Watch your Words — உனது வார்த்தைகளைக் கவனி;
Watch your Actions — உனது செயல்களைக் கவனி;
Watch your Thuughts — உனது எண்ணங்களைக் கவனி;
Watch your Character — உனது நடத்தையைக் கவனி;
Watch your Heart — உனது இதயத்தைக் கவனி;

என்பதாகும். இங்கு Watch என்ற சொல்லில் உள்ள ஒவ்வொரு எழுத்தும், இந்த ஐந்து காரியங்களது ஆங்கிலச் சொற்களின் முதலெழுத்துகளாக அமைகின்றன. இந்த ஐந்தினுள் நடுவில் அமைந்திருக்கும் Thoughts எண்ணங்களே முக்கியம் கூடியது. ஏனென்றால், எண்ணத்திலிருந்தே, எமது சொல், செயல், நடையுடை பாவனை (Character) மற்றும் உணர்வுகள் (Heart) வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த செயற்பாடுகள் மனத்திலேதான் குடிகொண்டுள்ளன. கள்ளன் ஒருவன் உனது வீட்டுக்குள் உனக்குத் தெரியாமல் பதுங்கிப் பதுங்கி வருகிறான். நீ மட்டும் விழிப்பாக இருந்தால், கள்ளனைக் கண்டிடுவாய் நீ கண்டுவிட்டாய் என்று, கள்ளன் அறிந்தானென்றால், ஒரே ஓட்டம் பிடித்து விடுவான். அதேபோல் எண்ணங்கள் உனது மனதில் வருகிறபோது. அவற்றைக் கவனித்தால் (Watch), அவைகள் ஓடிவிடும். நீ உள்பொருள், சத்தியம் (Truth). நீ கவனித்தால், எண்ணங்கள் ஓடிவிடும். தீய எண்ணங்கள் மட்டுமல்ல, நல்ல எண்ணங்கள் கூட மனத்திலிருந்து அகற்றப்படவேண்டும். ஏனென்றால், நல்ல எண்ணங்களும், 'நான்', 'எனது' என்னும் உணர்வுகளையே வளர்க்கும். இந்த அகங்கார. மமகார உணர்வுகள் அறியாமையின்பாற்பட்டதுமட்டுமல்ல, துன்பத்தையும் தருகின்றன. நான், எனது எனும் உணர்வுகள் அகன்றால் தான், அதாவது சுயநலம் அகன்றால்தான், உள்பொருளாக இருக்கின்ற, சத்தியத்தை, அதாவது அன்பினை அடையலாம். சுயநலம் இருக்கும்போது அன்பு இல்லை. அன்பு இருக்கிறபோது சுயநலம் அதாவது நான், எனது என்னும் உணர்வு இல்லை.

ஜே. கிருஷ்ணமூர்த்தி சொல்லுகிறார்— நான், எனது எனும் உணர்வை வளர்க்கும் எண்ணங்களை கவனித்தலே, ஞானம் உதயமாகத் தொடங்குவதற்கு வழியாகும் என்று. ஏனென்றால், நான், எனது என்பது அறியாமையின்பாற்பட்டது. நான் எனது என்பதை வளர்க்கும் எண்ணங்களைக் கவனிக்கும்போது அவை நீங்குவதால், நீறுபூத்த நெருப்புப்போல் இருந்த ஞானம் பிரகாசிக்கும். இங்கு நீறு சுயநல எண்ணங்களுக்கும், நெருப்பு உள்பொருளாகிய ஞானம் அல்லது சத்தியம் அல்லது அன்புக்கும் உவமானம்.

இவ்வாறு, எண்ணங்களை அவதானித்து ஒதுக்கிக் கொண்டு போக, அடிமனத்து எண்ணங்கள் மனத்திரைக்கு வரும். அவற்றையும் அவதானித்து நீக்கிக் கொண்டிருத்தலே தியானம்—என்பது ஜே. கிருஷ்ணமூர்த்தியின் கருத்து. தியானித்தல் என்றால் சிந்தித்தல். இதனையொட்டியே, பகவான் சாயி தியானத்திலும் தியாகமே அதாவது சேவையே சிறந்ததென்று கூறுவதன் நோக்கம். சேவை என்பது நான், எனது எனும் எண்ணங்களை வளர்க்காது மற்றவருக்கு உதவி செய்தல். அதாவது பலனை எதிர்பாராது கருமம் ஆற்றல். நான், எனது எனும் எண்ணங்களை வருவிக்காது சேவை செய்யும்போது, அவை மனத்திரையில் எண்ணங்களை பதிப்பிக்காது. எமது நேரங்களை தன்னலமற்ற பொதுப்பணியில் ஈடுபடுத்தும்போது, தன்னலத்தை உண்டுபண்ணும் செயற்பாடுகளில் இருந்து நாம் விடுபடுகிறோம். அதனால், நான், எனது உணர்வுகளைத் தரும் எண்ணங்கள் பதிவதில்லை. ஞானமே வெளிப்பட்டுக்கொண்டு இருக்கும்..

ஜே. கிருஷ்ணமூர்த்தி கூறும் தியானத்தை நாம் மேற்கொள்ளும் போது, நமது மனம் வெறுமையாகும். மனம் வெறுமையாகிக்கொண்டு போனாலும், எம்மையறியாது இயல்பான எண்ணங்கள், தேவையேற்படும்போது, மனத்திரையில் உருவாகி, நமக்கு ஆகவேண்டிய கருமத்தை ஆற்றிவிட்டு ஓய்ந்துவிடும். ஆகவே ஒருவன் உயிர்வாழ்ந்து முடியும்வரை எண்ணங்கள் இருக்கலாம். ஆனால், அவை அவனைப் பந்தப்படுத்தா.

பொதுச் சேவையானது, நான், எனது எனும் உணர்வுகளை உண்டுபண்ணாத அளவுக்கு, பிறர்பால் உள்ள அன்பின் நிமித்தம் செய்யப்படுமானால், அது வரவேற்கப்பட வேண்டியது. ஏனென்றால், சேவை செய்பவனும் சேவையைப் பெறுபவனும் நன்மை அடைகிறார்கள்.

உலகம் எங்கு பார்த்தாலும் அழிவுப்பாதையிலேதான் நிற்கிறது. வைத்தியசாலைகளில், நோயாளிகளுக்கு, எடுக்கவேண்டிய கவனம் எடுக்கப்படுவதில்லை. டாக்டர்கள், மற்றும் ஊழியர்கள் தம் நலத்தையே பேணுபவர்களாக இருக்கிறார்கள். கல்லூரிகளில், அதிபர் ஆசிரியர்கள், பிள்ளைகளுடைய எந்த நலனிலும் அக்கறையுள்ளவர்களாக இல்லை. திணைக்களங்கள் போன்ற இடங்களிலும், மக்களுக்காகப் பாடுபடும் தன்மையில்லை. ஒவ்வொரு இடங்களிலும், ஒரு சில தன்னலமற்ற பணியாளர்கள் இருப்பதனால்தான் இப்படியாகவாவது உலகம் ஓடுகிறது. இந்த அழிவுக்கு காரணம் என்ன? எல்லோரும் சுயநலமுடையவர்களாக இருக்கிறார்கள். நான், எனது எனும் உணர்வில் சிக்குண்டு போய் இருக்கிறார்கள். அன்பு மறைந்திருக்கிறது. எத்தனையோ குழந்தைகள், விபத்து மற்றும் வேறு காரணங்களால் அநாதையாக்கப் படுகிறார்கள். தாய் தந்தையர் இல்லாது தவிக்கும் குழந்தைகளுக்காக இரங்குவார் உண்டோ? சுயநலம் மூடி, மக்கள் கண்கெட்டு வாழ்கிறார்கள். இந்த நிலையில், நமக்கு முக்கியமானது, பொதுப் பணியேதவிர, மோட்சம் அல்ல. மற்றவருக்காக உணர்தல் என்பது இல்லாதபோது, மோட்சம் கிட்டிவிடுமா?

பகவான் சாயி சொல்லுகிறார்— ''எனது வாழ்வுமுறையே எனது போதனை. எனது போதனை அன்பாகும்'' என்று. அதிகாலை துவங்கி நள்ளிரவு வரை சாயி கருமம் ஆற்றுகிறார் என்றால், அது எம்மீது அவர்கொண்ட அன்பினாலே என்பது புலனாகிறது. அது மட்டுமல்ல, நாமும் தியாகிகளாகி சேவையாற்ற வேண்டும் என்பதும் கருத்தாகிறது. சாயியைப்போல், பற்றற்ற கருமமாற்றி ஞானமடைவதே நாம் செய்யக்கூடிய அதிசிறந்த ஆத்மீக சாதனையாகும். ஞானநூல்களைப் படிப்பதாலோ, மற்றும் அதனை விளங்கி வியாக்கியானம் செய்யும் வல்லமை பெறுவதாலோ நாம் ஞானமடைய முடியாது. அவையெல்லாம் ஞானமல்ல. ஞானம் என்பது துறவு அல்லது தியாகத்தோடு சம்பந்தப்பட்டது. இச்சைகளை ஒதுக்குதலே துறவு. இச்சைகளை ஒதுக்குதல் என்றால் அதன் அர்த்தம், மனத்திரையில் ஓடும் எண்ணங்களைக் கவனித்து, விரட்டி ஓட்டுதலேயாகும். எண்ணங்கள் அற்றுப்போனால் அவற்றால் வரும் செயற்பாடுகள் வெளிவரமாட்டா. நாம் பிரபஞ்சத்தில் காணும் பொருட்கள் அல்லது உயிர்கள் நமது மனதிலே தாக்கத்தை ஏற்படுத்துமானால், அவை எண்ணங்களைக் கொண்டுவரும். நாம் கண்டாலும், தொடர்பு கொண்டாலும் அவை தாக்கத்தை ஏற்படுத்தாத அளவுக்கு, நமது மனம் பக்குவப்பட்டிருக்க வேண்டும். அதாவது எதிலும் ஆசை கொள்ளாத மனம் வேண்டும்,

''இருப்பது ஒரு பொருளாகிய பிரமம். பிரமமே பிரபஞ்ச வடிவமெய்திக் காட்சியளிக்கிறது'' என்ற அத்வைத உண்மையை உணருவதால் அல்லது நம்புவதால், உலகப் பொருள்களில் ஆசை கொள்ளாத மன நிலை கைகூடும். பிரமமாகிய (சத்தியமாகிய) நானே, இவ்வளவு அழகான பிரபஞ்சப் பொருள்களாகவும் உயிர்களாகவும் இருக்கிறேன் என்ற வியாக்கியானம் அந்த மனநிலையை கூட்டும். இந்த நிலையில் மனத்திரையில் ஓடும் எண்ணங்கள் ஒவ்வொன்றாக கலைந்து விடுகின்றன. இந்தத் தியான நிலையே ஞான உதய நிலையாகும். இந்த நிலை தொடர்ச்சியாகப் பேணப்படும்போது சாந்தி ஏற்படுகிறது. அதுவே சச்சிதானந்தம்.

**பின்னிணைப்பு—10**

# 18 - 07 - 89 அன்று
# பகவான் ஆற்றிய உரையின் ஒரு பகுதி

## மூன்று விதமான "அத்வைதம்" :—

மனிதன் இன்று அவனது உண்மை நிலையான ஏகத்துவத்தை (அத்வைதத்தை) அனுபவிக்க வேண்டும். ''சமன்வயம்'' என்றால் எல்லோரும் ஒன்றாகக் கூடுவது என்று தவறான கருத்தை கொண்டுள்ளீர்கள். ''சமன்வயம்' என்பது பன்மையில் ஒருமையைக் காண்பதேயாகும். (அநேகத்துவத்தில் ஏகத்துவம் காண்பது) ''பாவத்வைதம்'' ''க்ரியாத்வைதம்'' ''பதார்த்தாத்வைதம்'' என்று மூன்று விதமாகவும் அத்வைதத்தைக் காணவேண்டும். அதாவது, மனோபாவம் செய்யும் செயல், காணும் பொருட்கள் எல்லாவற்றிலும் "இரண்டாவது இல்லை, ஒன்றே தான் எல்லாம்'' என்ற தத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உதாரணமாக இது ஒரு துணி. இதை நூலில்லாமல் பஞ்சிலிருந்து தான் பெறமுடியும், ஆகவே பஞ்சு, நூல் துணி மூன்றும் ஒன்றே. இதில் 'பஞ்சு' என்பது உபாதானக் காரணம் எனப்படும். நூல் நூற்பவரும் நூற்கும் பணியும் நிமித்தகாரணமாகும். இந்த டம்ளர் வெள்ளியினாலானது இதற்கு வெள்ளி உபாதானகாரணம். இதைச்செய்த கொல்லர் நிமித்த காரணமாவார். உபாதான காரணமின்றி நிமித்தகாரணம் மட்டுமே இந்த டம்ளரை உருவாக்க முடி

யாது. 'பாவ' அத்வைதம் என்பது ஒரு பொருளில் உள்ள அடிப்ப டையை உணர்ந்து மேற்கூறிய உதாரணத்தில் குறிப்பிடப்பட்ட பஞ்சு, நூல், துணி, மூன்றையும் ஒன்றாக பாவிப்பதேயாகும்.

எத்தனை விதமான காரியங்களை செய்து வந்தாலும் 'நான் செய்கிறேன்' என்ற உணர்வுடன் தான் எல்லோரும் செய்கின்றனர். ஆனால் பணிசெய்தல் இறைவனால் தான் சாத்தியமாகிறது. அதன் பலன் இறைவனையே சேரும் என்று தெய்வார்ப்பணமாக எல்லா பணிகளையும் செய்தால் அதுவே 'கிரியா' அத்வைதமாகும்.

அடுத்து, 'பதார்த்த' அத்வைதம் என்பது மனிதர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். எல்லா ஜீவராசிகளும் மனிதர்களுட்பட பஞ்ச பூதங்களாலான சரீரத்தை உடையவைகளே. 'சப்தம்' அதாவது பேசு வது ஆகாயத்தைச் சார்ந்தது. சுவாசிக்கும் செயல் காற்றின் ஸ்வ ரூபம். உடலில் உஷ்ணத்தை நிலைத்திருக்கச் செய்வது 'அக்னி' அல்லது 'தீ' எனும் சக்தியின் பணி. உடலில் உள்ள திரவப் பொருட் களும் கழிக்கப்படும் சிறுநீர் வியர்வை போன்றவையும் 'நீர், எனும் மூலப்பொருளைச்சார்ந்தது. உடலின் உறுப்புக்களனைத்துமே 'பிருத்வி, அல்லது 'பூமி' எனும் மூலப்பொருளின் வடிவமே. பஞ்சபூதங்கள் பர மாத்வின் ஸ்வரூபங்களே அல்லவா? அவையாவும் ஒவ்வொரு உடலி லும் உள்ளன. எல்லாமே இந்த பஞ்ச பூதங்களான தாகையில் எல் லாம் ஒன்றே என்ற 'பதார்த்த, அத்வைதத்தை உணர்கிறோம். பெயர்களும் உருவங்களும் வேறுபடுகின்றனவேயன்றி மூலப்பொருட் கள் எல்லா உயிரினங்களிலும் ஒன்றேதான். "ஏகோவசி சர்வபூத ரந்தராத்மா" என்ற வாக்கியப்படி எல்லா ஜீவராசிகளிலும் குடி கொண்டிருக்கும் அந்தராத்மா ஒன்றே. அகில உலகுமே அத்வைதத் தத்துவத்துக்கு உட்பட்டதே. "ஏகம் ஏவ அத்விதீயம் பிரம்மா,' பிரம்மம் ஒன்றேயன்றி இரண்டாவது எதுவுமில்லை என்பதேயுண்மை. இதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் பண்டைய முனி வர்களும் ஞானிகளும் அளித்துள்ள அனுபவ வழிமுறைகளை நன்கு ணர்ந்து பின்பற்ற வேண்டும். வேதங்களுக்கும், பிரம்ம சூத்திரம் போன்ற தலைசிறந்த தத்துவ நூல்களுக்கும் சரியான முறையில் விளக்கம் கொடுத்து நற்போதனை செய்பவர்கள் இல்லாமற் போன தால் பின்தங்கி விட்டோம்.

## போதகர்கள் நெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்:-

**பிரேமஸ்வரூபிகளே,**

எல்லாவற்றிற்கும் அடிப்படை பிரேமை தானென்பதை நினைவில் கொள்ளுங்கள். இன்று இந்த வேதநூல்களைப் பற்றி விரிவுரையாற்றுபவர்கள் போதிப்பவர்கள் அதில் காணும் உபதேசங்களை தாங்களும் பின்பற்ற வேண்டுமெனும் முக்கிய நியதியை மறந்து விடுகின்றனர். பிறருக்கு உபதேசம் செய்வதற்கேதான் இவையாவுமென அவர்கள் எண்ணிவிடுகின்றனர். அதனால் தான் இன்றைய போதர்களின் உபதேசங்களுக்கு எவ்வித மதிப்பும் இல்லாமல்போய்விட்டது.

பிறருக்கு உபதேசம் செய்பவர் முதலில்தான் நன்கு கற்றுணர்ந்து, அனுபவித்து, ஆனந்தித்து தாம் பெற்ற இன்பம் பிறரும் பெற வேண்டுமெனும் நல்ல குறிக்கோளுடன் போதனை செய்யவேண்டும். அப்படிப்பட்ட சிறந்த அனுபவ போதகர்கள் இல்லாததால் தான் இன்று நாட்டில் நாத்திகவாதம் மேலோங்கி வருகிறது.

மனித மேம்பாட்டுக் குணங்கள் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை என்று கூறிக்கொண்டே இருப்பதில் அர்த்தமில்லை. தூய்மையானவைகளையே எண்ணி, எண்ணியதையே நாவினால் பேசி, அதையே செயலாக்க வேண்டும். எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றாகவே அதுவும் நன்றாகவே இருத்தல் வேண்டும். இதுவே மேம்பாட்டுக்குணம். உண்மையான மனிதத் தன்மையும் இதுவே. ஆனால் இன்று நாம் பொதுவாக இதைக்காண முடிவதில்லை.

## எண்ணம் சொல் செயல் ஒன்றாயிருத்தல் அவசியம்:-

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி செயல் மற்றொன்றாக இயங்கும் மனிதர்களையே அதிகமாகக் காண்கிறோம். தெய்வத்துவம் பெற விழைபவர்கள் முதலில் ''ஏகத்துவம்'' என்ற வேற்றுமையில் ஒற்றுமையைக் காண முயலவேண்டும். பிரபஞ்சமே பரிபூர்ணமாக பரம் பொருளின் வடிவமே. இதில் எந்தவிதத்திலும் குறைவு என்பதே இல்லை. பரிபூர்ணத்திலிருந்து வந்து பரிபூரணமாக விளங்

குவதே இந்தப் பிரபஞ்சம். பரிபூரணத்திலிருந்து இந்த பௌதிக உடலை எடுத்து விட்டாலும் மீதி இருப்பதும் பரிபூரணமான ஆத்மாவே. "பூரணமத: பூரணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவ விசிஷ்யதே" என்ற வேதவாக்குப்படி அதுவும் பூர்ணம், இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்துவிட்டால் மிஞ்சி இருப்பதும் பூர்ணமே. நாம் அனுபவிப்பதும்,, மீதி இருப்பதும், எல்லாமே முழுமைதான். ஏனென்றால் எல்லாமே பரிபூரணனான பரம்பொருளின் வடிவமே. "தேகபிராந்தி," அதாவது சரீரத்தைப் பற்றிய பற்றுதலினால்தான் இதை நாம் உணர முடிவதில்லை. சரீரத்தினால் பற்பல பணிகள் நாம் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் இந்த செய்கைகளுக்கும் ஆத்மாவுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. ஆத்மா என்பது "பிரக்ஞானம்,,(Constant Integraed Awareness) தான். இந்த பிரக்ஞானமென்பது உடலிலும் உடலின் பற்பல உறுப்புக்களிலும் வாக்கிலும் செய்கைகளிலும் மனத்தின் எண்ணங்களிலும் எல்லாவற்றிலும் வியாபித்திருப்பது. இவைகள் ஒன்றுக்கொன்று மிக்க அன்யோன்யமான தொடர்பு கொண்டுள்ளன.



நூலாசிரியர் :

**திரு. சு. சிவதாஸ்,** Dip-in-Eng; Eng. Sp. Trd.

(யா / கனகரத்தினம் ம. ம. வி.)

**விலை ரூபா: 22.00**